
Registered as a News Paper in Sri Lanka | දිනමුරසු වාරමලර් | பக்கம் 24 ரூபா 30.00
பெப்ரவரி 19 - 25, 2015

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1106



## அரசியல் சதிராட்டம் ஆரம்பம்



### ஜனாதிபதியின் இந்திய விஜயம்



## கிழக்கு முதலமைச்சரின் முதன்மைச் சவால்கள்

## தெளிவில்லாத புதுக்குடியிருப்பு தேர்தல்

## காலையில் உள்ளங்கையைப் பார்ப்பது ஏன்?

நாம் நமது அன்றாடப் பணிகளைச் செய்வதற்கு கைகள் மிகவும் பயன்படுகின்றது. கைகளின் உதவி இல்லாமல் எந்த ஒரு காரியத்தையும் செய்யமுடியாது. செயல்களுக்குரிய புலன்களில் கைகளுக்குத் தனி இடம் உண்டு. இறையுருவத்தை வணங்க, புஷ்பத்தை அள்ளிச் சமர்ப்பணம் செய்ய கைகள் உதவும். கைகளை கடவுளுக்குச் சமானமாகச் சொல்கிறது வேதம். கையின் நுனியில் அலைமகளும், நடுவில் கலைமகளும் அடிப் பக்கத்தில் கோவிந்தனும் இருப்பதாகப் புராணம் சொல்லும். ஹஸ்தரேகா சாஸ்திரம் கையை வைத்து உருவானது. அறிவு, செல்வம், ஆன்மீகம் ஆகிய மூன்றையும் பெற, காலையில் எழுந்ததும் கைகளைப் பார்க்கவேண்டும். அத்துடன்,

கராக்ரே வஸதெ லஷ்மீ கரமத்யே ஸரஸ்வதி
கரமூலேது கோவிந்த: ப்ரபாதெ கரதர்சனம்

என்ற ஸ்லோகத்தைக் கூறவேண்டும். கையைத் தலையணையாக வைத்து உறங்கும் நமக்கு, விழித்ததும் அதைப்பார்ப்பது எளிது. நல்ல நடைமுறைகளைப் பின்பற்றினால் நன்மைகள் பல உண்டு.

ஆன்மீகம்

## உள் இருக்கும் தீமைகள் !

இயேசுவின் காலத்தைப் போலவே, இன்றும் வெளியே இருந்து உள்ளே செல்பவைதான் மனிதரைத் தீட்டுப்படுத்துகின்றன என எண்ணும் கூட்டம் இருக்கிறது. எனவேதான், சிலவற்றை உண்ணக்கூடாது, சிலரைப் பார்க்கக்கூடாது, சிலவற்றை அணியக்கூடாது, கட்டடங்கள் எந்தத் திசைநோக்கி இருக்கவேண்டும், எந்தத் திசையில் இருக்கக் கூடாது... எனச் சிந்திக்கின்ற, நம்புகின்ற, போதிக்கின்ற பலரை இன்றும் சந்திக்கிறோம். தொலைக்காட்சி அலைவரிசைகளில் விளம்பரம் செய்யும் அளவுக்கு இத்தகைய மூடநம்பிக்கையாளர்கள் துணிவுடன் இருக்கின்றனர்.

ஆனால், இயேசுவின் போதனை தெளிவானதாக இருக்கிறது. மனிதரின் உள்ளே இருந்து வெளியே வருபவைதான் மனிதர்களை மாசுபடுத்துகின்றன. குறிப்பாக, பரத்தைமை, களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், வஞ்சகம், காமவெறி, பொறாமை, பழிப்புரை, செருக்கு, மதிகேடு என பன்னிரண்டு தீமைகளை ஆண்டவர் பட்டியலிட்டுக் காட்டுகிறார். இவையே நம்மைத் தீட்டுப்படுத்துகின்றன. பாவத்திற்கு இட்டுச் செல்கின்றன. இவை நமது உள்மனத்தில் குடியிருக்கும் தீமைகள். இவை பற்றி எச்சரிக்கையாய் இருப்போம். பிறர் நம்மைக் கெடுத்து விடுவார்கள் என்று அஞ்சாமல், நாமே நம்மைப் பாவத்தில் வீழ்த்திவிடாதபடி மன்றாடுவோம்.

## விசுவாசிகளின் கடமை

இப்படி கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம் அல்லவா? இதன் கருத்தை ஒவ்வொருவரும் அறிந்திருப்பது அவசியம். அதனை அவதானியுங்கள் இங்கே.


எமது சகல கடமைகளும் அல்லாஹ்வுக்கு சொந்தமானவையே. எமக்கு சகலவற்றையும் தந்த அவனே அவற்றை எடுத்துக் கொள்வான். அவனுடைய படைப்புக்களான நாமும் அவனிடமே மீளவேண்டும். நாம் சகல விவகாரங்களிலும் அல்லாஹ்வின் நியதிக்கு தலை வணங்குவதோடு அவனுடைய தீர்ப்புக்களால் திருப்தி அடைதலும் வேண்டும். அல்லாஹ்வின் சகல செயல்களிலும் ஒரு குறிக்கோளும், மதிநுட்பமும், நீதியும் இருக்கும். அவன் கூடுதலான நன்மையை நாடியே செயற்படுகின்றான். அல்லாஹ்வின் நடவடிக்கைகளை மறுக்காமல் ஏற்பதே அவனை விசுவாசிப்பவர்களின் கடமை.

சரி. இனி எமது வாழ்வில் பயங்கரமான துயரச் செய்திகளை கேள்விப்பட்டால், அல்லது நஷ்டமோ, துயரமோ அடைந்தால், அல்லாமல் திடீரென ஓர் துரதிர்ஷ்டம் எம்மை சூழ்ந்துகொண்டால் உடனே கூறுங்கள்.

"இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜி ஊன்"

எம்.சி.கலீல், கல்முனை - 05

## கவிதைப்போட்டி 1103



● பாராட்டுக்குரியது ●

### "பத்தி எரியும் வயிறும் பத்தாத அடுப்பும்"

கோடிகள் விளைந்த
வேரடி மண்ணில்
பாவிகள் நுழைந்தனரோ?
தாயே ஆன்மாவின் தேடுதலின்
தவிப்படக்க நீர்
எரிக்கும் நீரிலும் நெருப்பிலும்
உயிர் கொதிப்பு தெரிகிறது!
ஒற்றை பாளை வைத்து உன்தன்
வயிற்றெரிச்சலை கொட்டிவிடு
அடுப்பு மூளும்!

மண்டைதீவு, மகிழ்நன்




## கவிதைப் போட்டி இல 1106



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 02. 03. 2015
கவிதைப் போட்டி இல. 1106 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### விளம்பரம்

அம்மா
அடுப்பு மூட்டி
பானையில் வைத்திருக்கும்
பானம் என்ன?
வெற்றுப் பானை
விளம்பர அடுப்பு இது.

எம்.சி.கலீல், கல்முனை -05

### அக்கினி

அகதிகளாக வாழும்
வாழ்க்கை - இங்கே
அமைதியாக தெரிந்தாலும் - இவள்
அகத்துக்குள்ளே தினம் எரியும்
அக்கினியை மட்டும் யாரும்
அறிவதில்லையே இங்கு.

இளம்பிறை, புத்தளம்.

### ஏழையின் விடிவு

நம் நாட்டில் இன்று
அத்தியாவசியப்
பொருட்களுக்கு
அதிரடியாகக்
குறைக்கப்பட்டது
விலை - அதனால்
இந்த ஏழையின்
வீட்டில் நீண்ட
காலத்திற்குப்
பின்பு
கொதிக்கிறது
உலை.

சு.ஜெயரூபன், பருத்தித்துறை.

### கொடுமை

அடுப்பறைக்குள்ளே
அக்கினி மூட்டி
அரிசி பானை ஏற்றும்
கைகள் - இங்கே
அகதிகளாக வெளியினிலே
அடுப்பேற்றி
அனுபவிக்கும்
வாழ்க்கையும்
ஒரு கொடுமை.

இளம்பிறை யோகன், புத்தளம்

### வெறுமை

ஒரு பிள்ளை
கனடாவில்
மற்றது சுவிஸில்
பெற்ற தாய்க்கோ
பொங்கியுண்ண
அரிசியில்லை
வெறும் பானை அடுப்பில்.

அ.சந்தியாகோ, கண்டி.

## உங்கள் பக்கம்

### நானாட்டான் வீதிக்கு விமோசனம் உண்டா?

மன்னார், நானாட்டன் வீதி புனரமைக்கப்படாமல் இருப்பதால் மக்கள் பெரிதும் அவதியுறுகின்றனர். இவ்வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

நானாட்டானில் இருந்து மடுக்கரை கிராமத்துக்குச் வீதி பாரியளவில் தேமடைந்துள்ளதா[ல்] பாடசாலை மாணவர்கள் பாதிப்படைந்துள்ளனர். போக்குவரத்து சேவை பல மாதங்களாக இல்லாமல் இருப்பதால் மாணவர்கள் விசனமடைந்துள்ளனர்.

மடுக்கரை கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் சுமார் 4 கிலோமீற்றர் நடந்தே பாடசாலைக்கு செல்கின்றனர். அதனால் பாடசாலைக்கு நேரம் தவறி செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப் படுகின்றது. மேலும் வயோதிபர்கள், கர்ப்பிணிப் பெண்கள் எனப் பரதரப்பட்டவர் களும் இவ்வீதியால் செல்ல முடியாத நிலை காணப்படுகின்ற[து].

மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தபோதும் இவ்வீதி புனரமைக்கப்படவில்லை. இதனால் இவ்வீதியை புனரமைத்துத் தருமாறு உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

நானாட்டான் மக்கள்.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com


### அமைதியின் சொற்கள்

இனிமையான ஒரு உண்மை. உங்களிற்குள்ளே துடித்துக் கொண்டிருக்கின்றது. அதை அறிந்து கொள்ளுங்கள். அதைப் புரிந்துகொள்ளுங்கள். நீங்கள் உயிரோடு இருக்கும்பொழுதே அதை ஏற்றுக் கொள்ளுங்கள்.

இணையத்தளம்: www.wopg.org

- பிரேம் ராவத்

## அறிவுக் களஞ்சியம்

பல நல்ல நல்ல தகவல்களை சுமந்து வருகின்றாய். எனக்கு ரொம்பவே பிடித்திருக்கிறது. உன்னை பார்க்கும்போது மனதுக்கு ஒரு திருப்தியாகவும், அறிவு கலவையும் கலந்து சிறப்புற திகழ்கின்றாய்.

பாப்பா முரசு தகவல்கள் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. என் வகுப்பில் கற்கின்ற மாணவர்களும் பாப்பா முரசு தகவல்களை படித்துவருகின்றார்கள். அதுதான் முரசுக்கு கிடைத்த வெற்றி. மாணவர்களின் கல்வி விருத்திக்கு இவ்வாறான தகவல்களை முரசு கட்டாயம் வழங்கவேண்டும்.

எம்.சர்மிலா, கொக்குவில்

## வாசகர்சாலை

### நம்பிக்கை!

அரசியல் தொடங்கி அறிவியல் வரை அருமையாக உள்ளது. அரசியல் கட்டுரைகள் எப்போதும் உண்மைகளை உரைப்பவையாகவும், சமூகத்தை, மக்களை நல்வழிப்படுத்துபவையாகவும் இருக்கவேண்டும். முரசு அதை நிறைவேற்றி வந்தாலும் ஒரு மாற்றம் ஒன்று தேவையே. அதை முரசு செய்யும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

என்றுமே முரசு வாசகர்களின் நலனில் அக்கறை உள்ளது என்பதை நான் அறிவேன்.

என்.கானன், வாகரை

### அறிவுப்பசிக்கு தீனிபோடுகிறது!

பலதரப்பட்ட சுவையான அம்சம் முரசில் தவளுகின்றது. அதனால்தான் சூடு, சுவை, சுவாரசியம் குன்றாமல் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இடி அமீன் மீள்பிரசுரம் செய்தாலும் அதை இப்போது வாசிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கின்றது.

குறுக்கெழுத்து பிரமாதம். அதை வாழ்த்துவதற்கு வார்த்தைகளே இல்லை. கடினமானதாகவும், இலகுவாகவும் அறிவுப் பசிக்கு தீனிபோடுவதாகவும் உள்ளது. முரசை வாங்கியவுடன் உடனே குறுக்கெழுத்தைத்தான் நான் முதலில் செய்ய ஆரம்பிப்பேன்.

ச.சாமிலி, காலி.

# வடக்கு முதல்வரின் இரட்டை வேடம் அம்பலம்!

## சாடுகிறார் எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசா

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் அவர்களுடைய இரட்டை வேடத்தை வெளிப்படுத்துவதாக வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சாடியுள்ளார்.

இதுதொடர்பில் எதிர்கட்சித் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, இலங்கை அரசின் இனப்படுகொலை தொடர்பாக அண்மையில் வடமாகாண சபையில் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஜனாதிபதி சிறிசேனவிற்கோ அல்லது அவரின் அரசிற்கோ எதிரானதல்ல எனவும் முன்னைய அரசுகளையே, குறிப்பாக ராஜபக்ச அரசை, குறிவைத்து கொண்டுவரப்பட்டதாகவும் முதலமைச்சர் சீ.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். கடந்த பன்னிரெண்டாம் திகதி ஜனாதிபதி சிறிசேன அவர்களின் அழைப்பினைத் தொடர்ந்து மேற்படி தீர்மானம் தொடர்பில் விளக்கமளிக்கும்போது வடமாகாண முதலமைச்சர், ஜனாதிபதியின் கையைப் பிடித்து, வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தற்போதைய அரசுக்கு எதிரானதல்ல என்று விளக்கமளித்ததாக ஊடகச் செய்திகளில் இருந்து அறியக் கிடைக்கிறது.

முதலமைச்சர் விக்கினேஸ்வரன் குறித்த தீர்மானத்தை சபையில் சமர்ப்பித்து, அதற்கு விளக்கமளித்து உரையாற்றும்போது, தற்போதைய அரசுமீதான நம்பிக்கையீனத்தையும், புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின்போது, அவர் தமிழ் மக்களின் கோரிக்கைகளை தட்டிக்கழித்ததையும், பிரதமரின் மருமகனான தற்போதைய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் வடக்கு மாகாணத்துக்கு வருகைதந்து காணி, இராணுவக்குறைப்பு தொடர்பாக வெளியிட்ட கருத்துக்களும் தமக்கு பலத்த ஏமாற்றத்தையும், விசனத்தையும் ஏற்படுத்தியதாகவும், இவற்றையெல்லாம் கவனத்தில்கொண்டே பொருத்தமான நேரத்தில் இந்தத் தீர்மானத்தை கொண்டுவந்துள்ளதாகவும் கூறியிருந்தார்.

தமிழ் ஊடகங்களுக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் இவ்வாறு உணர்ச்சிபொங்க உரையாற்றிய முதலமைச்சர், தீர்மானத்தை நிராகரிப்பதாக மத்திய அரசுகூறி, விளக்கம் கேட்டபோது, தீர்மானம் தற்போதைய அரசுக்கு எதிரானதல்ல என்றும் முன்னைய அரசுக்கு எதிரானது என்றும் தனது நிலைப்பாட்டைத் தானே மறுத்திருப்பதானது தமிழ் மக்களிடம் ஒன்றையும், மத்திய அரசுகளிடம் வேறொன்றையும் கூறி காலங்காலமாக தமிழ் மக்களை ஏமாற்றி அழிவுப்பாதையில் இழுத்துச்செல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நாடகங்களில் ஒன்றாகும்.

மக்களை உசுப்பேற்றி அரசியல் நடத்தும் இவர்கள் மத்திய அரசுடன் தமது சுயதேவைகளுக்காக நெருக்கமான உறவுகளை பாதுகாத்து வருவதையே நாம் ஏற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

---

## பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கட்டப் பஞ்சாயத்து?



மகளிர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் கட்டப்பஞ்சாயத்து மற்றும் மிரட்டல்களில் ஈடுபட்டுவருவதான குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளதாகவும் இதுவரையில் ஐந்திற்கும் அதிகமான காவல் நிலையங்களுக்குச் சென்று அங்கு காவல்துறை அதிகாரிகள் முன்னிலையில் பொதுமக்களை அச்சுறுத்திய சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகவும் பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் குளோபல் தமிழ் இணைய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.


குறித்த ஊடகச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பிரதியமைச்சர் விஜயகலாவின் உறவுமுறையான யுவதி ஒருவர் இளைஞர் ஒருவருடன் காதல்வயப்பட்ட நிலையில் தலைமறைவாகியுள்ளார். இதனை அடுத்து இளைஞரின் வீட்டுக்கு சென்ற விஜயகலா அங்கிருந்த இளைஞனின் வயோதிபத் தாயாருக்கு மிரட்டல் விடுத்துள்ளதாக இளைஞனின் தாயார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கோப்பாய் பொலிசாருக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் யுவதி தன்து மனப்பூர்வமான சம்மதத்துடன் இளைஞனைத் திருமணம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், தொடர்ச்சியான மிரட்டல்களை அடுத்து அவர்கள் தலைமறைவாகி இருக்கும்நிலையில் கோப்பாய் காவல் நிலைபத்திற்கு அழைக்கப்பட்ட இளைஞனின் தாயை பிரதி அமைச்சர் விஜயகலா தாக்க முற்பட்டுள்ளதாகவும் குறித்த ஊடகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

# தெளிவில்லாத புதுக்குடியிருப்பு தேர்தல்



முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுரைப் பற்று மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் 28ஆம திகதி நடைபெறவுள்ளது. குறித்த தேர்தலுக்கான பிரசாரப் பணிகள் யாவும் எதிர்வரும் 25 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுசெய்யப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டு உள்ளது.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் அழிவுகள் முழுவதையும் சுமந்து முற்றுமுழுதாக அழிக்கப்பட்ட பிரதேசங்களான புதுக்குடியிருப்பு, கரைதுரைப்பற்று ஆகிய பிரதேசங்களில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டு அவர்கள் தங்களது வாழ்வாதாரங்களை மீளவும் கட்டியெழுப்பி வருகின்ற சூழலில் குறித்த பிரதேச சபைகளுக்கான தேர்தல் நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டு இருக்கின்றது.

ஏற்கனவே நாட்டின் ஏனைய பிரதேசங்களின உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் 2011 காலப்பகுதியில் நடைபெற்றபோது மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்குறித்த சபைகளுக்கான தேர்தலையும் நடத்துவதற்கு அப்போதைய அரசாங்கம் தீர்மானிதது இருந்தது. அதனடிப்படையில் வேட்பு மனுக்கள் கோரப்பட்டிருந்தன.

எனினும் அன்றைய காலகட்டத்தில் குறித்த பிரதேங்களில் மீள்குடியேற்றங்கள் பூரணப்படுத்தப்படாதிருந்தமையினால் தேர்தல் ஒன்றை நடாத்துவதன் ஊடாக அப்பிரதேச மக்கள் முழுமையான பங்களிப்பை பெற்றுக்கொள்ள முடியாது தேவையற்ற அசௌகரியங்களுக்கு வழிவகுக்கும் என்று பல்வேறு விமர்சனங்கள் எழுந்ததை அடுத்து குறித்த பிரதேச சபைகளுக்கான தேர்தல் அப்போது பிற்போடப்பட்டிருந்தது.

இந்நிலையில் தற்போது அப்பிரதேசங்களில் ஓர் சுமூகநிலை ஏற்பட்டுவருகின்ற நிலையில் அவற்றின் தேர்தல்களை நடாத்தி குறித்த சபைகளை மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கவேண்டும் என்ற புதிய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பிற்கமைய தேர்தல்களை நடாத்துவதற்கான ஆயத்தப் பணிகளை தேர்தல் ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆனால் இத்தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் மீளக்கோரப்படாத நிலையில் 2016 ஆம் ஆண்டு வேட்பு மனுக்களின் அடிப்படையிலேயே தேர்தல் நடைபெறவுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. இது அரசியல் கட்சிகளிடையேயும், வாக்காளர்களிடையேயும் சிறுகுழப்பத்தை உண்டு பண்ணியிருக்கின்றது.

அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில் 2011ஆம் ஆண்டுக்கும் தற்போதைக்கு இடையில் பலமாற்றங்களைச் சந்தித்துள்ளனர். 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீள்குடியேற்றம் பூரணப்படுத்தப்படாத நிலையில் குறித்த பிரதேசத்தில் கட்சிகளின் அரசியல் செயற்பாடு மட்டுப்படுத்தப்பட்டவையாவே இருந்தன.

அப்போது தங்களின் சொந்த வாழ்க்கை, குடும்பத்தின் மீள்கட்டுமானம் என்பவற்றினை முன்னிலைப்படுத்தியிருந்தனரே தவிர அரசியல்ரீதியான சமூகநலன் கொண்ட செயற்பாடுகளை முன்னிலைப்படுத்தியிருக்கவில்லை. இதனால் அப்போது சில கட்சிகள் வேட்புமனுக்களைத் தாக்கல்செய்வதற்கு வேட்பாளர்களைக் கண்டுபிடிப்பதே பெரும் சவாலாக எதிர்கொண்டனர்.

எனினும், வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படவேண்டும் என்ற இக்கட்டான சூழ்நிலை காணப்பட்டதால் வேட்பாளர் தெரிவுகள் ஆரோக்கியமானதாக, தகுதியானதாக அமையவில்லை என்ற கருத்து அப்போது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்த கட்சித் தலைமைகளிடமே காணப்பட்டது.

ஆனால் இன்று நிலைமை மாறியிருக்கின்றது. புத்திஜீவிகள் கல்வியாளர்கள் என ஏராளமானவர்கள் சமூகம்சார்ந்த சிந்தனைகளோடு தங்கள் எதிர்பார்ப்புக்களை சமரசம் செய்துகொள்ளக் கூடிய கட்சிகளோடு தங்களை இணைத்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களில் பலர் தாம்சார்ந்த பிரதேசங்கள், நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கு ஈடு கொடுக்கும்வகையில் முன்னேறவேண்டும் என்ற இதயசுத்தியுடன் செயற்பட்டுவருகின்றனர்.

அவ்வாறானவர்கள் தேர்தலை நிறுத்துவதற்கு வழி ஏற்படுத்தாதவகையில் தேர்தல் திணைக்களத்தில் அறிவிப்பு அமைந்துள்ளதாக சில அரசியல் கட்சிகளைச் சேர்ந்த செயற்பாட்டாளர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். 2011இல் வேட்பு மனுக்களைத தாக்கல் செய்த பல வேட்பாளர்கள் தமது சொந்தத் தேவைகளுக்காக குறித்த இடத்தைவிட்டு வெளியேறியிருக்கின்றன. அவர்களில் சிலர் வேறு நாடுகளுக்கு தொழில்நிமித்தமாகவும் வேறு சில காரணங்களுக்காகவும் சென்றிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான நிலையில் பிரசாரங்களை முன்னெடுப்பதும் மக்களிடம் வாக்குக் கேட்டுச்செல்வதிலும் அரசியல் கட்சிகளும் செய்கைக் குழுக்களும் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருவதாக அங்கிருந்து தகவல்கள் கிடைக்கின்றன.


அதேவேளை மக்களுக்கும் இது தொடர்பில் தெளிவில்லாத் தன்மையே காணப்படுகின்றது. சில கட்சிகளைப் பொறுத்தவரையில வேட்பாளர்களாக அறிமுகப்படுத்தப்படுபவர்களுக்கும் தம்மத்தியில் அரசியலில் ஈடுபட்டு பரீட்சயமானவர்களுக்குமிடையே வேறுபாட்டை உணர்கின்றனர்.

குறித்த ஒரு கட்சியின் கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் மக்கள் மத்தியில் எடுத்துச்சென்று அக்கட்சிமீது அபிமானத்தை ஏற்படுத்திய செயற்பாட்டாளராக ஒருவர் இருக்க, வேட்பாளராக முகமறியாத இன்னொருவர் இருக்கின்றார் என மக்கள் கூறுகின்றனர்.

இவ்வாறான குழப்பங்கள் மக்கள் தங்களுக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்வது குழப்பங்களை ஏற்படுத்தும் என்பதே அனைவரினதும் கவலையாக இருக்கின்றது.

---

# தவக்காலம்





**தவக்காலம்** என்பது கிறிதவர்களின் வழிபாட்டு ஆண்டில் ஒரு முக்கியமான காலகட்டம் ஆகும். இது சாம்பல் புதன் என்றும் திருநீற்றுப் புதன் என்றும் வழங்கப்படுகின்ற நாளிலிருந்து கிறித்து சாவிலிருந்து உயிர்பெற்றெழுந்த நிகழ்வைக் கொண்டாடும் உயிர்த்தெழுதல் ஞாயிறுவரை நீடிக்கின்ற நாற்பது நாள் காலத்தைக் குறிக்கும். இவ்வாண்டின் புனித தவக்காலம் 18.02.2015 அன்று ஆரம்பமாகி இருக்கிறது.

தவக்காலத்தின்போது கிறித்தவர்கள் இறைவேண்டல், தவமுயற்சிகள், தருமம் செய்தல், தன்னொறுத்தல் போன்ற நற்செயல்கள் புரிய ஊக்குவிக்கப்படுகிறார்கள் (காண்க: மத்தேயு 6:1-18). இயேசு துன்பங்கள் அனுபவித்து, மனிதரின் மீட்புக்காகச் சிலுவையில் இறந்தார் என்பதால் அவர் அனுபவித்த துன்பங்களில் தாமும் பங்குபெற கிறித்தவர்கள் தவக்காலத்தின்போது முன்வருகிறார்கள். சிலுவையே வாழ்வுக்கு வழி என்னும் நம்பிக்கை இருந்து இச்செயல் பிறக்கிறது. மேலும், பிறருக்குத் தம்மால் இயன்ற உதவிசெய்து, பிறரன்புப் பணிகளில் ஈடுபடவும் கிறித்தவர்கள் தவக்காலத்தின்போது தம்மையே ஈடுபடுத்துகிறார்கள்.

மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய நற்செய்தியாளர்கள் இயேசு பாலைநிலத்தில் நாற்பது நாள்கள் இரவும் பகலும் நோன்பிருந்தார் என்னும் தகவலைத் தருகின்றனர். இவ்வாறு இயேசு நோன்பிருந்ததைக் கிறித்தவர்களும் தம் வாழ்வில் கடைப்பிடிக்க அழைக்கப்படுகிறார்கள்.

இயேசு நோன்பிருந்தபோது அலகை அவரைச் சோதித்தான். தம் பசியை ஆற்ற இயேசு கல்லை அப்பமாக மாற்றலாம் என்றும், தன்னை வணங்கினால் உலக அரசுகளை அவருக்குக் கொடுப்பதாகவும், ஜெருசலேம் கோவிலின் உச்சியிலிருந்து கீழே குதித்தாலும் அவருக்குத் தீங்கு நிகழாமல் கடவுள் காப்பார் என்றும் கூறி, மூன்று முறை அலகை இயேசுவைச் சோதித்தான். இயேசு தம்மை மாயாஜாலம் நிகழ்த்துபவர் போல ஆக்கலாம் என்றும், கடவுளை மறுத்து அலகையை வணங்கலாம் என்றும், கடவுளின் வல்லமைக்குச் சவால் விடலாம் என்றும் வந்த சோதனைகளுக்கு இடம்கொடாமல், அவற்றை முறியடித்து, அலகையை வென்றார் என்று நற்செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறே கிறித்தவர்களும் அலகையின் சோதனையை முறியடிக்க தவக்காலம் ஒரு வாய்ப்பாக அமைகிறது.

தொடக்க காலத் திருச்சபையில் இயேசுவின் உயிர்த்தெழுதல் திருவிழா மைய இடம்பெற்றது. அந்த விழாவை மகிழ்ச்சியோடும் ஆரவாரத்தோடும் கொண்டாடுவதற்கு முன்னால், குறிப்பாக அந்நாளில் திருமுழுக்குப் பெறுவதற்கு முன் ஓரிரு நாட்கள் கிறித்தவர் நோன்பு இருந்தனர். உயிர்த்தெழுதல் ஞாயிறுக்கு முந்திய ஞாயிறு பாடுகளின் ஞாயிறு எனக் கடைப் பிடிக்கப்பட்டது. அந்த வாரத்தின் புதன், வெள்ளி ஆகிய நாட்களில் நற்கருணைக் கொண்டாட்டம் நிகழ்த்தப்படவில்லை. (5ஆம் நூற்றாண்டு).

பெரிய குற்றம் செய்தவர்கள் கடவுளோடும் திருச்சபையோடும் மீண்டும் நல்லுறவு கொள்வதற்குத் தயாரிப்புக் காலமாக ஆறு வாரங்கள் ஒதுக்கும் வழக்கம் உருவானது. தவத்திற்கு அடையாளமாக உடல்மீது சாம்பல் பூசிக்கொண்டு, சாக்குத் துணி உடுத்துவதும் வழக்கமானது.

5ஆம் நூற்றாண்டுக்குப் பின் எல்லாக் கிறித்தவர்களும் உயிர்த்தெழுதல் திருவிழாவுக்கு நாற்பது நாள்களுக்கு முன் திருநீற்றுப் புதனன்று சாம்பல் பூசத் தொடங்கினர். கடவுள் முன்னிலையில் எல்லாருமே பாவிகளே என்னும் உண்மையை அது உணர்த்தலாயிற்று.

# தினமுரசு



த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3623
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com


## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## தமிழர் வலி அமெரிக்காவுக்குத் தெரியுமா?

இலங்கைமீது ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையகத்தில் பரபரப்பாக விவாதிக்கப்பட்டுவந்த போர்க்குற்ற விசாரணைக்கான வாக்கெடுப்பு நாடகத்தின் அறிக்கை வாசிப்பு ஆறு மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் கூடவுள்ள மனித உரிமைகள் ஆணையகத்தின் அமர்வில் அறிக்கையை அமெரிக்க சமர்ப்பிக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் குரல் கொடுத்துவந்தனர். ஆனால் இலங்கையின் புதிய அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க அறிக்கை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு சூடானிலும் போர்க்குற்றம் நடந்ததாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தில் விவாதிக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. பின்னர் விசாரணைகளுக்கு ஐ.நா சபை முறையாக ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றுகூறி அந்த விசாரணைகளை முன்னெடுத்துவந்த சட்டத்தரணி படோ பென்சொடா போர்க்குற்ற விசாரணைகளை கைவிடுவதாக கூறியிருந்தார்.

அதுபோல் செப்டெம்பருக்கிடையே அமெரிக்காவுக்கு ஏற்றவகையில் இலங்கையின் புதிய அரசின் செயற்பாடுகள் மாற்றமடைந்தால். இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விவகாரத்துக்கு அமெரிக்காவோ. ஐ.நா சபையோ ஒத்துழைப்பு வழங்காமல் அல்லது அக்கறை எடுக்காமல் கைவிடப்படலாம்.

கைவிடப்பட்டால் அதைக் கட்டாயப் படுத்தி விவாதத்துக்கு கொண்டுவரவோ. விவாதத்துக்கு கொண்டுவந்தால் அதை ஒத்திவைப்புக்களுக்கு இடமளிக்காமல் தொடரவோ இலங்கை தமிழ் மக்களுக்கு முடியாது.

போர்க்குற்ற விசாரணையோ. உரிமை மீறல்களோ சர்வதேசத்தின் வேறொரு விதமாகக் கூறினால் அமெரிக்காவின் கரங்களிலேயே தங்கியுள்ளது.

தமிழ் மக்களிடம் காணப்படும் செப்பனிட முடியாத அரசியல் பலவீனமே தற்போதைய கையறு நிலைக்கு காரணமாகும்.

தமிழ் மக்கள் உலகத்திலேயே விசித்திரமானவர்கள். தமது பிரச்சினைகளை சர்வதேசத்திடம் விட்டு விட்டு. தமது அரசியல் அதிகாரங்களை இன்னொரு சாராரிடம் தன்மான உந்துதலில் கொடுத்துவிட்டு. தமது தேவைகளுக்கு இன்னொரு சாராரை நாடிக்கொண்டு. தீர்வுக்கு தென் இலங்கை அரசுகள்மீது குற்றம் சுமத்திக்கொண்டு காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.


இந்த இரண்டும் கெட்டான் நிலைமையை பயன்படுத்திக் கொள்ள ஏற்கெனவே தமிழ் மக்களின் அழிவுகளுக்கு காரணமான ஒரு சாரார் இன்று வீதியில் கோவணங்களோடு குதித்திருக்கின்றார்கள்.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பார்கள். அதுபோல். தெளிவற்றுக்கிடக்கும் தமிழ் மக்களின் அரசியல் தளத்தில் தாமும் தலைவர்களாகிக் கொள்ளும் முனைப்புக்களிலும் சிலர் நேரமொதுக்கி திட்டம் வகுத்துக் கொண்டிருக்கின்றார்கள். 1994ம் ஆண்டு வடக்கில் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்ட ஜனநாயகம் வாழ்க!

மீண்டும் மறுமடலில்
**வந்து கலக்கும்வரை**
என்றென்றும் அன்புடன்,
**ஆசிரியர்.**

# அரசியல் சதிராட்டம் ஆரம்பம்!

## ஜனாதிபதியின் இந்திய விஜயம்!





தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினை தற்போது முக்கியத்துவமற்றுப் போய் விட்டது. மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருக்கும்போது, அவர்மீது போர்க்குற்றத்தையும், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு ஒரு தீர்வையும் வலியுறுத்திவந்த இந்தியா உட்பட்ட சர்வதேச நாடுகள் தற்போது தமது பொருளாதார முதலீடுகள், இரு நாட்டு ஒப்பந்தங்கள் தொடர்பாக மட்டுமே இலங்கையின் புதிய அரசோடு பேச்சுக்களை நடத்துகின்றன.

ஐ.நா போர்க்குற்ற அறிக்கையையும் ஆறு மாதம் ஒத்திவைத்துவிட தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. அப்படியானால் போர்க்குற்ற விசாரணை என்பது தமிழ் மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான முன்னெடுப்பு அல்ல. தாமதிக்கப்பட்ட நியாயம் மறுக்கப்பட்ட நியாயத்துக்குச் சமம் என்று கூறுவார்கள்.

போர்க்குற்ற விசாரணை அரசியல் காரணங்களுக்காக நீண்டகாலத் தாமதத்துக்கு ஒத்திவைக்கப்படுகின்றதென்றால் அவ்விடயத்தில் தமிழ் மக்கள் எதிர்பார்த்த நியாயம் மறுக்கப்பட்டிருக்கின்றது.

இதுவே மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்திருந்தால் அமெரிக்காவின் பாய்ச்சல் எத்தகையதாக இருந்திருக்கும்?, இந்தியாவின் தமிழ் நாட்டில் உள்ள உணர்வாளர் எனும் கூலி நடிகர்களின் ஆர்ப்பரிப்புக்கள் எவ்வாறு இருந்திருக்கும்?, புலம்பெயர்ந்து வாழும் புலி ஆதவாளர்களின் தெருக் கூத்துக்கள் எப்படியானதாக இருந்திருக்கும்?

மகிந்த களத்தில் இல்லை. அமெரிக்காவினதும், இந்தியாவினதும், புலம்பெயர் தெருக் கூத்தர்களினதும் ஆட்டங்கள் அடங்கிவிட்டது. காத்துப் போனவர்களாக சுருங்கிப் போய்விட்டார்கள்.

அப்படி என்றால் தமிழ் மக்களின் பிரச்சினையையும், தீர்வையும் பேசுபொருளாக வைத்திருந்து மகிந்த ராஜபக்ச தான் என்பது புரிகிறது. மகிந்தவுக்கு எதிரான ஆயுதங்களாகவே இவர்கள் தமிழர் விவகாரத்தை பயன் படுத்தியுள்ளார்கள் என்பதை இப்போது எல்லோரும் ஏற்றுக் கொள்ளமுடிகின்றது.

மைத்திரி ஆட்சிக்கு வந்துவிட்டால் அமெரிக்காவுக்கு போர்க்குற்றம் ஒரு பொருட்டான பிரச்சினையில்லை. அமெரிக்காவின் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்த அமெரிக்காவின் அடிமை நாடுகளுக்கு இலங்கை விவகாரம் சுத்தமாக மறந்து போய்விடும்.

இந்த நிலையில் இந்தியா தமிழர் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச்சட்டத்தை முதலில் முழுமையாக அமுல்படுத்துங்கள் என்பதை யாவது தொடர்ந்து வலியுறுத்தும் என்று எதிர்பார்த்த இலங்கை தமிழர்களுக்கு இந்தியா பாரிய ஏமாற்றத்தை பரிசளித்துள்ளது.

இந்தியாவுக்குச் சென்ற இலங்கை ஜனாதிபதியிடம் இந்தியா தனக்குரிய தேவைகளை கச்சிதமாக நிறைவேற்றிக் கொண்டுள்ளது. இரு நாடுகளுக்குமிடையிலான சிவில் பயன்பாட்டுக்கான அணுசக்தி ஒத்துழைப்புக் கட்டமைப்பை ஏற்படுத்துவது, இந்தியாவில் மீண்டும் உருவாக்கப்பட்டுள்ள நாளந்தா பல்கலைக்கழகத்தின் கிளைகளை இலங்கையில் ஏற்படுத்துவது, விவசாயம் - வர்த்தகம் மற்றும் கலாசாரத் துறைகளில் கூட்டுறவை மேம்படுத்துவது, ஆகிய ஒப்பந்தங்களை இரு நாடுகளும் கைச்சாத்திட்டுள்ளன.

இதற்கிடையே இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளை வாயளவில் கலந்துரையாடியதோடு, அவர்களை எல்லைதாண்டாமல் கட்டுப்படுத்துவதாக இந்தியா நம்பிக்கை கொடுக்கவும் இல்லை. கட்டுப்படுத்துங்கள். அவ்விவகாரம் எங்கள் வளத்தையும், எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் மோசமாக பாதிக்கின்றது என்று இலங்கையும் உறுதியாக எதையும் கூறவும் இல்லை.

இதுவே தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் ஊடுருவுகின்றார்கள் என்றால், இந்தியா கடல் நடுவில் பாலம் அமைத்து அதைக் கட்டுப்படுத்த என்ன செய்யலாம் என்று ஆராய்ந்திருக்கும். இலங்கையில் தொழிலை இழந்து, வளத்தைப் பறிகொடுத்து தடுக்க வழியில்லாமல் தவித்துக் கிடப்போருக்கு, அத்துமீறும் இந்திய மீனவர்கள் தீவிரவாதிகள்தான்.

கடலுக்கு அடியில் கேபிள் மூலமாக மின்சாரத்தை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான சாத்தியங்கள் தொடர்பாக ஆராயும் இந்தியாவுக்கு எல்லை தாண்டிவரும் மீனவர்களைத் தடுக்க முடியாதா?.

பொதுவாகவே தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வாக 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு சம்பிரதாயத்துக்கேனும் கூறும் இந்திய மத்திய அரசின் நிலைப்பாடு தற்போது மாறியுள்ளது.

தமிழ் நாட்டில் சில முட்டாள்கள் தற்போது ஊமையாகிவிட்டுள்ளார்கள். சிலர் அறிக்கைவிட்டு கடந்த காலத்தைப்போல் தமது தமிழ் உணர்வை காட்டி இருக்கின்றார்கள். அவர்கள் எல்லோரும் தமது அரசியலையும், வர்த்தகத்தையும் திட்டமிட்டு செய்து கொண்டிருக்கையில், இலங்கை தமிழருக்கு மட்டும்தான் அரசியலில் தந்திரோபாயமும் இல்லை. நம்மைச் சுற்றி நடக்கும் சுயஇலாப சதிராட்டங்களை பகுத்தறிந்து தொடரவேண்டிய பயணத்தை திட்டமிடும் அறிவும் இல்லை.

மாற்றங்களுக்கும், தந்திரோபாய நகர்வுகளுக்கும் தயாராகாத தமிழ் இனத்துக்கு விடுதலை, தேசியம், பாரம்பரியம், சம உரிமை, தம்மைத் தாமே ஆளும் உரிமை என்பதைப் பற்றியெல்லாம் சிந்திக்கவே அருகதை இல்லை என்று சக இன மக்கள் நீண்டகாலமாக கூறியவருவது மீண்டும் மீண்டும் சரியென்றாகிவிடுகின்றது.

ஜனாதிபதி மைத்திரியோடு இந்தியாவுக்கு சென்ற குழுவில் ஒரு தமிழர் சென்றிருக்க வேண்டும். தமிழர் பிரச்சினை இரு நாடுகளுக்கிடையிலான கலந்துரையாடலில் சேர்த்துக் கொள்வதை உறுதி செய்திருக்கவேண்டும். இதையெல்லாம் செய்யத் திராணி இல்லாத சம்மந்தன் புதிய அரசின் தேசிய நிறைவேற்றுச் சபையில் அங்கம் வகிப்பது. ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சரவையில் இடம்பெற விடாது தடுத்து கிளித்தட்டு ஆடுவதற்குத்தானா? என்ற விமர்சனங்களுக்கு கூட்டமைப்பு பதிலளிக்க வேண்டும்.

தற்போதைய அரசியல் மாற்றத்தில் ஓரம் கட்டப்பட்டது மகிந்த ராஜபக்ச மட்டுமல்ல. தமிழ் மக்களும் என்பது தெரிகின்றது. ஜனாதிபதி மைத்திரி இந்தியாவுக்கு போவதற்கு முன்னர் முதற்கட்டமாக வலிகாமத்தில் ஆயிரம் ஏக்கர் நிலங்கள் உரியவர்களிடம் கையளிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. அதிலும் தமிழ் மக்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது.

சீனாவை இலங்கையிலிருந்து ஓரம் கட்டுவதும், இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் பிடி கொடுக்காத மகிந்த ஆட்சியை கவிழ்த்து புதிய ஆட்சி ஒன்றை இலங்கையில் ஏற்படுத்துவதுமே இலங்கை தொடர்பான சர்வதேச பிரச்சினை. அமெரிக்காவோடு இணங்காவிட்டால், சீனாவுடன் நெருக்கமாக இலங்கை சென்றால், இலங்கையில் மனித உரிமை மீறல், போர்க்குற்றம், தமிழர் பிரச்சினை எல்லாம் மறுபிறவி எடுக்கும்.

அமெரிக்காவுக்கு இலங்கை தமிழ் மக்கள் வெறுங்கருவிகள். ஆனால் இந்தியாவுக்கு இலங்கை தமிழ் மக்களின் பிரச்சினையில் தார்மீக பொறுப்புக்கள் உண்டு, தமிழகத்துக்கும் இலங்கை தமிழ் மக்களுக்குமிடையே இரத்த உணர்வுகளும், உறவுகளும் உண்டு. எனவே இலங்கை அரசுகள் தமிழர் பிரச்சினையை தட்டிக் கழித்தாலும் இந்தியா தமிழர்களை மறந்து செயற்படாது என்று நம்பியிருந்த நிலையில், மோடி தமிழில் வாழ்த்துக் கூறியதும், இலங்கை தொடர்பாக அதிக அக்கறை காட்டுவதைப் போல் காட்டிக் கொண்டதும் அரசியல் நாடகம்போல் ஆகிவிட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரியின் இந்திய விஜயம் அவர்கள் மட்டத்தில் வெற்றிகரமாக முடிந்திருக்கின்றது. அடுத்த மாதம் இந்தியப் பிரதமர் மோடி இலங்கைக்கு விஜயம் செய்வார் என்றளவில். அவரின் வருகை எதிர்பார்ப்புக்களைச் சுமந்தபடி தமிழ் மக்கள் காத்திருக்க வேண்டியதுதான்.

அவரின் வருகையை ஒட்டியதாக சிலவேளை காணிகள் மீள ஒப்படைக்கப்படலாம், கைதிகளில் சிலராவது விடுவிக்கப் படலாம். ஒருவேள்ள மோடி வடக்குநோக்கி தரைவழியாக வருகை தந்தால் தற்காலிகமாக ஓமந்தைச் சோதனைச் சாவடியும் சோதனைகள் இன்றி திறந்து விடப்படலாம். மோடி இந்தியா திரும்பியதும் மீண்டும் பாதுகாப்பு கவனங்கள் அதிகரிக்கலாம். ஓமந்தையும் உயிர்பெறலாம்.

இப்படியே இவர்களுக்கு அவர்களும். அவர்களுக்கு இவர்களும் மாறி மாறி காட்சிகளை மாற்றிக்கொண்டே ஆட்சிக் காலத்தை ஒப்பேற்றுவார்கள். இலங்கையின் வரலாறெங்கும் இதுதானே நடந்துவருகின்றது. இவை எல்லாவற்றுக்கும் மருந்தாக தமிழ் மக்கள் தேசியத்தையும், தன்மான உசுப்பேற்றல்களையும் கட்டிப்பிடித்துக்கொண்டும், மரண அறிவித்தல்களுக்கு இடையே செய்தி வாசித்து விண்ணானம் பகிர்ந்தும் திருப்தியடைந்து கொள்வார்கள்.





# புலிகளின் வதை முகாமில்

## மணியம்

வதை 153

அங்கே அந்தக் கால கட்டத்தில் முஸ்லீம் மக்கள் தான் கூடுதலாக வசித்தனர். அந்தக் கிராமத்தில் தெருவோரத்தில் மிகப்பெரிய அரசாங்க களஞ்சியசாலை ஒன்றும் இருந்தது.

நாம் அந்தக் களஞ்சிய சாலையை அடைந்ததும், வீதி அருகில் இருந்த கிணற்றில் எமது தாகம்தீர தண்ணீர் அள்ளிக் குடித்துவிட்டு, முகம் கைகால்கள் என்பனவற்றையும் கழுவிக் கொண்டோம். பின்னர் அந்தக் களஞ்சியசாலையைச் சுற்றிப் பார்த்தோம். இரண்டொரு நாட்கள் முன்னர்வரையும் வவுனியா நகரப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மக்கள் அங்கு தங்கியிருந்து சமைத்துச் சாப்பிட்ட தடயங்கள் இருந்தன. பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் அங்கு தங்கி இருந்திருக்கின்றன. நாம் அங்கு நின்றவேளை ஹெலிகொப்டர் ஒன்று எமது தலைக்கு மேலே வட்டம் இடித்தது. பின்னர் சில குண்டுவீச்சு விமானங்கள் வடக்குநோக்கிச் சென்றன. யாழ்ப்பாணம் சென்றிருக்க வேண்டும். நாம் அவை போகும் வரை மறைவாக நின்றுவிட்டு எமது பயணத்தைத் தொடர்ந்தோம்.

சற்றுத் தள்ளி வீதியோரத்தில் ஒரு சிறிய தேநீர்க்கடை இருந்தது. அங்கு வெறும் கோதுமை ரொட்டியும் இறைச்சிக் கறியும் தேநீரும் மட்டும் இருந்தன. நானும் நண்பர் சிதம்பரநாதனும் ஆளுக்கு இரண்டு ரொட்டி வாங்கிச் சாப்பிட்டு வெறும் தேநீரும் குடித்தோம். பின்னர் தொடர்ந்து நடந்தோம். எனக்கு அந்த வீதி மிகவும் பரிச்சயமானது. நண்பர் சிதம்பரநாதனின் சொந்த ஊரான நெடுந்தீவைச் சேர்ந்தவர்கள் மடு செல்லும் வீதியிலுள்ள தம்பனை கிராமத்தில் நிறைய வாழ்ந்ததால், அவருக்கும் அந்த இடங்கள் ஓரளவு பரிச்சயமாக இருந்தது.

நாம் 5ஆம் மைல் கல்லில் இருந்த பம்பைமடு சந்தியையும், 8ஆம் மைல்கல்லில் இருந்த சாளம்மைக்குளத்தையும் தாண்டி, பொழுது கருகும் நேரத்தில் பூவரசங்குளம் கிராமத்தை அடைந்தோம். வழமையாக இரவுநேரங்களில் ஓரளவு அமைதியாக இருக்கும் அந்தக் கிராமம், அன்றைய இரவு மிகவும் ஆரவாரத்துடன் காணப்பட்டது. சந்தியிலிருந்த பெரிய கடையான கணேசர் கடையிலும், வீதிகளிலும் ஏராளமான மக்கள் காணப்பட்டனர். அதற்குக் காரணம் வவுனியாப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வந்த பெருவாரியான மக்கள் பூவரசங்குளம் மகாவித்தியாலயத்திலும், தெரிந்தவர்களது வீடுகளிலும் தங்கியுள்ளனர் எனத் தெரியவந்தது.

நான் சுமார் 18 வருடங்களுக்குப் பின்னர் அங்கு சென்றதால், எமது பழைய தோழர்களைத் தேடிப்பிடிக்க வேண்டியிருந்தது. ஆனாலும் நான் வந்திருக்கிறேன் என்று தெரிந்ததும், எல்லாத் தோழர்களும் கூடிவிட்டனர். அவர்களில் சின்னராசா என்று அழைக்கப்படும் முக்கியமான தோழர் (சிவசோதி என்பது அவர் பெயர். இவர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் என்னுடன் ஒன்றாகக் கல்வி கற்ற பரம்சோதி என்ற தோழரின் தம்பியார். அவர் சிறுநீரகக் கோளாறு காரணமாக சில வருடங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார்) எம்மைத் தேடிவந்து எங்கள் இருவரையும் தமது வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

தோழர் சின்னராசாவின் வீட்டில் நாம் எமது களைப்புத் தீர நன்றாகக் குளித்தோம். பின்னர் அவரது மனைவி சமைத்துப் போட்ட அறுசுவை உணவை உண்டோம். சற்று நேரம் அங்குள்ள பழைய தோழர்களுடன் அளவளாவிவிட்டு, பல நாட்களின் பின்னர் அன்றிரவு எம்மை மறந்து நிம்மதியாகத் தூங்கினோம்.

காலையில் எழுந்ததும் யாழ்ப்பாணத்துக்கான எமது பயணத்தை எப்படி மேற்கொள்வது என ஆராயத் தொடங்கினோம். அங்கு இடம்பெயர்ந்து வந்து தங்கியிருந்த மக்களில் சிலர் தமது கஷ்டம் காரணமாக தம்மிடம் இருந்த சைக்கிள்கள் போன்ற பொருட்களைச் சற்று மலிவான விலைகளில் விற்பதாகத் தோழர் சின்னராசா சொன்னார். என்னிடமும் நண்பர் சிதம்பரநாதனிடமும் கொஞ்சம் பணம் இருந்ததால், ஒரு சைக்கிளை விலைக்கு வாங்கி அதில் நாம் இருவரும் உள்பாதைகளால் மடு சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் போவது எனத் தீர்மானித்தோம்.

ஆனால், அதற்கிடையில் பலர் அங்கிருந்து மன்னாரிலுள்ள விடத்தல்தீவுக்குச் சென்று, பின்னர் அங்கிருந்து படகுகள்மூலமாக இந்தியாவின் தமிழ்நாட்டுக்குச் செல்வதாக அறிந்தோம். அந்தச் சேவையில் சில கன்ரர் ரக வாகனங்கள் ஈடுபட்டிருப்பதாக அறிந்தோம். ஆனால் அந்த வாகனத்தில் செல்வதானால், இந்தியா செல்பவர்களாகவும், அதற்கும் சேர்த்துப் பணம் செலுத்துபவர்களாகவும் இருக்கவேண்டும் எனத் தெரியவந்தது. எமக்கோ இந்தியா செல்லும் நோக்கம் துளியளவும் இல்லை. எனவே என்ன செய்வதென்று யோசித்தோம். இதற்கிடையில் தோழர் சின்னராசா தனக்குத் தெரிந்த அந்த வாகனங்களின் சாரதி ஒருவருடன் கதைத்து எம்மையும் அந்த வாகனங்கள் ஒன்றில் திருக்கேதீஸ்வரம் வரையிலும் செல்ல ஏற்பாடு செய்தார்.

நாம் அவ்வாறே ஒரு வாகனத்தில் புறப்பட்டு, மடு தேவாலயத்தை அடைந்து, அங்கிருந்து திருக்கேதீஸ்வரத்தை அன்றைய தினம் பிற்பகலில் அடைந்தோம். அந்த வாகனம் நிறைய மக்கள் பயணம் செய்ததால், நாம் பின்புறம் வெளியே இருந்த பலகையில் வேறு பலருடன் நின்றுகொண்டே பயணித்தோம். பின்னர் அங்கிருந்து புறப்பட்ட வேறொரு வாகனத்தில் ஏறி பூநகரி ஊடாக சங்குப்பிட்டி இறங்குதுறை நோக்கிப் பயணமானோம். சங்குப்பிட்டி, கேரதீவு இடையிலான கடலைப் படகுமூலம் கடந்து, பின்னர் யாழ்ப்பாணம் செல்வதே எனது திட்டமாக இருந்தது. நண்பர் சிதம்பரநாதன் பூநகரியில் தனது மனைவி வீட்டிற்குச் சென்றுவிடுவார்.

அந்த நேரத்தில் மன்னார் நகரிலிருந்து பயணிகள் வாகனங்கள் எதுவும் செயல்படவில்லை. ஏனெனில் மன்னாரிலிருந்து வவுனியா மற்றும் பூநகரி செல்லும் வீதியிலிருந்த தள்ளாடி சந்தியில் நீண்ட காலமாக மிகப்பெரிய இராணுவ முகாம் ஒன்று அமைந்திருந்ததால், அவ்வழியிலான பிரயாணங்கள் சாத்தியமில்லாது இருந்தது. அதனால் திருக்கேதீஸ்வரத்திலிருந்தே வாகனங்கள் புறப்பட்டன. அதிலும்கூட திருக்கேதீஸ்வரம் - பூநகரிப் பாதைப் பிரயாணமும் அபாயம் நிறைந்தது. ஏனெனில் அந்தப் பாதையில் முழங்காவில் வரை ஒரு நீண்டதூரம் வெட்டவெளியான பகுதியால் பிரயாணம் செய்யவேண்டும். அந்தவேளைகளில் ஹெலிகொப்ரர்கள் அல்லது குண்டுவீச்சு விமானங்கள் அவ்வழியால் பயணிக்கும் வாகனங்கள்மீது தாக்குதல் நடாத்துவது ஒரு வழமையாக இருந்தது.

அதற்கு ஒரு காரணம், யாழ்குடாநாட்டில் புலிகளின் இலக்குகள்மீது தாக்குதல் நடாத்தும் விமானங்கள் அந்த வழி ஊடாகவே கொழும்பில் இருந்து சென்றுவந்தன. எனவே மிகுந்த பயத்துடன் தான் எமது பயணம் அமைந்தது. வாகனத்தின் கூரைப்பகுதியில் சிலர் இருந்துகொண்டு ஏதாவது விமானங்கள் வருகின்றனவா என அவதானித்துக் கொண்டே பயணத்தை மேற்கொண்டோம்.

சில இடங்களில் முன்னைய விமானக் குண்டுவீச்சின் அடையாளங்கள் பெரும் கிடங்குகளாகக் காட்சியளித்தன. நாம் பயணிக்கும்போது, இரண்டொரு தடவை அவ்வாறு விமானங்கள் வந்தபொழுது, அருகே இருந்த சிறிய பற்றைகளுக்கு அருகே வாகனத்தை நிறுத்திவிட்டு சிறிதுநேரம் நின்றோம்.

[வதை தொடரும்...]



# முதலாவது பிரமாண்ட ரயில் கொள்ளை



தப்பித்து சில நாட்களின்பின். லண்டன் பிரிட்ஜ் ரெயில்வே அலுவலகத்தில் சாவிகளைப் பிரதி பண்ணுவதற்காக கிளீன் வில்லியை உபயோகித்துக் கொண்ட எட்வேர்ட். கிளீன் வில்லிக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டார்.

அதற்குப் பின்தான் கிளீன் வில்லிக்குக் கஷ்டகாலம் தொடங்கியது.

சிறையில் இருந்து தப்பி தலைமறைவாக இருக்கும் ஒரு நபர். லண்டன் போன்றதொரு நகரில் மறைந்திருப்பது எவ்வளவு கடினமான காரியம் என்பதை கிளீன் வில்லி அனுபவரீதியாக உணர்ந்துகொண்டார். காரணம் லண்டனில் அந்த நாட்களில் இருந்த சமூக அமைப்பு அப்படி.

அந்த நாளைய (1800களின் நடுப்பகுதியில்) லண்டன் சமூக அமைப்பில் ஒரு ரகத்தினர் பணக்காரர்கள். வசதிபடைத்தவர்கள். மற்ற ரகம் மகா ஏழைகள். நடுத்தர வர்க்கம் என்பதே இல்லை.

சிறையில் இருந்து தப்ப வைக்கப்பட்டவுடன் பணக்காரர்கள் வாழ்ந்த மே.ஃபெயர் பகுதியிலுள்ள எட்வேர்ட்டின் மாளிகையில் வசிக்கும்வரை கிளீன் வில்லிக்கு ஒரு சிக்கலும் இல்லை. கிளீன் வில்லி யார் என்பதே அந்தப் பகுதியில் வசித்த பணக்கார பிரபுக்கள் யாருக்கும் தெரியாது. யாரும் கிளீன் வில்லி பற்றி கண்டுகொள்ளவில்லை. யாவரும் பிசி.

ஆனால் அங்கிருந்து வெளியேறிய பின் கிளீன் வில்லியால் செல்லக்கூடிய ஒரே இடம். ஏழைகள் வசிக்கும் பகுதி. அங்கே கிளீன் வில்லியைத் தெரிந்த ஆட்கள் அதிகம். யாருடைய கண்களிலும் படாமல் நடமாடுவது கடினம்.

சில நாட்கள் இரவுநேரங்களிலேயே வெளியே போய்வந்து கொண்டிருந்த கிளீன் வில்லி. நாளாக நாளாக அலட்சியமாக பகலிலும் அவ்வப்போது வெளியே தலைகாட்டத் தொடங்கியிருந்தார்.

அப்படியே. ஸ்கொட்லன்ட் யார்ட் விரித்து வைத்திருந்த வலையில் மாட்டிக் கொண்டார்.

கிளீன் வில்லியைச் சந்தித்த துப்பறிவாளர்கள் ஹரன்பியும், மிஸ்டர் ஷார்ப்பும். "நீங்கள் (கிளீன் வில்லி) சிறையில் இருந்து தப்பியது ஸ்டாக்லன்ட் யார்டுக்கு ஒன்றும் பெரிய விஷயமல்ல. அதற்காக மீண்டும் கைதுசெய்வது எங்களது அலுவல் அல்ல" என்று முதலிலேயே தெளிவுபடுத்தினார்கள்.

"ஸ்கொட்லன்ட் யார்ட் துப்பறியும் இலாகாவுக்கு தேவை தகவல்கள். உங்களிடமுள்ள தகவல்கள் மட்டுமே. அவ்வளவுதான். உங்களை சிறையில் இருந்து தப்ப வைத்த நபர் யார்? அவர் உங்களை உபயோகித்து என்ன செய்ய விரும்புகிறார். இறுதித் திட்டம் என்ன?

இந்த மூன்று கேள்விக்கும் பதில் தெரிந்துவிட்டால் ஸ்கொட்லன்ட் யார்ட்டுக்குப் போதும்.

தகவலுக்கு ஏற்ற சன்மானமும் கொடுக்கப்படும். நீங்கள் (கிளீன் வில்லி) வேறு ஏதாவது ஒரு நகருக்குப் போவதானால் போகலாம். ஸ்கொட்லன்ட் யார்ட் உங்களை பொலிசில் காட்டிக் கொடுக்காது" என்று துப்பறிவாளர் ஹரன்பி. கிளீன் வில்லிக்குப் பக்குவமாக எடுத்துச் சொல்லியிருந்தார்.

கிளீன் வில்லி சில தகவல்களை கூறினார்.

தம்மை சிறையில் இருந்து தப்ப வைத்த நபர் பற்றிய சில தகவல்கள்தான் கிளீன் வில்லி ஸ்கொட்லன்ட் யார்ட்டுக்குக் கூறியிருந்தார். மீதி விபரங்களை வில்லி அமுக்கிவிட்டார் என்பது. துப்பறிவாளராக நீண்டகால அனுபவமுள்ள ஹரன்பிக்கு சுலபமாகப் புரிந்தது.

ஆளைக் கொஞ்சம் விட்டுப் பிடித்து. மீதி தகவல்களையும் கறந்துவிடலாம் என்று துப்பறிவாளர் ஹரன்பி நினைத்திருக்க. கிளீன் வில்லி கொல்லப்பட்டார் என்ற தகவல் வந்து சேர்ந்திருந்தது.

ஸ்கொட்லன்ட் யார்ட் கிளீன் வில்லியிடம் இருந்து கிரகித்திருந்த தகவல்கள் இவைதான்:

1) கிளீன் வில்லியைத் தப்புவித்த நபரின் பெயர் மிஸ்டர் சிம்ஸ் (எட்வேர்ட் கொடுத்திருந்த போலிப் பெயர்).

2) பெரியமனிதர் தோற்றத்தில் இருக்கும் அவர் சிவப்பு நிறத் தாடி வைத்திருந்தார் (செம்படை நிறம்)

3) மே.ஃபெயர் ஏரியாவில் அவருக்கு மாளிகை இருக்கிறது.

இவ்வளவு குறைவான தகவல்களை வைத்துக் கொண்டு லண்டனில் ஒரு ஆளைத் தேடுவது அவ்வளவு சுலபமான காரியமல்ல.

(கொள்ளை தொடரும்...)



# நிலமெல்லாம் இரத்தம் 142

பா.ராகவன்

1969ஆம் ஆண்டு பெப்ரவரி 3 ஆம் திகதி கெய்ரோவில் கூடிய பலஸ்தீன் தேசிய காங்கிரஸின் சிறப்புக் கூட்டத்தில் யசீர் அரபாத் முறைப்படி பி.எல்.ஓ.வின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் அந்தப் பொறுப்புக்கு வந்தபோது பி.எல்.ஓ.வில் உறுப்பினராக இருந்த விடுதலை இயக்கங்கள் இவை:



1. Fatah
2. Western Sector
3. Force 17
4. Popular Front for the Liberation of Palestine (PFLP)
5. Democratic Front for the Liberation of Palestine (DFLP)
6. Hawatmah Faction
7. Abd Rabbu Faction
8. Popular Front for Liberation of Palestine (General Command)
9. Palestine Liberation Front (PLF)
10. Abu Abbas Faction
11. Tal'at Yaqub Faction
12. Al - Saiqa Organization
13. Arab Liberation Front (ALF)
14. Palestinian Arab Liberation Front
15. Palestinian Democratic Union (Fida)
16. Palestinian Islamic Jihad Movement
17. Palestinian People's Party (Hizb al Sha'ab)
18. Palestinian Popular Struggle Front

இவற்றுள் ஃபத்தா மட்டும் அரபாத்தின் சொந்த இயக்கம். மற்ற அனைத்தும் தோழமை இயக்கங்கள். இத்தனை இயக்கங்களையும் கட்டிக்காப்பதுடன் மட்டுமல்லாமல் சரியான, முறைப்படுத்தப் பட போர்ப் பயிற்சி அளிப்பது, இஸ்ரேலை அச்சுறுத்துவது மட்டுமல்லாமல், சர்வதேச அளவில் கவனம் கவர வழிசெய்வது என்று அரபாத்துக்கு இருந்த பொறுப்புக்கள் கொஞ்சநஞ்சமல்ல.

வெற்றிகரமாக அவரால் அதனைச் செய்ய முடிந்ததற்கு மிகப்பெரிய காரணம், முன்பே பார்த்ததுபோல அரசுகள்மீது மக்கள் இழந்து விட்டிருந்த நம்பிக்கை. அந்த நம்பிக்கை அப்படியே அப்போது விடுதலை இயக்கங்கள் பக்கம் சாயத் தொடங்கியது.

இன்னும் புரியும்படி சொல்வதென்றால், பலஸ்தீன் மக்கள், ஆளும் வர்க்கத்துக்கும் தமக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று நினைத்தார்கள். அதே சமயம், இந்தப் போராளி இயக்கங்கள் தான் தமக்கு விடுதலை பெற்றுத்தரப் போகின்றவர்கள் என்றும் கருதினார்கள்.

இந்த இடத்தில் ஒரு விசயத்தை நாம் கவனிக்கவேண்டும். போராளி இயக்கங்கள் பொதுவாக தீவிரவாத, பயங்கரவாத இயக்கங்களாகச் சித்தரிக்கப்படுவது சர்வதேச மரபு. இதை ஆரம்பித்து வைத்தது அமெரிக்கா. அமெரிக்க அரசுக்கு தலைவலி தரக் கூடிய எந்த ஒரு அமைப்பையும் பயங்கரவாத அமைப்பாக அறிவிப்பது தான் அத்தேசத்தின் வழக்கம். அமெரிக்கா தொடங்கிவைத்த இந்த வழக்கத்தை முதலில் இங்கிலாந்தும் பிறகு ஐரோப்பிய யூனியனில் உள்ள அத்தனை தேசங்களும் அப்படியே எவ்வித மாறுதலும் செய்யாமல் ஏற்றுக் கொண்டுவிட்டன.

சர்வதேச அளவில் எந்த ஒரு தேசத்தில் விடுதலைக் குரல் கேட்கிறதோ, அந்தக் குரலுக்கு உரியவர்களைத் தீவிரவாதிகள் என்று உடனே சொல்லிவிடும் வழக்கம் அப்போது ஆரம்பித்ததுதான்.

உண்மையில் விடுதலை இயக்கங்களுக்கும் தீவிரவாத இயக்கங்களுக்கும் ஏராளமான வித்தியாசங்கள் உண்டு. அரசாங்கங்கள் கைவிட்டு, அரபு லீக்கும் கைவிட்டு, ஐ.நா. சபையும் கைவிட்ட பிறகு, இழந்த தங்கள் நிலத்தை திரும்பப் பெற பலஸ்தீன் மக்களுக்கு ஆயுதப் போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லை என்று ஆனது வரலாறு. அவர்களைப் போராளிகள் என்று சொல்லாமல் தீவிரவாதிகள் என்று வருணிப்பது எப்படிச் சாத்தியமாகும்?

ஆனால் இந்தப் போராளி இயக்கங்கள் சமயத்தில் தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுவதுண்டு என்பதும் மறுக்க முடியாத உண்மையே ஆகும். உதாரணமாக, யசீர் அரபாத தலைமைப் பொறுப்புக்கு வந்த ஐந்தாம் ஆண்டு, அதாவது 1974ஆம் வருடம் பி.எல்.ஓ.வின் ஒரு குழுவினர் இஸ்ரேலில் உள்ள மா'லாட் (Ma'alot) என்கிற இடத்தில் ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் புகுந்து கையெறி குண்டுகளை வீசி இருபத்தொரு குழந்தைகளை ஈவிரக்கமில்லாமல் கொன்றுவீசினார்கள்.

(தொடரும்...)




அந்திசாயும் மாலைநேரம், பறவையினங்கள் தங்கள் இனிய குரல்களால் இன்னிசை கானம்பாடி பகல் முழுவதும் உணவுதேடி உட்கொண்டு பசியற்றவைகளாக தங்கள் இருப்பிடம் நோக்கி பறந்தவண்ணமிருந்தன. வீட்டின் முன்பாக இருந்த மரக்குற்றி ஒன்றின்மேல் இருந்தபடி எந்தவித சலனமுமின்றி சோடி சோடியாக பறந்துகொண்டிருக்கும் பறவையினங்களை வெறித்துப் பார்த்தபடி இருந்தாள் பூமிகா.

"பறவையினங்கள் தாங்களாகவே உணவை தேடி உட்கொள்கின்றன. தங்கள் தங்கள் சோடிகளுடன் சுதந்திரமாக வாழ்கின்றன. அவைகளுக்குள் ஏற்றத்தாழ்வுகள் எவையும் இல்லை. பணக்காரன், ஏழை என்ற பேதமில்லை. ஆனால் மனிதர்களிடம் மட்டும் ஏன் இந்த வேறுபாடு?" பறவைகளைப் பார்த்தபடி இருந்த பூமிகாவின் மனம் இவ்வாறு எண்ணிக் கொண்டது.

துன்பங்கள், துயரங்கள் பலவற்றைச் சுமந்துகொண்டு வாழ்க்கை எனும் வண்டியை இழுத்துச் செல்லமுடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் பூமிகா இவ்வாறு எண்ணிக் கொண்டதில் வியப்பேதுமில்லை.



மனிதன் மனிதனாக மட்டும் வாழத்தெரியாமல் தான் மட்டும் வாழ்ந்தால்போதும் என்ற எண்ணம்தான் மனிதகுலத்தை இழிவுநிலைக்கு இட்டுச்செல்கின்றது. இத்தகைய மனித வர்க்கத்துடன் தானும் ஒரு தியாகியாக வாழும் வாழ்க்கையை ஏன் மற்றவர்கள் புரிந்துகொள்கிறார்கள் இல்லையே என்ற ஏக்கம் பூமிகாவின் மனத்தை கடுமையாக பாதித்துவிட்டிருந்தது.

மனிதர்களை மட்டும் நொந்துகொள்வதால் தன் தலைவிதியை மாற்றிவிட முடியாது என்பதைப் புரிந்துகொண்டவள். "இரவு என்ன சாப்பாடு? கையிலே காசில்லை. என்ன செய்யலாம்?" என்று கடும் சிந்தனையில் மூழ்கினாள்.

கடந்த நாலு வருட காலமாக கையிலிருந்தவற்றையும் நகைகளையும் விற்று காலத்தைக் கடத்தியவள், இப்போது ஒரு மாதத்துக்கும் மேலாகத் தொடர்ந்துகொண்டிருக்கும் வறுமையை சமாளிக்கமுடியாமல் பூமிகா வேதனையால் துடித்துக் கொண்டிருக்கிறாள். ஒன்றா?, இரண்டா? ஐந்து ஜீவன்களுக்கு உணவுகொடுக்க அவளால் முடியவில்லை. உறவுகளிடம் உதவி கேட்டாள். உதவிசெய்ய எவரும் முன் வரவில்லை. என்ன செய்வது?, எப்படி வாழ்வது? என்பதுதான் பூமிகாவை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது.

*(காத்திருப்பு தொடரும்)*

“அமெரிக்காவுடன் இந்தியாவுக்கு இருந்த இழுபறியின் இரண்டாவது அம்சம் இந்திய அணு ஆற்றல் முயற்சிகளை கண்காணிக்கும் உரிமை தொடர்பானது. இயந்திரங்கள் மற்றும் இடுபொருட்களை அளிப்பவர்கள் என்கிறவகையில் நமது அணு ஆற்றல் முயற்சிகளைக் கண்காணிக்கும் உரிமையை அமெரிக்கா 123 ஒப்பந்தத்தின் மூலம் வற்புறுத்திவந்தது.

இறையாண்மைக்கு எதிரானது என இந்தியா இதை மறுத்துவந்தது. இதை இப்போது அமெரிக்கா விட்டுக்கொடுத்துள்ளது என்பதுபோல இந்தியத் தரப்பிலிருந்து செய்திகள் கசியவிடப்பட்டன. இனி 123 ஒப்பந்தம் தடங்கலின்றிச் செயற்படும் எனவும், அமெரிக்காவே முன் கை எடுத்து இந்தியாமீது தடைவிதித்திருந்த நாடுகளுடன் பேசி அணு வணிகத் தடைகளை நீக்கும் எனவும் சொல்லப்பட்டது.”



# அமெரிக்காவிடம் பணிந்தது இந்தியா

ஒபாமாவின் வருகையை ஒரு மாபெரும் வெற்றியாக இந்திய அரசும் ஊடகங்களும் கொண்டாடியபோதும் இயற்றப்பட்ட ஒப்பந்தங்கள் குறித்த தகவல்கள் பெரும்பாலும் பூடகமாகவே வைக்கப்பட்டுள்ளது. இதழாளர் சுஹாசினி ஹைடர் சொன்னதுபோல, எல்லாம் தெளிவாக ஒரு மூன்று மாத காலமாவது ஆகும் போல உள்ளது. ஒபாமா வருகையின் நேரடியான விளைவுகளைச் சொல்வது என்பதைக் காட்டிலும் அந்த வருகையை ஒரு குறியீடாக்கி அதன்மூலம் உலகத்திற்கு உணர்த்தும் செய்திதான் இரு நாடுகளுக்கும் முக்கியமாக இருந்தது. ஆசிய - பசிபிக் பகுதியில் வளர்ந்துவரும் சீனச் செல்வாக்கிற்கு எதிராக அமெரிக்காவும் இந்தியாவும் வேறெப்போதையும்விட அதிகமாக நெருங்கியுள்ளது என்பதுதான் அந்தச் செய்தி.

மன்மோகன்சிங் அரசாங்கம் அமெரிக்காவுடன் செய்துகொண்ட “123” ஒப்பந்தம் நடைமுறைக்கு வருவதில் கடந்த ஏழு ஆண்டுகளாக இருந்து வந்த இழுபறி முடிவுக்கு வந்துள்ளது என்பதை இந்த வருகையின் மிகப் பெரிய வெற்றியாகச் சொன்னபோதும் அதன் முழுவிவரங்களை வெளிப்படுத்துவதில் இந்தியத் தரப்பிற்குக் கொஞ்சம் வெட்கம் இருந்தது.

தனது சாதனைகளைப் பறைசாற்ற வார்த்தைகளை விரயமாக்கத் தயங்காத மோடி அணு ஒப்பந்தம் குறித்த இந்த அறிவிப்பைச் செய்யும்போது மட்டும், “நமது சட்டம், நமது பன்னாட்டுக் கடப்பாடுகள், தந்திரோபாயம் மற்றும் வணிகச் சாத்தியங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்பட்டன” என்பதோடு நிறுத்திக்கொண்டார். இது குறித்த பத்திரிகையாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அப்போதைய வெளியுறவுச் செயலர் சுஜாதா சிங் சற்று எரிச்சலோடு பதிலளித்ததை பத்திரிகைகள் சுட்டிக் காட்டியிருந்தன. அணு ஒப்பந்தத்தைப் பொறுத்தமட்டில் இரண்டு அமசங்களில் இருதரப்புகளுக்கும் இடையே இழுபறி இருந்துவந்தது.

அணு உலை விபத்து ஏற்படும் பட்சத்தில் நமது மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படுவதில் எந்தச் சமரசமும் கூடாது எனக் கடுமையான எதிர்ப்புகள் ஏற்பட்டதன் விளைவாக அன்றைய காங்கிரஸ் அரசு 2010ல், சிவில் அணு ஆற்றல் விபத்துப் பொறுப்புச் சட்டம் ஒன்றை இயற்றவேண்டியதாயிற்று. அணு உலையில் விபத்து ஏற்படும் பட்சத்தில் பாதிக்கப்படும் நம் மக்களுக்கு இழப்பீடு வழங்கும் பொறுப்பை அணு உலை அமைத்தவர்களே ஏற்கவேண்டும் என்பதும், உலை, தொழில்நுட்பம், இடுபொருட்கள் ஆகியவற்றை அளித்தவர்கள்மீது வழக்குத் தொடரும் உரிமைகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்டு என்பதும் இச்சட்டத்தின் 46வது பிரிவுமூலம் உறுதிசெய்யப்பட்டன.

நாடாளுமன்ற விவாதங்களின்போது இந்தப் பாதுகாப்பு விதிகளை உருவாக்குவதற்கு இடதுசாரிக் கட்சிகளோடு சேர்ந்து பா.ஜ.கவும் அழுத்தம் கொடுத்தது குறிப்பிடத்தக்கது. இந்தச் சட்டப் பிரிவைத்தான் அமெரிக்கா உள்ளிட்ட அணு உலை வியாபார நாடுகள் எதிர்த்துவந்தன.

**அ.மார்க்ஸ் கட்டுரையிலிருந்து...**

இன்று ஒபாமாவுடன் வந்துள்ள உடன்பாட்டில் மோடி அரசு இந்த நிபந்தனைகளை விட்டுக்கொடுத்துள்ளது. விபத்து நேர்ந்தால் இன்சூரன்ஸ் காப்பீட்டுத் திட்டம் ஒன்றின்மூலம் அதை ஈடுகட்டலாம் எனவும், அதற்காக இந்திய அரசு 1500 கோடி ரூபாயை முதலீடு செய்யும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. சுருக்கமாகச் சொன்னால் இழப்பீட்டுப் பொறுப்பு அணு உலை விற்பனை நாடுகளிடமிருந்து இந்திய மக்களிடம் மாற்றப்படுகிறது.

தவிரவும் கூடுதல் இழப்பீடு வழங்குதல் தொடர்பான ஒரு ஒப்பந்தத்திற்கும் இன்று இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது. இது இன்னும் 3000 கோடி ரூபாய் சுமையை இந்தியாவுக்கு ஏற்றுகிறது. எந்த நாட்டில் அணு உலை நிறுவப்படுகிறதோ அந்த நாடு இந்தக் கூடுதல் இழப்பீட்டுப் பொறுப்பை ஏற்கவேண்டும் என்கிற இந்த ஒப்பந்தத்தை இதுவரை பிரான்ஸ், சீனா, ரஷ்யா, அமெரிக்கா முதலான நாடுகள் ஏற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

விபத்து ஏற்படும் பட்சத்தில் உலை, தொழில்நுட்பம், இடுபொருட்கள் முதலானவற்றை அளித்தவர்கள்மீது வழக்குத் தொடுக்கும் உரிமையை வழங்கும் சட்டப் பிரிவை பலவீனப்படுத்துவதற்கும் மோடி அரசு ஒத்துக் கொண்டுள்ளது. இந்தச் சட்ட நிபந்தனைகளைத் தளர்த்தும்வகையில் பொது நிலை அறிக்கை ஒன்றை வெளியிட இந்திய அரசு ஒத்துக்கொண்டுள்ளது.

ஒபாமா வருகைக்குப் பல மாதங்கள் முன்னதாகவே மோடி அரசு இந்த முடிவுகளை எடுத்துச் செயற்படத் தொடங்கியது. இது குறித்த முடிவுகளை எடுக்க உயரதிகாரிகள்கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இது டெல்லி, வியன்னா, லண்டன் ஆகிய நகரங்களில்கூடி, அணு உலை விபத்துக்கள் ஏற்படும் சாத்தியங்கள், அதனால் ஏற்படும் இழப்புகள், இன்சூரன்ஸ் பாதுகாப்பு முறைகள், அவற்றில் முதலீடு செய்யத் தேவைப்படும் தொகை என்பவை குறித்தெல்லாம் தனித்தனியே விவாதித்து இரகசியமாக முடிவுகளை எடுத்தது. அவை ஒபாமா வந்தபின் ஒப்பந்த வாசகங்கள் ஆக்கப்பட்டன. மக்களைப் பாதிக்கும் மிக முக்கியமான ஒரு பிரச்சினையில் மக்களை விலக்கிவிட்டு முழுக்க முழுக்க அதிகாரிகளின் துணையுடன் முடிவுகளை மேற்கொண்டு அவற்றை அந்நிய அரசொன்றுடன் ஒப்பந்தமாக்குவது எந்தவகையிலும் ஒரு ஜனநாயக அரசுக்கு அழகல்ல என்பது குறித்து அரசு கவலைப்படவில்லை.

அமெரிக்காவுடன் இந்தியாவுக்கு இருந்த இழுபறியின் இரண்டாவது அம்சம் இந்திய அணு ஆற்றல் முயற்சிகளை கண்காணிக்கும் உரிமை தொடர்பானது. இயந்திரங்கள் மற்றும் இடுபொருட்களை அளிப்பவர்கள் என்கிறவகையில் நமது அணு ஆற்றல் முயற்சிகளைக் கண்காணிக்கும் உரிமையை அமெரிக்கா 123 ஒப்பந்தத்தின் மூலம் வற்புறுத்திவந்தது.

இறையாண்மைக்கு எதிரானது என இந்தியா இதை மறுத்துவந்தது. இதை இப்போது அமெரிக்கா விட்டுக்கொடுத்துள்ளது என்பதுபோல இந்தியத் தரப்பிலிருந்து செய்திகள் கசியவிடப்பட்டன. இனி 123 ஒப்பந்தம் தடங்கலின்றிச் செயற்படும் எனவும், அமெரிக்காவே முன் கை எடுத்து இந்தியாமீது தடைவிதித்திருந்த நாடுகளுடன் பேசி அணு வணிகத் தடைகளை நீக்கும் எனவும் சொல்லப்பட்டது.

ஆனால் இன்று அமெரிக்கா இது தொடர்பான உண்மையை வெளிப்படுத்திவிட்டது. இந்த அம்சத்திலும் விட்டுக்கொடுத்துள்ளது அமெரிக்கா அல்ல இந்தியாதான் என்பது வெட்டவெளிச்சமாகிவிட்டது. அணு அற்றல் தொடர்பான எந்தெந்த முயற்சிகளையெல்லாம் அமெரிக்கா கண்காணிக்கவேண்டுமென இதுகாறும் வற்புறுத்தி வந்ததோ அவை குறித்த விவரங்களை எல்லாம் தானே தந்துவிடுவதாக மோடி அரசு வாக்களித்து உள்ளதாக இன்று அமெரிக்கத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. தாங்கள் வழங்கும் கருவிகள் மற்றும் மூலப்பொருட்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் முயற்சிகளைத் தொடர்ந்து கண்காணிக்கும் உரிமைகளை அதிகாரபூர்வமாக விட்டுக்கொடுப்பதாக ஒபாமா எந்த உத்தரவாதத்தையும் அளிக்கவில்லை என்றும் அமெரிக்கத் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது.

அணு ஆற்றல் தொடர்பான ஒபாமா - மோடி உடன்பாடு ஏற்பட்டகையோடு நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் வெளியுறவு அமைச்சகத்தின் மூத்த அதிகாரி அமர்தீப் சிங்கில் வேண்டிய தரவுகளை இந்தியா அமெரிக்காவுக்கு அளிக்கும் என்கிற முடிவு குறித்து: “இது நாம் வழக்கமாகக் கனடாவுடன் பகிர்ந்துகொள்ளும் தகவல்கள்தான். அதைத்தான் அமெரிக்காவுக்கும் தருவதாகச் சொல்லியுள்ளோம்” என்றார். இது முழுப் பொய் என்பதை இன்று அமெரிக்கத் தரப்பிலிருந்து வரும் செய்திகள் உறுதிப்படுத்தியுள்ளது.

“எங்கள் சட்டப்படி நாங்கள் வழங்கும் அணு ஆற்றல் கருவிகள் முதலியவற்றின் பயன்பாட்டைக் கண்காணிக்கும் உரிமை எங்களுக்கு உண்டு. முதல் முறையாக இப்போதுதான் இந்தியா எங்களின் இந்தச் சட்டத் தேவைகளுக்கு இணங்க உரிய தகவல்களைத் தருவது எனவும், தொடர்ந்து உரிய கால இடைவெளிகளில் கலந்தாலோசனைகளுக்கு உடன்படவும் வாக்களித்துள்ளது” என்று அமெரிக்கத் தூதர் ரிச்சர்ட் வெர்மா கூறியுள்ளார். இந்தியாவுக்கென இது தொடர்பாகப் பிரத்தியேகமாக அமெரிக்கா இயற்றியுள்ள “ஹைட்” சட்டத்தின்படி ஒபாமா அமெரிக்கக் காங்கிரசுக்குப் பொறுப்பானவர். தன்னிச்சையாக அவர் இந்தச் சட்ட நிபந்தனைகளை விட்டுக்கொடுத்துவிட இயலாது. மாறாக இந்தியா தன் நிலைப்பாட்டை விட்டுக்கொடுத்ததன் விளைவாகத்தான் இன்று ஒபாமா, மோடி உடன்பாடு ஏற்பட்டுள்ளது என்பதை அமெரிக்கா தெளிவாக்கியுள்ளது.

விபத்து நடந்தால் இழப்பீடு வழங்கும் பொறுப்பிலிருந்து அமெரிக்காவையும் பிற அணு உலை வியாபார நாடுகளையும் விடுவித்து அந்தச் சுமையை இந்திய மக்களின் தோள்கள்மீது சுமத்துவது தொடர்பான பொது நிலை அறிக்கையைத் தயாரிப்பதில் இந்திய அதிகாரிகள் இப்போது மும்முரமாக உள்ளனர். இந்த அறிக்கை முழுமையானவுடம் அது அமெரிக்காவிடம் தரப்படும். ஒபாமா அதற்கு ஒப்புதல் அளித்தவுடன் ஒப்பந்த நிறைவேற்றம் தொடங்குமாம்.

ஆக, அணு உலை விபத்து ஏற்பட்டால் இழப்பீடு கோருது, காரணமானவர்கள்மீது பாதிக்கப்பட்டவர்கள் வழக்குப் போடு. அது ஆகிய எல்லா உரிமைகளையும் மோடி அரசு இன்று விட்டுக்கொடுத்துள்ளது. சிவில் மற்றும் இராணுவம் தொடர்பான இந்தியாவின் அணு ஆற்றல் முயற்சிகள் அனைத்தையும் அறிந்து கொள்ள அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்குக்கு உதவும் திறந்துவிடப்பட்டுள்ளது.

இப்படியான கண்காணிப்பு உரிமையை அமெரிக்காவுக்கு வழங்குவதென்பது நமது படுக்கை அறையுள் ஒரு மூன்றாம் மனிதரை நாற்காலி போட்டு அமரச் செய்வதற்கு ஒப்பு என்கிற விமர்சனம் இது குறித்த விவாதங்களின்போது முன்வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# மலேசியாவில் தலையெடுக்கும் இனமுறுகல்!

பகுதி - 03

மலேசியாவில் பொருளாதார அபிவிருத்தி முன்னகர்ந்தாலும் இனமுரண்பாடுகள் தீர்ந்து விடவில்லை. "ஒரு நாடு, ஒரு மொழி", "ஒரே - இன நாடு" இக்கோஷங்கள் மலேசியாவில் அரசியலிலும் கல்வித்துறையிலும் தொடர்ந்து ஒலிக்கும் கோஷங்கள். இதைப் பின்பற்றியே இலங்கையின் கடந்தகால ஆட்சியிலும் "ஒரு நாடு - ஒரு தேசம்" எனும் கோஷமும் "சிறுபான்மை என ஒரு சாரார் இல்லை நாட்டை நேசிப்போர் எல்லோரும் பெரும்பான்மையினரே" எனும் கோஷமும் ஒலித்தன.

மலேசியாவில் வசிக்கும் சிறுபான்மை மொழி மற்றும் சிறுபான்மை இன மக்களும் இலங்கையில் வசிக்கும் சிறுபான்மைமொழி மற்றும் சிறுபான்மையின மக்களும் இக்கோஷங்களை ஏற்கமறுத்துள்ளனர். இந்நிலையில் மலேசியாவின் பின்புலத்தையும் இன நல்லிணக்கச் சூழல் மலேசிய சமூகங்கள் மத்தியில் தற்போது எப்படி உள்ளது என்பதையும் இக்கட்டுரைத் தொகுப்பு வெளிக்கொண்டுவருகிறது.

"ஒரு நாடு, ஒரு மொழி" என்ற கொள்கை வழி அனைத்து இனங்களையும் ஒருங்கிணைக்க முயலும் வழிமுறை காலாவதியாகிவிட்ட ஒன்று என்று கூறும் மலேசிய தமிழ் அறவாரியத்தின் ஆலோசகர் கா.ஆறுமுகம், 2004ஆம் ஆண்டு வெளியான ஐக்கிய நாட்டு மேம்பாட்டு திட்ட அறிக்கை தாய்மொழிக் கொள்கைக்கு முன்னிலை கொடுத்துள்ளதை சுட்டிக்காட்டினார். "தாய்மொழிக் கல்வியை வலுக்கட்டாயமாக அழிக்க முற்பட்ட பல நாடுகளில் மொழி, பண்பாடு சார்ந்த முரண்பாடுகள் அரசியல் போராட்டமாக வெடித்துள்ளதை உணர வேண்டும்" என்றுகூறிய அவர், மனித விடுதலைகோரும் மக்கள் மொழியையும் பண்பாட்டையும் விட்டுக் கொடுக்கமாட்டார்கள் என்றார்.

### கல்வி செயல்திட்டம் ஒரு மொழிக் கல்வி மட்டுமே என்ற நிலையை நோக்கி நகர்கிறது

மலேசிய தேசிய கல்வித் திட்டம் என்பது நாட்டில் "ஒருமொழிக் கல்வி மட்டுமே" என்ற நிலையை உருவாக்கும் 1956ஆம் ஆண்டு ரசாக் அறிக்கையின் முடிவான குறிக்கோளைச் செயற்படுத்தும் ஒரு வழிமுறையாகும் எனச் சீனக் கல்விநலக் குழுவான டொங் சொங் கூறியுள்ளது.

கல்வி செயல்திட்டத்தைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள் எனக் கல்வி துணை அமைச்சர் மேரி யாப் அண்மையில் குற்றஞ்சாட்டியதற்கு டொங் சொங் குழுவினர் இவ்வாறு எதிர்வினை ஆற்றியுள்ளனர்.

தாய்மொழிக் கல்வி பற்றி டொங் சொங் பயப்படுவது வீண். செயற்திட்டத்தில் தாய் மொழிப் பள்ளிகளுக்காகவே ஒரு தனி அத்தியாயம் உண்டு என்று மேரி கூறினார். ஆனால், டொங் சொங் அதை ஏற்கவில்லை.

"கல்வி செயற்திட்டம் பற்றி அறிவித்த துணைப் பிரதமரும் கல்வி அமைச்சருமான முகைதின் யாசின், ரசாக் அறிக்கையின் கொள்கைகளையும் நோக்கங்களையும் முழுமையாக செயற்படுத்த முடியுமா என்பதை அறிய மிகுந்த கவனம் செலுத்தப்போவதாக பல இடங்களில் குறிப்பிட்டு வந்துள்ளார்", என டொங் சொங் கூறினார்.

அச்செயல் திட்டத்தில் தாய்மொழிக் கல்வி பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் சீன, தமிழ்ப் பள்ளிகளை விளிம்பு நிலைக்குத் தள்ளிச்செல்லும் சாதகமற்ற கொள்கைகள் அதிகரித்து வருவதாக அது கூறிற்று.

மற்றவற்றோடு, ஒரே இன நாடு என்ற நிலையை உருவாக்கும் நோக்கில் தாய் மொழிப் பள்ளிகளில்கூட பகாசா மலேசியா கற்பிக்கும் நேரம் கூட்டப்பட்டிருப்பதை அது சுட்டிக்காட்டியது.

### மலேசியக் கல்விப் பெருந்திட்டத்தை எதிர்த்துப் போராட சபதம்!

டோங் ஜவ் ஸோங் (DJZ) என்ற சீனக் கல்வி அமைப்பின் தலைவர் யாப் சின் தியன் மலேசியக் கல்விப் பெருந்திட்டம் 2013 - 2025 எதிர்த்து அது தாய்மொழிக் கல்விக்கு ஏற்ற வகையில் மாற்றம் காணும்வரை போராடப் போவதாக சபதமிட்டார்.

2013 கோலாலம்பூர் சூங் குவொ சீன ஆரம்பப் பள்ளி மண்டபத்தில் நடந்த '728 பிரகடனம்' என்ற கல்வி மாநாட்டில் உரையாற்றிய யாப், இந்தப் பெருந்திட்டம் தாய்மொழிக் கல்வியை ஒரு முடிவுக்குக் கொண்டுவர போட்ட திட்டமாகவே காட்சியளிக்கிறது, என்றார்.

தாய்மொழிக் கல்வி உரிமையைப் பறிக்க விடமாட்டோம் என்று யாப் கூறியபோது அரங்கத்தில் இருந்த 2,000-க்கும் அதிக மானோர் பலத்த கரவொலி எழுப்பி ஆதரவுநல்கினர்.

இந்தப் பெருந்திட்டம் சார்பாக மக்களின் கருத்துகள் தொகுக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டு விட்டதாகவும், ஆனால் கல்வி அமைச்சு அதை இதுவரை ஒரு பொருட்டாக கருதியதாக தெரியவில்லை என்றார். எனினும் தாங்கள் தொடர்ந்து தமிழ்க்கல்வி அமைப்புடன் இணைந்து மீண்டும் கோரிக்கையைக் கல்வி அமைச்சிடம் சமர்ப்பிப்போம் என்றார் யாப்.

இதையும் புறக்கணித்தால் எதிர்ப்பு நடவடிக்கையாக கையெழுத்து பிரசாரத்தையும் நடத்தப்போவதாக யாப் கூறினார். மேலும், மனித உரிமைகள் என்ற வகையில் ஐக்கிய நாடுகள் ஆணையத்தின் யுனெஸ்கோ அமைப்பிடமும் முறையீடு செய்வோம் என்றார்.

மண்டபம் நிறைந்து காணப்பட்ட 2,000-க்கும் அதிகமானோர் 1,100 இயக்கங்களின் பிரதிநிதிகளாக மாநாட்டின் தீர்மானங்களை ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். இதில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ் அறவாரியத்தின் ஆலோசகர் கா. ஆறுமுகம், மலேசியாவில் உள்ள இந்தியர்களுக்கு ஆரம்பக் கல்வியை வழங்கும் ஒரு முக்கிய பங்கை காலனித்துவ காலம் முதல் தமிழ்ப்பள்ளிகள் ஆற்றியுள்ளதாகவும், அதன் வளர்ச்சி இன்று ஒரு தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்கும்நிலைக்கு எட்டியுள்ளதாகவும் கூறினார். அதை அபகரிப்பது குழந்தைகளுக்குக் கிடைக்கவேண்டிய அடிப்படை கல்வி உரிமையை பறிப்பதாக அமையும் என்றார்.

ஒரு நாடு, ஒரு மொழி என்ற கொள்கை வழி அனைத்து இனங்களையும் ஒருங்கிணைக்க முயலும் வழிமுறை காலாவதியாகிவிட்ட ஒன்று என்ற மலேசிய தமிழ் அறவாரியத்தின் ஆலோசகர் கா.ஆறுமுகம், 2004ஆம் ஆண்டு வெளியான ஐக்கிய நாட்டு மேம்பாட்டு திட்ட அறிக்கை தாய்மொழிக் கொள்கைக்கு முன்னிலை கொடுத்துள்ளதை சுட்டிக் காட்டினார். தாய் மொழிக்கல்வியை வலுக்கட்டாயமாக அழிக்க முற்பட்ட பல நாடுகளில் மொழி, பண்பாடு சார்ந்த முரண்பாடுகள் அரசியல் போராட்டமாக வெடித்துள்ளதை உணரவேண்டும்" என்றுகூறிய அவர், மனித விடுதலைகோரும் மக்கள் மொழியையும் பண்பாட்டையும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்றார்.

### தேசியக் கல்விப் பெருந்திட்டக் குறைபாடுகளை விளக்கி டோங் ஜொங் கையேடு ஒன்றை வெளியிட்டது

தேசியக் கல்விப் பெருந்திட்டத்தில் உள்ள (2013-2025) குறைபாடுகளை விளக்கி டோங் ஜொங் எனப்படும் மலேசிய ஐக்கிய சீனப் பள்ளிக்கூட குழுக்கள் சங்கம் கையேடு ஒன்றை விநியோகம் செய்துள்ளது.

அந்த பெருந்திட்டத்துக்கு ஆட்சேபம் தெரிவிக்கும்வகையில் அந்தச் சீனக் கல்விப் போராட்ட அமைப்பு 2014, நவம்பர் 25ம் ஏற்பாடு செய்துள்ள பேரணிக்கு முன்னதாக அந்தக் கையேடு வெளியிடப்பட்டு உள்ளது.



மலாய் மொழியைப் போதனா மொழியாகக் கொண்ட ஒரே நீரோ[...] கல்வி முறையை

அனைத்து மலேசியர்களுக்கும் டோங் ஜோங் - கின் திறந்த மடல் என்னும் தலைப்பைக் கொண்ட கடிதமும் 24 பக்க கையேட்டுடன் மலாய், ஆங்கிலம், சீனம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது.

அதுதவிர பிரச்சினைமீது 10 அம்ச கேள்வி - பதில் பாணியில் விளக்கமும் மலேசியச் சீன அமைப்புக்களின் ஆதரவுக் கடிதங்களும் தேசியக் கல்விப் பெருந்திட்டத்தை எதிர்க்கும் செய்தி நறுக்குகளும் தலையங்கங்களும் எதிர்ப்புப் பேரணி நடத்தப்படும் இடத்துக்கு செல்வதற்கான வரைபடமும் பிரசார சுவரொட்டிகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

அந்தப் பேரணியில் பங்குகொண்டு ஆதரவு அளிக்குமாறு அனைத்து இன வம்சாவளி மக்களுக்கும் டோங் ஜோங் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தாய்மொழிக் கல்வி மேம்பாட்டிற்கும், தேசிய ஒற்றுமைக்கும் தீங்கானது என்று கருதப்படும் ஒரே மொழி கல்விக் கொள்கையைப் பரிந்துரைக்கிறது.

மலேசியா ஒரு பல்லின, பன்மொழி, பல கலாசாரம் மற்றும் பல சமயங்களைக் கொண்ட நாடு. இதனை அங்கீகரித்து, பன்மொழிக் கல்விக்கு தேவைப்படுபவற்றை கவனத்தில் கொள்ளும் கல்விச் சித்தாந்தம் மற்றும் கொள்கைகள் அமுல்படுத்த வேண்டும். துரதிஷ்டவசமாக, நாடு சுதந்திரமடைந்த காலத்திலிருந்து அதிகாரத்தினர் பல்வேறு இனப் பின்னணிகளைக் கொண்ட அனைத்து மலேசியர்களும் அவர்களுடைய தாய்மொழிகளைக் கற்பதற்கும், பயன்படுத்துவதற்கும் உரிய அவர்களின் உள்ளார்ந்த உரிமைகளை புறக்கணித்துவிட்டு, நாட்டின் நடப்பு நிலைக்கு முரணாக, ஒரே மொழி கல்விக் கொள்கைகளைப் பரிந்துரைத்தனர். 1956 ரசாக் அறிக்கை ஒரே மொழி மற்றும் ஒரே கல்வி முறை ஆகியவற்றை இறுதிக் குறிக்கோள் என்று முன்மொழிந்தது. அதன் பின்னர் வெளியிடப்பட்ட கல்வி அறிக்கைகள், அறிமுகம் செய்வதை வலியுறுத்தும் 1956ஆம் ஆண்டு ரசாக் அறிக்கையின் இறுதி இலட்சியத்தை அமலாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அண்மைய முயற்சி தேசியக் கல்விப் பெருந்திட்டம். என்றும் அந்தக் கையேடு குறிப்பிடுகின்றது.

2009ஆம் ஆண்டுக்கு முன்னதாக இரண்டு கல்விப் பெருந்திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்ட போது சீன, தமிழ் தொடக்கப் பள்ளிகள் முதலாம் ஆண்டு தொடக்கம் மூன்றாம் ஆண்டு வரை மலாய் மொழியை போதனா மொழியாகப் பயன்படுத்தவேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்தது.

அந்தத் திட்டம் மொழி வகுப்புக்கள் தொடக்கம் சீன, தமிழ்ப் பள்ளிகளின் அடையாளத்தையே மாற்றியிருக்கும். அதனால் பல்வேறு அமைப்புக்கள் குறிப்பாக சீனக் கல்வி போராட்ட அமைப்புக்கள், அரசு சாரா அமைப்புக்கள் ஆகியவை ஆட்சேபித்தன. இறுதியில் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

இப்போது கல்வி அமைச்சு தேசியக் கல்விப் பெருந்திட்டத்தைப் பயன்படுத்தி இறுதி இலட்சியத்தை அடைவதற்காக சீன, தமிழ்ப் பள்ளிகளை மாற்ற விரும்புகிறது, என அந்தக் கையேடு குறிப்பிடுகிறது.

**தொகுப்பு - வேணு கிருஸ்ணா**

டோங் ஜோங் கோரிக்கைகள் பேராசையால் விளைந்தவை என்றும் வெறுப்பைத் தூண்டுகின்றன என்றும் பிஎன் தலைமைச் செயலாளர் தெங்கு அட்னான் தெங்கு மான்சோர் விடுத்த அறிக்கையையும் அந்த கையேடு மறுத்தது.

### தாய்மொழிக் கல்விக்காக டோங் ஸோங் விடுத்த 728 பிரகடனம்

**மலேசிய சீன மன்றங்கள் 728 ஒருங்கு கூடுதல்.**

**கல்வி பெருந்திட்டம் 2013 - 2025 க்கு கண்டனம்.**

**தாய்மொழிக் கல்வி மேம்பாட்டிற்கு அது தீங்கானது.**

**மலேசிய ஐக்கிய சீனப்பள்ளி குழுக்கள்மன்றம் (டோங் ஸோங்) ஏற்பாடு.**

### பிரகடனம்

மலேசிய ஐக்கிய சீனப்பள்ளி குழுக்கள் மன்றம் (டோங் ஸோங்) நாடு தழுவிய அளவில் ஒரு கூட்டத்தை நடத்துகிறது. நாங்கள் முன்மொழியப்பட்டிருக்கும் மலேசிய கல்வி பெருந்திட்டம் 2013-2025 தொடக்க அறிக்கையை (இதன்கீழ் பெருந்திட்டம் என்று குறிப்பிடப்படும்) உறுதியாக எதிர்க்கிறோம் என்பதை இதன் மூலம் முறைப்படி அறிவிக்கிறோம். இத்திட்டம் கல்விச் சட்டங்கள் மற்றும் கல்வி மேம்பாட்டு பெருந்திட்டங்கள் அனைத்தும் இந்த இறுதிக் குறிக்கோள் இலக்கை அடையும் முயற்சியாக ஒரே மொழி கல்விக் கொள்கையை வலியுறுத்தின. கல்வி பெருந்திட்டம் 2013 அந்த நடவடிக்களை திட்டமிட்டபடி விரைவு படுத்துதல் வழி ஒருபடி மேலே சென்றுள்ளது.

பெருந்திட்டம் கீழ்காணும் ஒரே மொழி கல்வி கொள்கை நோக்கங்களை 2013 லிருந்து 2025 வரையில் மூன்று கட்டங்களாக வகுத்துள்ளது தாய்மொழிப் பள்ளிகள் தொடர்ந்து இருப்பதையே பாதிக்கின்ற தற்போதைய அபாயகரமான தாக்குதலின் முழுவேகத்தையும் சீனக் கல்வி தாங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, நாங்கள் பல்வேறு இனப் பின்னணிகளைக் கொண்ட அனைத்து மலேசியர்களையும் எங்களோடு இணைந்திருக்குமாறு வற்புறுத்துகிறோம். இந்நாட்டில் பல்வேறு கல்வி பிரிவுகளின் மேம்பாட்டிற்கு சாதகமாகயிராத பெருந்திட்டம் அமுல்படுத்தப்படுத்துவது நிறுத்தப்பட வேண்டும் என்று அரசாங்கத்தை திடமாக வற்புறுத்துவதற்கு நாம் ஒன்றுபட்டு நிற்கவேண்டும்.

பல்வேறு கல்வி பிரிவுகள் விலை மதிப்பற்ற சொத்து என்றும், அவை நாட்டிற்கு பயன் தருகின்றவை என்றும், அவை நிலையற்ற தன்மைக்கும் ஒற்றுமையின்மைக்கும் அடிப்படைக் காரணம் அல்ல என்பதை நாங்கள் மீண்டும் கூறுகிறோம். ஒரே மொழி கல்விக் கொள்கைகளும் ஒரு மயமாதலும் மக்களைப் பிளவுபடுத்துவதற்குத்தான் உதவியுள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ள வேளையில், பன்மையம், சமத்துவம் மற்றும் சகிப்புத்தன்மை ஆகியவை பல்வேறு இனப் பின்னணிகளைக் கொண்ட மலேசியர்கள் ஒன்றுபட்டு இருப்பதோடு நல்லிணக்கத்தோடு வாழ்வதை உறுதிப்படுத்துகின்றன.

கல்வி கட்டளை 1957இல் கூறப்பட்டுள்ள தேசிய கல்வி கொள்கைப்படி கல்விப் பெருந் திட்டத்தை திருத்தம் செய்யும்படி நாங்கள் அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம். அக்கட்டளையில், அனைத்து மக்களுக்கும் ஏற்புடைய, அவர்களுடைய தேவைகளை நிறைவுசெய்யும், அவர்களுடைய பண்பாடு, சமுதாய மற்றும் அரசியல் மேம்பாடு ஆகியவற்றுக்கு நாடு என்ற முறையில் ஆதரவு தந்து நிறைவேற உதவுவதற்கும் தேசியக் கல்வி அமைவுமுறையை உருவாக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதன் நோக்கம் மலாய் மொழியை நாட்டின் தேசிய மொழியாக்குவதும், அதேவேளையில் நாட்டில் வாழும் மலாய்க்காரர்கள் அல்லாத மக்களின் மொழி மற்றும் பண்பாடு ஆகியவற்றை அழியாது காப்பாற்றி அவற்றின் முன்னேற்றத்தைப் பேணிவளர்ப்பதுமாகும். **(முற்றும்)**


வாரமலர் தினமுரசு
பெப்ரவரி 19 - 25, 2015



# பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினை தீர்வுக்கு என்ன வழி?



கோ.றுசாங்கன்

தமக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்றுகூறி மீண்டும் பட்டதாரிகள் போராட்டங்களை நடத்தத் தொடங்கி உள்ளனர். புதிய ஆட்சி மாற்றத்தின் பின்னர், முதலில் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலுமே இவ்வாறான போராட்டங்கள் நடைபெற்றிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. க.பொ.த. உயர்தரத்துக்குத் தோற்றும் சுமார் 3 இலட்சம் வரையிலான மாணவர்களில், பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் சுமார் 25,000 வரையிலானவர்கள், தமது பட்டக்கல்வியை நிறைவுசெய்த பின்னர் ஒவ்வொரு முறையும் இப்படி தம்மைத் தாமே வேலையற்ற பட்டதாரிகள்(வேலையற்ற என்று சொல்லாமல், வேலைதேடும் என்று சொல்லலாமே?) என்று பிரகடனப்படுத்திப் போராட்டங்களை நடத்துவது வழக்கமாகவே இருந்து வருகிறது.

க.பொ.த. உயர்தரத்தை நிறைவு செய்தவர்களில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் சுமார் 10 சதவீதத்துக்கும் குறைவான இந்த மாணவர்களுக்கு, பெருமளவு நிதியைச் செலவிட்டு 15 பல்கலைக்கழகங்களிலும், மேலும் பல உயர்கல்வி நிறுவனங்களிலும் இலவசமாக பட்டக்கல்வி வழங்கப்படுகிறது. இருந்தும், அந்தப் பட்டக்கல்வியைக் கொண்டு தமக்கான வேலைவாய்ப்புக்களைத் தேடிக்கொள்ள முடியாதவர்களாக ஒவ்வொரு பட்டம் பெற்ற அணியிலிருந்தும் போராட்டக்குரல்கள் முன்வைக்கப்படுவதே வழக்கமாக இருந்துவருகிறது.

## கோர்மென்டு உத்தியோகம்?

"கோழி மேய்ப்பதாக இருந்தாலும் கோர்மென்டில் மேய்க்கவேண்டும்" என்று சொல்லப்படுவதுபோல், இவர்கள் அனைவருமே தமக்கு அரசாங்க உத்தியோகம் வழங்கப்படவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் தான் இத்தகைய போராட்டங்களை நடாத்தி வருகின்றனர். உண்மையில் இலங்கையில் அரசாங்க உத்தியோகம் என்ற ஒன்றே கிடையாது. பொதுமக்கள் சேவகர்- (Public Servant) என்ற பதம்தான் இந்த உத்தியோகங்களுக்கு சட்டபூர்வமாக வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மொத்த வேலைவாய்ப்புக்களில் வெறும் 12 சதவீதமே இருக்கக் கூடிய இந்தப் பொதுச்சேவைத்துறையில் தமக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்பதுதான் இவர்களது ஒரே கோரிக்கையாக இருக்கிறது. 88 சதவீத வேலைவாய்ப்புக்கள் குவிந்துள்ள தனியார்துறையில் பணியாற்ற இவர்கள் தயக்கம் காட்டி வருகின்றனர். அரசாங்க உத்தியோகம் என்று இவர்கள் குறிப்பிடும் பொதுச் சேவைத்துறையில் பணியாற்றுபவர்களுக்கு பணி ஓய்வின்பின்னர் ஓய்வூதியம் வழங்கப்படும் என்பதே இவர்கள் இதை அதிகம் விரும்பக் காரணமாகச் சொல்லப்படுகிறது.

இருந்தாலும், பெரும்பாலான பட்டதாரிகள் தனியார்துறையில் பணியாற்றுவதற்கு அவசியமான தொழிற்திறன்களைக் கொண்டிருக்காததும், இவர்கள் அந்தத் துறையில் வேலைவாய்ப்புக்களைப் பெற முடியாமைக்கு முக்கிய காரணமாக இருக்கிறது.

அதாவது, பெரும்பாலான பட்டதாரிகள் தொழில்வாண்மை உள்ளவர்களாக இல்லாதிருப்பதே அவர்களால் பட்டக்கல்வியை நிறைவுசெய்த பின்னரும் தொழில் வாய்ப்பொன்றைத் தேடிக்கொள்ளவோ அன்றி சுயதொழில் முயற்சியொன்றை ஆரம்பிக்கவோ முடியாதிருப்பதற்குக் காரணமாக இருக்கிறது.

## யார் காரணம்?

பட்டதாரிகளின் இந்த நிலைமைக்கு உண்மையில் யார் காரணம்? 3 - 4 வருடங்களாக மாணவர்களுக்கு பட்டக்கல்வியை வழங்கும் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள், இவர்களுக்கு வேண்டிய தொழில் திறன்களை ஏன் வழங்குவதில்லை?

குறைந்தபட்சம் தொழிற்சந்தையில் அதிகம் எதிர்பார்க்கப்படும் கணினி, ஆங்கிலம் மற்றும் தொடர்பாடல் திறன்கள் உள்ளிட்ட மென்திறன்கள் பல்கலைக்கழகப் பட்டக்கல்விக் காலத்தில் இவர்களுக்கு வழங்கப்படுவது அவசியமல்லவா?

பெருமளவு நிதியைச் செலவிட்டு இவர்களுக்கு பட்டக்கல்வியை வழங்கும் உயர்கல்வி நிறுவனங்கள் இவர்களுக்கு இந்த ஆற்றலை வழங்காமல் வெறுமனே பட்டத்தை மட்டும் வழங்கி தொழிலுக்காக வீதியில் இறங்கிப் போராடும் நிலைக்குத் தள்ளிவிடுவது ஏன்?

விரிவுரையாளர்களுக்கான சம்பளத்தை அதிகரிக்கவேண்டும், கல்விக்கான நிதியொதுக்கீட்டை அதிகரிக்கவேண்டும் என்றெல்லாம் போராட்டங்களை நடத்தும் பல்கலைக்கழக கல்விசார் சமூகம், இவ்வளவு நிதிச்செலவீனத்துடன் வழங்கப்படும் பட்டக்கல்வி மாணவர்களுக்கு தொழிற்திறன்களை வழங்குகிறதா என்பது குறித்தும் கவனம் செலுத்தவேண்டியது அவசியமல்லவா?

தொழிற்சங்கப் போராட்டங்களில் ஈடுபடும் விரிவுரையாளர் ஒன்றியங்களிடம், மாணவர்களின் இந்த நிலைமை குறித்த அக்கறை இருந்திருக்கவில்லை என்பதை, சில வருடங்களுக்கு முன்னர் சம்பள அதிகரிப்பு கோரி இவர்கள் தொழிற்சங்கப் போராட்டங்களை நடாத்தியபோது அவர்களிடம் நான் இதுகுறித்து வாதிட்டவேளை வெளிப்படையாக அறிந்துகொண்டிருந்தேன்.

தமது போராட்டம் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் அவர்கள் நடாத்திய இரண்டு ஊடகவியலாளர் சந்திப்புக்களின்போதும், பட்டதாரி மாணவர்கள் வேலைவாய்ப்புக்களைப் பெறமுடியாமல் இருக்கின்ற நிலைமை பற்றி நான் எழுப்பிய கேள்விகளுக்கு, அதற்குத் தாம் பொறுப்பல்ல என்றவிதமாகவே அவர்களிடமிருந்து பதில் வந்திருந்தது.

ஆக, ஒவ்வொரு வருடமும் பட்டக்கல்வியை நிறைவுசெய்துவிட்டு தொழில்வாய்ப்புக்களைப் பெறமுடியாமல் திண்டாடும் மாணவர்கள் ஒரு புறமும், மாணவர்களின் இந்த நிலைமைக்கு அவர்களுக்கு வழங்கப்படும் கல்வியில் உள்ள குறைபாடும் காரணமல்லவா என்று சிந்திக்க மறுக்கும் பல்கலைக்கழக கல்விசார் சமூகம் மறுபுறமுமாக இந்த நிலைமை நீடித்துக்கொண்டே இருக்கிறது.

## மாற்றத்துக்கான அறிகுறி

ஆனால், பொதுவான பல்கலைக்கழக கல்விசார் சமூகத்தின் இந்தப் போக்குக்கு மாறாக, சப்பிரகமுவா பல்கலைக்கழக பேராசிரியராக இருந்தவரும் தற்போது உயர்கல்வி அமைச்சுப் பொறுப்பு வகிப்பவருமான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்கவின் சிந்தனைகளும், செயற்பாடுகளும் அமைந்து வருகின்றன.

மாணவர்கள் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியவர்களாக உருவாக்கப்படவேண்டும் என்றும், அதற்கான திறன்களையும், வல்லமையையும் அவர்களுக்கு வழங்கவேண்டியதே இன்றைய உயர்கல்வித் துறையின் முதலாவது பிரதான இலக்கு என்றும் சிலோன் டுடே(20-01-2015) பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் அவர் குறிப்பிட்டிருக்கிறார். 80சதவீதமான மாணவர்கள் கைத்தொழில் மற்றும் விவசாயத் துறையிலேயே தொழில்செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது என்றும், இதற்கேற்ற வகையில் மாணவர்களைத் தயார்செய்வதே இன்றைய உயர்கல்வியின் பிரதான இலக்காக இருக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அனைத்து பட்டக்கல்விப் பாடத்திட்டங்களிலும் தொழில்வாய்ப்புக்களுக்கு அவசியமான திறன் பயிற்சிகள் உள்ளடக்கப்படவேண்டும் என்றும் தமது இந்த நேர்காணலில் குறிப்பிட்டுள்ள அவர், மாணவர்களுக்கு இலவச கல்வியையும் வழங்கி, பட்டம்பெற்ற பின்னர் இலவச வருமானத்தையும் வழங்கவேண்டும் என்பதான நிலைமை நீடிக்கக்கூடாது என்றும் வாதிடுகிறார்.

உயர்கல்வித் துறையில் மாற்றங்களை ஏற்படுத்தும்வகையில், இந்த மாற்றங்களுக்கான ஆலோசனைகளை ஆர்வமுள்ள அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் எதிர்பார்ப்பதாக அறிவித்திருக்கும் அவர், உயர்கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் இதற்கென விசேடமாக ஒரு பிரிவை உருகாக்கி, reforms@mohe.gov.lk என்ற மின்னஞ்சல் மூலமாக ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கலாம் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மாணவர்களுக்கே முதலிடம்

அதுமட்டுமல்லாமல், பல்கலைக்கழகம் அடிப்படையில் மாணவர்களுக்கானது என்ற வகையில் மாணவர்களுடனான ஊடாட்டம் அதிகரிக்கவேண்டும் என்றும் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க பல மட்டங்களிலும் வலியுறுத்திவருகிறார். பல்கலைக்கழகக் கல்வியின் பிரதான பயனாளிகள் என்ற வகையில், பல்கலைக்கழகச் செயற்பாடுகள் தொடர்பான முடிவுகளில் பங்கெடுக்கும் வாய்ப்பு மாணவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடும் அவர், பல்கலைக்கழக வரவு - செலவுத் திட்ட அறிக்கைகளை அனைவரது பார்வைக்கும் வைத்து மாணவர்களின் அபிப்பிராயங்களைப் பெறுதல், மூதவை, பேரவை உள்ளிட்ட முக்கிய உயர்மட்டங்களில் மாணவர்களின் கருத்துக்களுக்கு இடமளித்தல் உள்ளிட்ட பல யோசனைகளை முன்மொழிந்துவருகிறார்.

சொன்னதுபோலவே, சில பல்கலைக் கழகங்களுக்கு நேரில்சென்று மாணவர் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடி வரும் அவர், எதிர்காலத்தில் அனைத் துப் பல்கலைக்கழகங்களினதும் மாணவர் பிரதிநிதிகளை கிரமமாகச் சந்தித்து பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகள் தொடர்பாக அவர்களது கருத்துக்களைக் கேட்டறிய நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் ரஜீவ விஜேசிங்கவின் இந்தச் சிந்தனைகளும், நடவடிக்கைகளும், உயர்கல்வித் துறையில் பல முன்னேற்றகரமான மாற்றங்களை ஏற்படுத்தி, மாணவர் மையமாக அதன் செயற்பாடுகள் அமைய வகைசெய்யும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகின்றன. நாட்டில் தற்போது ஏற்பட்டு இருக்கும் மாற்றத்தை வெறுமனே அரசியல் ரீதியானதாக மட்டும் வியாக்கியானித்து பேசிக்கொண்டிருக்காமல், எதிர்கால சந்ததியினர் என்றவகையில் இளைஞர் சமூகத்துக்கு நன்மைபயக்கும் வகையிலான உயர்கல்வித் துறையின் இந்த மாற்றங்கள் வெற்றிபெற பல்கலைக்கழக கல்விச் சமூகம் ஒத்துழைப்பதுடன், இந்த மாற்றங்கள் குறித்து அறிந்துகொண்டு மாணவர்களும் அவற்றைத் தமக்குச் சாதமாகப் பயன்படுத்திக்கொள்ளத் தாமதிக்கக்கூடாது.

---

# திருமலை கோணமலையின் அழகுத் தோற்றம்



இருபத்து இரண்டு ஆண்டுகளின் பின், இலங்கை மணித் திருநாட்டின் கீழ்பால், 'தென்கயிலை' எனப் போற்றப்படும் திருக்கோணேச்சரம், இன்று தை 28ஆம் திகதி (2015 பெப்ரவரி 11) திருக்குடமுழுக்குப் பெருவிழா காண்கிறது. மாதுமையம்மை உடனுறை கோணைநாதர் உறையும் திருக்கோணேச்சரம், கடலோரம் அமைந்த குன்றின்மீது இயற்கை வனப்புக் கொட்டிக் கிடக்கும் சூழலில் அமைந்து விளங்குகின்றது. "குரை கடலோத நித்திலம் கொழிக்கும் கோணமாமலை" (கடல் ஆர்ப்பரிக்க, முத்துக்கள் விளையும் திருகோணமலை) என்று ஏழாம் நூற்றாண்டிலேயே அத்தலத்தைப் புகழ்ந்து பாடியிருக்கிறார் சம்பந்தப் பெருமான். அருணகிரிநாதரின் "விலைக்கு மேனியில்" எனும் திருப்புகழ் இத்தலத்து முருகனாரையே போற்றுகிறது.

மச்சகேஸ்வரம் எனச் சோழ-பாண்டிய கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் இத்தலம், வாயு புராணத்திலும் சிறப்பித்துக் கூறப்படுவதாகச் சொல்லப்படுகிறது. (வாயு புராணம் 48:20) பதின்மூன்றாம் நூற்றாண்டில் இலங்கையை வென்ற குலசேகர பாண்டியன், தன் வெற்றியைப் பறைசாற்றுமுகமாக, இங்கு இணைக்கயல் சின்னம் பொறித்துச் சென்றுள்ளான்.

இராவணன் தன் தாய்க்கு நீத்தார் கடன்செலுத்திய 'கன்னியா வெந்நீரூற்றுக்கள்' இத்தலத்தின் அருகே உள்ளன. மலையடிவாரத்தில், கடலுக்குள், பண்டைய ஆழிப்பேரலைகளில் அழிந்துபோன ஆலயமொன்றின் சிதைவை இன்றும் காணலாம்.

தாட்சாயணியின் ஒட்டியாணம் விழுந்த 'சங்கரி' எனும் சக்திபீடம் இதுவே என்பது சிலரது கருத்து. வாயு - ஆதிசேடனின் சண்டையில் சிதைத்தெறியப்பட்ட மேரு மலையின் கொடுமுடிகளில் ஒன்றாக இத்தலத்தைச் சொல்லும் 'தட்சிணகைலாச புராணம்' (16ஆம் நூற்றாண்டு) கோணேச்சரத்தின் தலபுராணமாகத் திகழ்வதுடன், இத்தலத்தை தென்கயிலை என்றும் போற்றுகிறது. இத்தலத்தை போர்த்துக்கீசியர் அழிப்பர் எனும் தீர்க்கதரிசனம் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்று, இன்றும் இங்கு காணப்படுவது இத்தலத்தின் மகிமையேதான்! "முன்னே குளக்கோட்டன்" எனத் தொடங்கும் அக்கல்வெட்டு, "குளக்கோட்ட மன்னன் கட்டும் இக்கோயிலை பறங்கியர் அழிக்க, பிற்காலத்தில் வரும் அரசர்கள் அதை மீளமைக்க எண்ணமாட்டார்கள்" என்கின்றது. அக்கல்வெட்டு கூறுவது போலவே, மன்னராட்சி ஒழிந்தபின்னரே, இன்றுள்ள ஆலயம் 1963இல் முதலாவது குடமுழுக்குக் கண்டது.

**"குரைகடல் சூழ்ந்த கோணமாமலை ...... கேட்பவர் உயர்ந்தோர்**
**சுற்றமுமாகித் தொல்வினை அடையார் தோன்றுவர் வானிடைப் பொலிந்தே"**

(திருமுறை 3:123:10)

**(சிவ பித்தன்)**






வாரம் ஒரு திருக்குறள்

**கேள்வி**

**419**

**நுணங்கிய கேள்விய**
**ரல்லார் வணங்கிய**
**வாயின ராதல் அரிது.**

நுட்பமான பொருள்களைக் கேட்டறிந்தவர் அல்லாத மற்றவர். வணக்கமான சொற்களைப் பேசும் வாயினை உடையவராக முடியாது.

பாப்பா முரசு சிறுகதை

# உழைப்பும் நேர்மையும்

எழிலூர்... பெயருக்குத் தகுந்தாற்போல எழில் வாய்ந்த ஒரு கிராமம். அந்தக் கிராமத்தில்தான் 'எழிலி' என்ற குட்டிப் பெண்ணும் அவளுடைய அம்மாவும் வாழ்ந்துவந்தனர். எழிலி அக்கிராமத்துப் பள்ளியில் இரண்டாம் வகுப்பு படித்து வந்தாள். அவள் அம்மாவுக்கு விவசாய நிலங்களில் கூலி வேலைசெய்து வரும் வருமானத்தில்தான் இருவரும் அவர்கள் தேவையை நிறைவு செய்துகொண்டனர்.

எழிலியின் அம்மாவிடம் ஒரு வெள்ளி மோதிரம் இருந்தது. அது மிகவும் பழையதாக, கறுப்பாகி இருந்ததால் அதை ஒரு டப்பாவில் போட்டு பெட்டியில் வைத்திருந்தாள் எழிலியின் அம்மா. ஒரு விடுமுறை நாளன்று பெட்டியைச் சுத்தம் செய்கையில் அந்த மோதிரம் எழிலியின் கண்களில் படவே அதை எடுத்துத் தன் விரலில் போட்டுக்கொண்டாள். அவளுக்கு அந்த மோதிரம் சற்று பெரியதுதான். இருந்தாலும் கழற்ற மனமின்றி நூல் சுற்றிப் போட்டுக்கொண்டாள். விரலில் போட்ட மோதிரம் கறுப்பாகத் தெரிகிறது என்று விளையாட்டின்போது தோழிகள் கிண்டல் செய்யவே... வீட்டுக்கு வந்த எழிலி மோதிரத்தை சோப்பும், தண்ணீரும் போட்டு தேய்த்து கழுவும்போது அந்த மோதிரத்தில் இருந்து ஒரு தேவதை தோன்றியது...!



தேவதையைப் பார்த்து முதலில் அதிர்ச்சி அடைந்தாலும் சமாளித்துக் கொண்ட எழிலி... "நீங்கள் யார்?, உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று பணிவுடனும், அன்புடனும் கேட்டாள்.

"நான் இந்த மோதிரத்தின் தேவதை. இம்மோதிரம் மிகவும் சக்தி வாய்ந்தது. கேட்டதை எல்லாம் கொடுக்கும். உனக்கு என்ன வேண்டுமோ தயங்காமல் கேள் பெண்ணே! வீடு வேண்டுமா? நிலம், நகைகள், பணம் எது வேண்டும்...? சீக்கிரமாகக் கேள். மோதிரத்தில் இருந்து வெளிவந்தால் யாருக்கேனும் எதை யாவது கொடுத்தால்தான் எனக்கு தேவதையாக இருக்கமுடியும். இல்லாவிட்டால் எனக்கு ராட்சத வடிவம் கிடைத்துவிடும் என்று எனக்கு ஒரு சாபம் இருக்கிறது" என்றது தேவதை.

உடனே எழிலி அந்த தேவதையிடம், "தேவதையே உன் சாபம் பலித்துவிடும் என்று நீ அஞ்சுகிறாய். ஆனால் யாரிடமும், எதையும் இலவசமாய் பெறக்கூடாது. உழைத்து வாழ்வதே சிறந்தது என என் தாய் சொல்லி இருக்கிறாள். உன்னிடம் இருந்து நான் எதைப் பெற்றாலும் என் தாயின் சினத்திற்கு நான் ஆளாவேன். எனவே எனக்கு எதுவும் வேண்டாம். நீ போகலாம் என்று சொல்லிவிட்டாள்.

ஆனால் தேவதை தன் சாபத்தைச் சொல்லிவிடாமல் கெஞ்சவே.... எழிலி சற்று மனமிரங்கி... "சரி தேவதையே, எங்களுக்குப் பொன்னோ, பொருளோ தேவையில்லை. எப்போதும் உழைத்து வாழவேண்டும்" என்ற உறுதியையும், "எல்லோருக்கும் உதவி செய்யவேண்டும்" என்ற நல்ல எண்ணத்தையும் எங்களுக்கு மறந்துபோகாமல் இருக்கும்படியான வரம் தரமுடியுமா? என்று கேட்டாள்.

தேவதையும் மகிழ்ந்து "ஆஹா! அப்படியே தருகிறேன். அத்தோடு இத்தனை வறுமையிலும் எதற்கும் ஆசைப்படாத உனக்கும், உன் தாய்க்கும் நோயற்ற வாழ்வோடு நீண்ட ஆயுளையும் தருகிறேன்" என்று சொல்லி மோதிரத்திற்குள் மறைந்தது. அன்று மாலை எழிலியின் தாய் வேலை முடிந்து வீட்டுக்கு வந்ததும் நடந்தவற்றை ஒன்றுவிடாமல் சொல்லிமுடித்தாள் எழிலி.

மகளைக் கட்டியணைத்து, முத்தமிட்டுப் பாராட்டிய அந்த ஏழைத் தாய் "இந்த மோதிரம் நம்மிடம் இருந்தால், ஏதேனும் ஒரு சமயத்தில் இதை உபயோகப்படுத்தி பலன் பெறலாம் என்ற எண்ணம் நமக்குத் தோன்றக்கூடும். "உழைக்காமல் பெறும் எந்த உதவியும் நமக்குப் பலன் தராது. அடுத்து வரும் தலைமுறையினருக்கும் உழைப்பின் உயர்வு புரியவேண்டும். எனவே இம்மோதிரத்தை நாம் வைத்துக்கொள்ள வேண்டாம்" என்று கூறி அதைப் பாழடைந்த கிணறு ஒன்றில் வீசிவிட்டாள் எழிலியின் அம்மா.



# ஒட்டகச்சிவிங்கி!

- **ஒட்டகச்சிவிங்கிகளில் எட்டு வகைகள் உண்டு!**
- **ஒட்டகச்சிவிங்கியின் முக்கிய உணவு இலைகள்!**
- **சுமார் 37 கிலோமீற்றர்கள் வேகத்தில் ஓடும்!**
- **ஒரு நாளைக்கு ஒட்டகச்சிவிங்கி 65 கிலோ இலைகளைத் தின்னும்!**
- **இதன் சராசரி உயரம் 16அடிகள்!**
- **ஒட்டகச்சிவிங்கியின் நாக்கு கறுப்பு நிறத்தில் இருக்கும்.**
- **ஒட்டகச்சிவிங்கியின் இதயம் நிமிடத்திற்கு 150முறை துடிக்கும்.**
- **இதன் குட்டி ஒரு ஆண்டில் 12அடிகள் வரை வளரும்!**

## விடுகதைகள்

1. குற்றம் செய்யாமலேயே குடுமி பிடிக்கிறான்... அது என்ன?
2. குட்டை பனையில் எட்டு முட்டி! அது என்ன?
3. குட்டைப் பிள்ளைக்கு குறுணி நகை! அது என்ன?
4. குட்டைத் தண்ணீரில் எட்டுக் கப்பல்... அது என்ன?
5. குட்டை மரத்தில் கொட்டாப்புளி... அது என்ன?
6. கசப்புக்காரன்... கலரில் மட்டும் பசப்புக்காரன்... அது என்ன?
7. எங்க ஊரு இரும்பு... ஏகப்பட்ட தூரம் மிதக்கும்.... அது என்ன?
8. நலம்பெற ஒரு நறுக்... அது என்ன?
9. எலும்பில்லாதவன்தான்... வம்பில்லாதவன் அல்ல... அது என்ன?

**விடைகள் :**

1. சவரத் தொழிலாளி, 2. கத்திரிக்காய், 3. கோழி மயிர் (இறகு) 4. தவளை. 5. கத்திரிக்காய். 6. குன்றிமணி. 7. கப்பல். 8. டாக்டர் போடும் ஊசி, 9. நாக்கு

## பொது அறிவு

1) வானில் பறக்கும் விமானங்களைக் கண்டறிய **ராடர்**

2) விமானம் பறக்கும் உயரத்தை அறிய **அல்டிமீற்றர்**

3) விமானங்களில் இயந்திரங்களின் செயற்பாடுகளை நுணுக்கமாய்ப் பதிவு செய்து விமானத்தின் விபத்தை அறிய - **பிளக் பொக்ஸ்**

4) நிறமாலை அளக்கும் கருவி - **ஸ்பெக்ட்ராஸ்கோப்**

5) பிரதிபலிப்பின்மூலம் டிசைன்கள் உண்டாக்கும் கருவி - **கலைடாஸ்கோப்**

6) தொலைவிலுள்ள பொருட்களைக் காண - **டெலஸ்கோப்**

7) மிகக் குறைந்த வெப்பநிலையை அளவிட - **கிரையாஸ்கோப்**

(திரவங்களின் உறைநிலை அளவிட)

8) அச்சிட்ட படங்களை திரையில் விழச் செய்ய - **எபிடாஸ்கோப்**

9) சிறு பொருளை மிகப்பெரிதாகக் காட்ட - **மைக்ரோஸ்கோப்**

10) மேகங்களின் திரை உயரம் அறிய - **சீலோமீற்றர்**

**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 02.02.2015

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1084**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1082**


**தே.கிருபரன்,**
**லைமன் வீதி, மானிப்பாய்.**

பரிசுக்குரியவர்: 1082

**பாராட்டுக்குரியவர்கள்**

01. யோ.சுதர்சினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
02. பொ.பூாவனா, யோகபுரம், மல்லாவி.
03. கா.மாதங்கி, பாண்டியன்குளம், வவுனியா.
04. என்.ஆயிஷா, பேராதனை, கண்டி.
05. க.லக்கியா, கச்சாய் வீதி, கொடிகாமம்.
07. து.அனுருத், கோவில் வீதி, மாத்தளை.
08. ஆர்.உஷா, பிரதான வீதி, மன்னார்.

**சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்**



## கர்ஜனை!

- **சிங்கம் வாழும் இடம் சமவெளிகள்.**
- **வேட்டையாடுவதில் பெண் சிங்கமே திறன்மிக்கது!**
- **தன் ஒரே முன்னங்காலால் மட்டுமே தாக்கும்.**
- **சிங்கத்தின் கர்ஜனை சுமார் 10 மைல் தொலைவுவரை கேட்கும்.**
- **ஆண் சிங்கம் ஒரு நாளைக்கு சுமார் 20 மணி நேரம் தூங்கும்.**
- **ஆண் சிங்கத்திற்கு 3 வயதுக்குமேல்தான் பிடரி மயிர் முளைக்கும்.**
- **சிங்கத்தின் நீளம் 9 அடி!**
- **வால் மட்டும் தனியாக 3 அடி நீளம்!**
- **சுமார் 12 அடி உயரம் தாவும்!**
- **சுமார் 2 அல்லது 3 குட்டிகளை பெண் சிங்கம் ஈனும்.**

# உண்மைத் தொடர்

**அதிர் இடி 78**

**தன்மீது கிடந்த கறுப்பு அழகியை விலக்கிவிட்டு, எழுந்து ரிசீவரை எடுத்த கார்லோசுக்கு அந்தச் செய்தி இடியாக விழுந்தது.**
**அவன் போட்ட சத்தத்தில் கறுப்பு அழகிகளின் தூக்கமும் கத்தரிக்கப் பட்டது. விம்மும் மார்புகள் பயத்தில் மேலும் விம்மித் தணிய அவள் வாரிச சுருட்டிக் கட்டிக் கொண்டு எழுந்தாள்.**

**இனி...**



## அற்புதன் எழுதிய

# இடி அமீன்

கடத்தல் விமானத்திற்கு பாதுகாப்புக்கு நின்ற உகண்டா துருப்புக்கள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர்.

வேட்டுச் சத்தங்கள்கூட அவர்களின் தூக்கத்தை கலைக்கவில்லை.

பணயக் கைதிகளான பயணிகளும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர்.

அவர்களுக்குக் காவலாக கார்லோஸ் குழுவினரில் இருவர் மட்டுமே விழிப்பாக இருந்தனர்.

வேட்டுக் சத்தம் கேட்டதும் தமது குழுவினரை தூக்கிக் கொண்டிருந்தோரை தட்டி எழுப்பினர்.

உகண்டா துருப்புக் களையும் கார்லோஸ் குழுவினர் தான் தட்டி எழுப்ப வேண்டி இருந்தது.

துருப்புக்களின் தூக்கக் கலக்கம் கலைவதற்கு முன்னரே இஸ்ரேல் கொமாண்டோக்கள் புயல் வேகத்தில் அவர்களை நெருங்கிவிட்டனர்.

உகண்டா துருப்பினர் நூறு பேர் வரை அங்கிருந்தனர். கார்லோஸ் குழுவினர் பதில் மூன்று பேர் இருந்தனர்.

இஸ்ரேல் கொமாண்டோக் களை நோக்கி உகண்டா துருப்பினரும், கார்லோஸ் குழுவினரும் தாக்கத் தொடங்கிய போது நிலைமை அவர்களது கைமீறிப் போயிருந்தது.

கொமாண்டோக்களது துப்பாக்கிகள் உகண்டா துருப் புக்கள் பலரது உயிர்களைச் சுவைத்துக் கொண்டிருந்தன.

தங்கள் சகாக்கள் தரையில் விழுந்துகொண்டிருப்பதைக் கண்டதும் உகண்டா துருப் பினரில் பலர் துப்பாக்கிகளைப் போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனர்.

கார்லோஸ் குழுவினர் மட்டும் இறுதிவரை தாக்கிக்கொண்டு இருந்தனர்.

கார்லோஸ் குழுவினரின் தாக்குதலில் இஸ்ரேலிய கொமாண் டோக்களை முன்நின்று வழி நடத்திய லெப்டினட் கேணல் ஜோனிக்கு படுகாயம் ஏற்பட்டது.

அவரது கழுத்தை துப்பாக்கி ரவை பதம் பார்த்தது.

அப்படியே சரிந்து யோனியை கொமாண்டேக்கள் சிலர் சூழ்ந்து கொண்டு நின்று கார்லோஸ் குழுவினரை நோக்கித் தங்கள் துப்பாக்கிகளால் சடசடத்தனர்.

எல்லாமே துரிதமாக நடந்து முடிந்தன. விமான நிலையத் திற்குள் 15 நொடிகள் மட்டுமே சண்டை நடந்தது.

அதற்குள் விமான நிலையம் முழுவதும் இஸ்ரேலிய கொமாண் டோக்களின் கட்டுப்பாட்டில் இருந்தது.

விமான நிலையம் தமது பூரண கட்டுப்பாட்டில் வந்ததும் ஷொம்ரோன் தகவல் அனுப்பினார். விமானங் களை அனுப்புங்கள். மீட்கப்பட்ட பயணி- களை ஏற்றிச்செல்ல இரண்டு விமானங்கள் ஒன்றன்பின் ஒன்றாக தரை இறங்கின.

தரையிறங்கிய விமானங்களில் மருந்துவக் குழுவும் ட்ரக் வண்டி களும் வந்து இறங்கின.

ட்ரக் வண்டிகள் விமான நிலையத்துக்குள் சென்று பயணிகளை



ஏற்றிவந்தன. மருத்துவக் குழு காயப்பட்ட கொமாண்டேக்களுக்கு விமானத்தில் வைத்து சிகிச்சை அளித்தது.

நூறு பணயக் கைதிகளில் 99 பேர் மீட்கப்பட்டனர். ஒரே ஒரு வயோதிப மாது சுகவீனம் காரண மாக உகண்டா மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

சகல நடவடிக்கைகளையும் முடித்துக்கொண்டு இஸ்ரேலிய கொமாண்டோக்களில் முதல் விமானம் புறப்படும்போது நேரம் சரியாக இரவு 11.48.

உகண்டா விமான நிலையத்தின் பாதுகாப்புக் கோபுரங்களையும் கொமாண்டேக்கள் தீமூட்டி விட்டே புறப்பட்டனர்.

சகல நடவடிக்கைகளும் 57 நிமிடங்களில் முடிவடைந்தன.

கார்லோஸ் குழுவினரில் 13 பேரும் உகண்டா துருப்புக்களில் 35 பேரும் கொல்லப்பட்டனர். 65 உகண்டா துருப்புக்கள் ஓடித்தப்பினார்கள்.

இஸ்ரேலிய கொமாண்டோக்கள் எவரும் உயிரிழக்கவில்லை. லெப்டினட் கேணல் ஜோனி உட்பட ஆறு பேர் காயமடைந்தனர்.

உகண்டா எண்டபே விமான நிலையத்துக்குள் இஸ்ரேல் கொமாண்டோக்கள் சண்டையிட்டுக் கொண்டிருக்கையில், போயிங் 707 விமானம் ஒன்று விமானம் நிலையத்தின் மேலே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அந்த விமானத்தில் இஸ்ரேலிய பாதுகாப்பு அதிகாரிகள் இருந்தனர்.

விமான நிலையத்திலிருந்து வெளியே தொடர்பு கொள்ள முடியாதபடி சகல தொடர்புகளும் கொமாண்டோக்களால் துண்டிக் கப்பட்டிருந்தன.

ஒப்பரேசன் எண்டபே முடிந்து ஐந்து நிமிடத்தின் பின்னர்தான் உகண்டா இராணுவத் தலைமையகத்திற்குள் தகவல் தெரிந்தது.

இடி அமீனின் மாளிகையில் கறுப்பு அழகியைக் கட்டி அணைத்தபடி கிடந்த கார்லோஸை தொலைபேசி அவசரமாக அழைத்தது.

தன்மீது கிடந்த கறுப்பு அழகியை விலக்கிவிட்டு எழுந்து ரிசீவரை எடுத்த கார்லோசுக்கு அந்தச் செய்தி இடியாக விழுந்தது.

அவன் தன்னை மறந்து இஸ்ரேலியர்களை மிக மோசமான கெட்ட வார்த்தை களால் திட்டிக் கத்தினான்

அவன் போட்ட சத்தத்தில் கறுப்பு அழகிகளின் தூக்கமும் கத்தரிக்கப்பட்டது. விம்மும் மார்புகள் பயத்தில் மேலும் விம்மித் தணிய அவள் வாரிச் சுருட்டிக் கட்டிக் கொண்டு எழுந்தாள்.

ஆபிரிக்க நாடுகளது மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற இடி அமீனுக்குப் பயந்து பயந்து தகவலைக் கூறினார் இராணுவ அதிகாரி.

இடி அமீனுக்கு இரத்தம் கொதித்தது. அவனுக்கு இஸ்ரேலியர்கள்மீது ஏற்பட்ட கோபத்தைவிட தனது துருப்புக்கள் பயந்தாங்கொள்ளி க்ளாக இருந்ததை நினைக்கத் தான் பயங்கரக் கோபம் வந்தது.

ஆபிரிக்க நாடுகளது மாநாட்டில் இருந்து பாதியி- லேயே புறப்பட்டான்.

என்டபே விமானநிலையத்தில் தான் அமீன் சென்று இறங்கினான்.

சென்று இறங்கியதும் அமீன் கேட்ட முதல் கேள்வி.

உயிர்தப்பிய அந்த நாய்கள் எங்கே?

தாக்குதலின்போது தப்பி ஓடிய துருப்பினர் 65 பேரில் எவரும் மறுபடி வேலைக்குத் திரும்பவில்லை.

சம்பவம் நடந்தபோது பொறுப்பிலிருந்த பாதுகாப்பு அதிகாரிகள் சிலரும் தலை மறைவாகியிருந்தனர்.

இடி அமீனின் குணம் தெரிந்தே அவ்வாறு செய்து இருந்தனர்.

(தொடரும்)

---

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 613

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | | 17 | 18 |
| 19 | 20 | | 22 | 23 | 24 |
| 25 | | 27 | 28 | 29 | 30 |
| 31 | | 33 | 34 | 35 | |

## குறுக்கெழுத்துப் போட்டி 611 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க 1 | ரி 2 | க் 3 | கோ 4 | ச் 5 | சி 6 |
| ற் 7 | வ 8 | | | | ட் 12 |
| றா 13 | தி 14 | ணி 15 | | அ 17 | ல் 18 |
| ழை 19 | கு 20 | | உ 22 | த 23 | டு 24 |
| | ரை 26 | வீ 27 | | க் 29 | த 30 |
| நீ 31 | க் 32 | ழி 33 | ர் 34 | கு 35 | மி 36 |

### இடமிருந்து வலம்

01. இதயத்திற்கு நன்மை அளிக்கக் கூடிய உணவுப் பொருட்களில் ஒன்று.
07. தமிழ் வருடங்களில் ஒன்று.
10. எமது சுவாமி ; எனது தந்தை. (குழம்பியுள்ளது)
13. வணக்கம் . (திரும்பியுள்ளது)
17. ஒரு சாரியை உருபு.
19. பருந்து ; மரக்கலம்
22. பெண்பால் படர்க்கைச் சுட்டு. (குழம்பியுள்ளது)
27. "குணம் .....க் குற்றம் ...... யவற்றுள் மிகை... மிக்க கொளல்"
33. ஒரு வியாதி ; கைத்துண்டு.

### மேலிருந்து கீழ்

01. செருக்கு.
02. எல்லோருடைய வாழ்க்கையும் ....... ஆவதில்லை ..... ஆனவர்கள் யாரும் தனக்காக வாழ்ந்ததில்லை. - காமராஜர்.
05. இந்த மலரை. பெண்களின் பட்டுப்போன்ற மென்மையான கைவிரல்களுக்கு கவிஞர் ஒப்பிடுவர்.
06. ...... இருக்க அம்பை நோவானேன். (குழம்பியுள்ளது)
22. அதிமதுரம் ; செஞ்சந்தனம் (குழம்பியுள்ளது)
27. துளிர்மரம் ; இளமை.

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **02.02.2015** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 613
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167. யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 611 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி.**

**எம்.ஆஜித், பசல்ஸ் லேன், வெள்ளவத்தை.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. ம.தமயந்தி, பிரதான வீதி, பதுளை.
02. கா.சர்மினி, கொடிகாமம் வீதி, புலோலி.
03. பு.றமில்டன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
04. எம்.நுஃமான், தர்ஹாநகர்.
05. பா.அஜேந்தினி, மீசாலை வடக்கு, மீசாலை.
06. சா.அினந்தி, முள்ளியவளை, முல்லைத்தீவு.
07. தி.பாவனா, ரெட்பானா, விசுவமடு.
08. என்.பாலகுமார், வாகரை, மட்டக்களப்பு.
09. கு.நிருஜன், எட்டியாந்தோட்ட.



# விஜய் படத்தில் விக்ரம்

தமிழ் சினிமா திரையுலகத்தில் விஜய் மற்றும் விக்ரம் மிகவும் நெருங்கிய நண்பர்கள். இந்நிலையில் விக்ரம் அடுத்து கௌதம்மேனன் இயக்கத்தில் நடிக்கவிருக்கிறார் என கூறப்படுகிறது. மேலும், சில வருடங்களுக்கு முன் யோகன் என்ற படத்தின் மூலம் விஜய்-கௌதம் மேனன் இணைவதாக இருந்து அப்படம் பின்பு கைவிடப்பட்டது. தற்போது இதே படத்தை தான் மீண்டும் விக்ரமை வைத்து கௌதம் இயக்கவிருக்கிறார் என கோலிவுட் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

புலிக்கு பி
நிருபித்தவர்கள்
ஒருவர்.இசைய
லும் தன் திற
எடுக்கவுள்ளார்.
தற்போது உள்
களம் இறங்க

## மீண்டும்

சூர்யா-
வெளிவந்த 'பட
ிய தோல்வியை
ராசியில்லை என
சூர்யா அடுத்து
குமார் இயக்கவி
என்று தலைப்பு
இவருக்கு ஜோடி
நடிக்கவுள்ளாரா
முடிந்த கையோ
எதிர்பார்க்கப்ப



# யுவனுக்கு புறக்கணிப்பு?

சிம்பு, யுவன் இருவரும் நல்ல நண்பர்கள் என அனைவருக்கும் தெரியும், மன்மதன், வல்லவன், சிலம்பாட்டம், வானம் என இவர்கள் கூட்டணியில் வந்த படங்களின் பாடல்கள் அனைத்தும் செம ஹிட் தான். இதேபோல் சில வருடங்களுக்கு முன் வேட்டை மன்னன் என்ற படத்திற்கு பூஜை முதல்கட்ட படப்பிடிப்பு முடிந்தது. இதில் சிம்பு, ஹன்சிகா இணைந்து நடிக்க, யுவன் இசையமைக்க இருந்தார். ஆனால், படம் பாதியிலேயே நின்றது, தற்போது நீண்ட இடைவேளைக்கு பிறகு மீண்டும் இப்படத்தின் படப்பிடிப்பு தொடங்கவுள்ளது. ஆனால், இசையமைப்பாளர் யுவன் இல்லை, அனிருத்தாம். ஏன் இந்த மாற்றம் என்று யாருக்கும் தெரியவில்லை.

# அலட்டிக் கொள்ளாத இயக்குநர்

என்னை அறிந்தால் படம் தொடர்ந்து இரண்டாவது வாரமும் நல்ல வரவேற்பு பெற்றுவருகிறது. இந்நிலையில் இப்படத்தின் இயக்குனரான கௌதம்மேனனுக்கு, அஜித் போன் செய்து வாழ்த்து கூறியுள்ளார். இது மட்டுமில்லாமல் கௌதம் "சேர் படம் உங்களுக்கு திருப்தியா இருக்கா?" என்று கேட்டுள்ளார். அதற்கு அஜித் "சேர் நீங்க நிம்மதியா இருக்கீங்களா, அதுபோதும்" என்று கூறியுள்ளார். மேலும், படம் இலாபம், நஷ்ட கணக்கெல்லாம் வேண்டாம், நம் அடுத்த வேலையை பார்க்கத் தொடங்குவோம்" என கூற கௌதம் இப்படியும் சிலர் இருக்கிறார்கள் என மெய் சிலிர்த்துபோனாராம்.

# குளிர்பானத்தில் விஷால்

இளைய தளபதி விஜய் என்றாலே பொக்ஸ் ஓபிஸின் செல்லப்பிள்ளை என்றே கூறலாம். அந்த அளவிற்கு தான் நடிக்கும் அனைத்து படத்தையும் ஹிட் அடிப்பதில் வல்லவர். இவர் சினிமா மட்டுமின்றி பல விளம்பர படங்களிலும் நடித்தார். இதில் குறிப்பாக விஜய்யின் கொக் விளம்பரம் மிகவும் பிரபலம். இவரை தொடர்ந்து அடுத்து நடிகர் விஷால் பிரபல குளிர்பான விளம்பரத்தில் நடிக்கவுள்ளார். சமீபத்தில் தன் இதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.




# வதந்திக்கு முற்றுப்புள்ளி

சிவகார்த்திகேயன் இந்த நிலைமையில் இருக்கிறார் என்றால் அதற்கு முக்கிய காரணம் தனுஷ்தான். ஆனால், சிலநாட்களாகவே இருவரும் சரியாக பேசிக்கொள்வது இல்லை என ஒரு வதந்தி இருந்துவந்தது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்தில் காக்கிசட்டை படத்தின் இயக்குனர் துரை. செந்தில்குமார் ஒரு முன்னணி நாளிதழ் ஒன்றில் மனம் திறந்துள்ளார். இதில் 'எதிர் நீச்சல்' படத்துக்கே சிவகார்த்திகேயன் கேட்ட சம்பளத்தை விட அதிகமாக கொடுத்தவர் தனுஷ். அதேபோல 'காக்கி சட்டை' படத்துக்கு சிவா கேட்ட சம்பளத்தைவிட அதிகமாகத் தான் கொடுத்தார். அவர்கள் இருவரும் இப்போதும் நல்ல நண்பர்கள். சிவாவின் வளர்ச்சி தனுஷுக்கு பிடிக்க வில்லை என்றெல்லாம் செய்திகள் வருகின்றன. இதில் துளிகூட உண்மையில்லை என்று கூறியுள்ளார்.

# கொலைவெறியால் தலைவலி!

தனுஷ் தற்போது அனேகன் படத்தின் ப்ரோமோ களில் பிஸியாக இருக்கிறார். இப்படத்தின் தெ 'அனேகடு'வின் பத்திரிக்கையாளர் சந்திப்பில் சமீ கலந்துகொண்டார். இதில் த பத்திரிகையாளர்கள் கொல பாடச்சொல்லி கோரிக்கை வை ஆனால், அவர் "என்னை மிகவும் டார்ச்சர் செய்கிறது. பிடிக்கும், அதற்காக செல்லும் பாடச்சொன்னால் எப்படி" என்று



# சூர்யாவின் ஹைக்கூ

சூர்யா தற்போது மாஸ் படத்தில் பிஸியாக நடித்து வருகிறார். இதை தொடர்ந்து 24 என்ற படத்தில் நடிக்கவுள்ளார். இவர் நடிப்பது மட்டுமில் லாமல் சிங்கம்-2 படத்தை தன் சொந்த தயாரிப்பு நிறுவனமான 2டி மூலம் தயாரித்தார். தற்போது பாண்டிராஜ் இயக்கும் ஒரு படத்தை தயாரிக்கவுள்ளார். படத்திற்கு ஹைக்கூ என பெயரிட்டுள்ளனர். இப்படம் முழுவதும் சிறுவர்களை மையப்படுத்தி எடுக்கப்படவுள்ளதாம். மேலும், சூர்யா மற்றும் அமலாபாலும் கெஸ்ட் ரோலில் இப்படத்தில் வந்து செல்வதாகக் கூறப்படுகிறது.

# தயான்

விஜய் படங்களை இயக்குவதற்குத் தான் தயாராக இருப்பதாகவும் இளதளபதி விஜய் கால்ஷீட் கொடுக்கும் பட்சத்தில் அதைச் செய்வது தனக்கு எவ்விதமான சஞ்சலங்களும் இல்லையெனவும் சொல்லியிருப்பவர் யார் தெரியுமா? சமிதாப் மரியானா ஆகிய படங்களை வெற்றி கரமாக திரைகளில் களைகட்டி இருப்பதைப் பார்த்து அகமகிழ்ந்து இருக்கும் தனுஷ்தான் இவ்வாறு சொல்லி யிருக்கின்றார் ருவிட்டர் தளம் ஒன்றில் விஜய் ரசிகர்களுக்கு நடக்குமா பார்ப்போம்.

# புலிக்கு பிறந்தது...

புலிக்கு பிறந்தது பூனையாகுமா? என்ற பழமொழியை நிஜ வாழ்க்கையிலும் நிரூபித்தவர்கள் பலர். அதில் கமல்ஹாசன் அவருடைய மகள் ஸ்ருதியும் ஒருவர். இசையமைப்பாளர், பாடகி, நடிகை என அனைத்து துறைகளிலும் தன் திறமையை நிரூபித்த ஸ்ருதி, அடுத்து இயக்குனர் அவதாரம் எடுக்கவுள்ளார். இதற்காக கதை மற்றும் திரைக்கதை அமைக்கும் பணியில் தற்போது உள்ளாராம். முதலில் குறும்படம் பின்பு வெள்ளித்திரை படம் என களம் இறங்கவுள்ளாராம்.

## மீண்டும் இணையும் ஜோடி

சூர்யா-சமந்தா நடிப்பில் சென்ற வருடம் வெளிவந்த படம் அஞ்சான். இப்படம் பெரிய தோல்வியை சந்தித்ததால் இந்த ஜோடி ராசியில்லை என்று கூறப்பட்டது. இந்நிலையில் சூர்யா அடுத்து நடிக்கும் படத்தை விக்ரம் குமார் இயக்கவிருக்கிறார். இப்படத்திற்கு 24 என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. இதில் இவருக்கு ஜோடியாக மீண்டும் சமந்தாதான் நடிக்கவுள்ளாராம். இப்படம் மாஸ் படம் முடிந்த கையோடு ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# வேட்டையாடுகிறார் விஷால்!

விஷால் நடிப்பில் வெளிவந்த பாண்டிய நாடு அவரின் திரைப்பயணத்தில் பெரிய மாற்றத்தை தந்தது. இப்படத்தின் இயக்குனர் சுசீந்திரன்மீது விஷாலுக்கு மிகுந்த மரியாதை வந்துவிட்டது. இதன்காரணமாகவே இவர் அடுத்து இயக்கிய ஜீவா படத்தை விஷாலே வெளியிட்டார். இதை தொடர்ந்து மீண்டும் சுசீந்திரன் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்கவிருக்கிறார். இப்படத்திற்கு தற்போதைக்கு வேட்டையன் என்று தலைப்பு வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த டைடிட்லை பி.வாசு அவர்களிடன் இருந்து உரிமம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.



லொடுக்குப் பாண்டி

## இணைய உலகில் மணிரத்னம்

இந்திய சினிமாவே வியந்து பார்க்கும் தமிழர் மணிரத்னம். இவரது படங்கள் எல்லாம் மிகவும் தரமாகவும், மேல்தட்டு ரசிகர்கள் விரும்பக்கூடியதாகவும் இருக்கும். அந்தவகையில் தற்போது அலைப்பாயுதே ஸ்டைலில் ஓகே கண்மனி என்ற படத்தை இயக்கிவருகிறார். இப்படத்தின் பர்ஸ்ட் லுக் வெளிவந்தது. மேலும், தன் மெட்ராஸ் டாக்கீஸின் அதிகாரபூர்வமான டுவிட்டர், பேஸ்புக் பக்கங்களை தொடங்கினார். இதை தொடர்ந்து ஆயிரக்கணக்கான ரசிகர்கள் லைக் மற்றும் பாலோ செய்தனர்.

## நயனை வாங்கியது பெரிய நிறுவனம்

நயன்தாரா தற்போது மாஸ் படத்தில் பிஸியாக நடித்துவருகிறார். மேலும், அருந்ததி படத்தை போல ஹீரோயினுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மாயா என்ற படத்திலும் நடிக்கிறார். இப்படம் பேய் மற்றும் திகில் கதையம்சம் கொண்டது எனக் கூறப்படுகிறது. இந்நிலையில் தற்போது மாயாவை தேனாண்டாள் பிலிம்ஸ் வாங்கியுள்ளது. ஏற்கனவே இந்நிறுவனம் பிசாசு படத்தை வெளியிட்டது, மேலும், அருள் நிதி நடிக்கும் பேய் படமான டிமான்டி காலனி படத்தை வாங்கியுள்ளது.

## தனுஷ் அறிந்தது

தனுஷ், அனேகன் படத்திற்காக ரசிகர்களிடம் டுவிட்டரில் பேசினார். அப்படி பேசுகையில், ஒரு அஜித் ரசிகர் என்னை அறிந்தால் படம் பார்த்தீர்களா? என்று கேட்டார். அதற்கு அவர் பட ப்ரோமோஷன் வேலைகளில் பிஸியாக இருந்தேன். அதனால் பார்க்கமுடியவில்லை. ஆனால், எல்லோரும் கூறுவதை கேட்டேன். தல படத்தில் கலக்கி இருக்கிறார் என டுவிட் செய்திருந்தார்.

## விட்ட இடத்தை பிடிப்பாரா சிம்பு?

சிம்பு படம் வெளிவந்து கிட்டத்தட்ட 2 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. ஆனால், சமீபத்தில் வெளிவந்த அவரின் இது நம்ம ஆளு படத்தின் டீசருக்கு நல்ல வரவேற்பு இருந்தது. இந்த சந்தோ'த்தில் இருந்து வெளிவராத சிம்புவிற்கு, அடுத்து செல்வராகவன் படத்தில் கமிட் ஆனது இன்னும் உற்சாகத்தை தந்துள்ளது. இந்த வருடம் குறைந்தது 3 சிம்பு படமாவது திரைக்கு வரும் எனக் கூறப்படுகிறது. இதனால், விட்ட இடத்தை இந்த வருடத்திலேயே சிம்பு பிடிப்பார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.





ரொம்ப நல்லவண்டா நீ

...பால்

... படத்தின் ப்ரோமோஷன் வேலை ... இப்படத்தின் தெலுங்கு பதிப்பான ...ளர் சந்திப்பில் சமீபத்தில் இதில் தனுஷிடம் ... கொலைவெறி பாடலை வைத்துள்ளனர். இந்தா பாடல் எனக்கு பாடுவது இடமெல்லாம் கூறியுள்ளார்.

...ள்ளதாம். ... மற்றும் ... கெஸ்ட் ...டத்தில் வந்து கூறப்படுகிறது.

# தேன் கிண்ணம்

# ஏக்கம்

அன்பே!
பலர் அன்பை தொலைத்து விட்டு
உன் அன்புக்கு ஏங்கினேன்
உன் அன்புக்கு அடிமையான
என்னை பொய்யான
உன் அன்பால் ஏமாற்றிவிட்டாய்
இருந்தும் காத்திருக்கிறேன்
உன் உண்மையான அன்புக்காக....

யோ.யாழினி,
பரந்தன்.



# வாழ்வின் சாயல்கள்

தொலைவுகள்
தூரமாகிப் போனதால்
என் நகர்வுகளும்
நீண்டு போகின்றது.

உணர்வுகள்
விலங்கிடப்பட்டதால்
உத்வேகங்களும்
தடைகளைத்
தாண்ட துடிக்கின்றன.

புதிய ஜனனங்கள்
பின்வாங்கிப் போனதால்
நாட்களும் நகர்ந்து
நரைத்துப் போனது.

நீர்த்துப் போன
நித்தியங்களில்
சத்தியமும் சதா
சாய்ந்து போனது.

இழப்புக்கள்
இனங்காணப்பட்டதால்
இம்சைகளும்
காணாமறபோனது.

நேற்றைய
பொழுதின்
கிளிஞ்சல்களில்
மனம் இன்னும்
ஊசலாடுகின்றது.

பொய்த்துப் போன
நம்பிக்கையின்
துளிர்களில்
அரும்புகள்
தென்படுகின்றன...
விருட்சங்களை
பிரசவிப்பதற்கு...

க.நர்கேஸ்வரா,
சண்டிலிப்பாய்.



# முதிர்குமரன்!!

என் தந்தை என் சிரசின் மேல்
பல சுகமான சுமைகளை
மெழுகுதிரியாய் ஏற்றி வைத்து
அணைத்துக் கொண்டார்!!

தாயின் நோய்க்கு மருந்தாக
அக்காவின் திருமணத்திற்கு சீதனமாக

தங்கையின் படிப்புக்கு செலவாக
தம்பியின் வேலைக்கு ஊதியமாக

நானும் உருகிக் கொண்டிருக்கிறேன்
ஒர் முதிர்குமாரனாக!!

அகவைகள் நாற்பதை
நான் தொட்டிட்ட போதும்
எனக்கு இவை அத்தனையும்
சுகமான சுமைகளே!!!

எம்.யூ.அல்சாத்,
ஓட்டமாவடி.



# துடிப்பில்லா படகாக...



நெஞ்சம் கொண்ட வஞ்சம்
மஞ்சம் வந்து கொஞ்ச
கிஞ்ஞித்தும் அஞ்ஞாமலே
கரைபுரண்டோடி கனன்றது!

கொஞ்ஞிப் பேசியபோது
வஞ்ஞியவள் வரவு தேனாக
நஞ்ஞென்று நவின்றபோது
கசந்திட்ட வாழ்வாக!

துர்க்கித்து தர்க்கித்து
வெருண்டெழுந்து வெப்கித்து
துவண்டிட்ட சோகமதை
சொல்லியழ யாருமில்லா அவலம்!

நிறம் மாறும் பச்சோந்தியாய்
நின்றுவிட்ட துணையதால்
நிர்க்கதியான நிலையில்
அவள், துடிப்பில்லா படகாக!

அப்ரார் ஏ. அஸீஸ்,
யாழ்ப்பாணம்.

# அடுத்தவனை நம்பலாமா?

எவருக்காகவாவது
இரக்கப்படுகிறவர்கள்
எவராவது...
இருக்கிறார்களா
என்றால்
இல்லையென்பதே
எஞ்சிய விடையாகும்.

அடுத்தவன்
காலை நம்பி
அயல் தேசம்
போனவன்...
சொந்தக் கால்
சிதைக்கப்பட்டு
சிலவேளை
சுருக்கிட்டும்
சாகலாம்...

சொந்த வீட்டு
சுமங்கலியை
அடைவு வைத்தால்...
வாடகை
வீட்டிலிருந்து
வட்டி குட்டியுடன்
வேதனையும் வரலாம்...

விசங்களுக்கெல்லாம்
வசியமாகிவிட்டால்
பருவமடைய முன்னர்
பிரசவ மாவதும்...
விசாரணைக்கு முன்னர்
தீர்ப்புகள் பெறுவதும்...
தவிர்க்க முடியாது
போகலாம்.

மலரவிருந்த
மொட்டதுகள்
வேறறுத்த
விளைநிலத்தில்
கருக்கப்பட்டபோது
கரைந்திடாத
காகங்கள்...
நாற்றமடிக்கும்
சாம்பலில்
நரிகளுடன் சேர்ந்து
நாடகமாடுகின்றன.
நடக்க முடியாதவனுக்கும்
நலமடிக்க
முற்படுகின்றன.

வே.முல்லைத்தீபன்,
ஒட்டுசுட்டான்.




## வரும் நாட்களில் ஆட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| 19 பெப்ரவரி | ஐ.அரபு எமிரேட்ஸ் | Vs | சிம்பாவே |
| 20 பெப்ரவரி | நியூசிலாந்து | Vs | இங்கிலாந்து |
| 21 பெப்ரவரி | பாகிஸ்தான் | Vs | மே.இந்திய தீவுகள் |
| 21 பெப்ரவரி | அவுஸ்திரேலியா | Vs | பங்களாதேஷ் |
| 22 பெப்ரவரி | ஆப்கானிஸ்தான் | Vs | இலங்கை |
| 22 பெப்ரவரி | இந்தியா | Vs | தெ.ஆபிரிக்கா |
| 23 பெப்ரவரி | இங்கிலாந்து | Vs | ஸ்கொட்லாந்து |
| 24 பெப்ரவரி | மே.இந்தியத் தீவுகள் | Vs | சிம்பாவே |
| 25 பெப்ரவரி | அயர்லாந்து | Vs | ஐ.அரபு எமிரேட்ஸ் |
| 26 பெப்ரவரி | ஆப்கானிஸ்தான் | Vs | ஸ்கொட்லாந்து |
| 26 பெப்ரவரி | பங்களாதேஷ் | Vs | இலங்கை |

## உலகக் கிண்ணத்தில் அதிக சதம் அடித்தோர்

| | |
|---|---|
| சச்சின் டெண்டுல்கார் | - 6 |
| ரிக்கிபொன்ரிங் | - 5 |
| சவ்ரவ் கங்குலி | - 4 |
| மார்க்வோ | - 4 |

## இலங்கை அணியின் பாதை

| | |
|---|---|
| 1975 | முதல் சுற்று |
| 1979 | முதல் சுற்று |
| 1983 | முதல் சுற்று |
| 1987 | முதல் சுற்று |
| 1992 | முதல் சுற்று |
| 1996 | சம்பியன்ஸ் |
| 1999 | முதல் சுற்று |
| 2003 | அரையிறுதிப் போட்டி |
| 2007 | இரண்டாம் இடம் |
| 2011 | இரண்டாம் இடம் |



**அதிக ஓட்டங்கள்:**
சச்சின் டெண்டுல்கர் 673 (2003)

**அதிக பிடிகள்:**
1. ரிக்கிபொன்ரிங் -28 பிடிகள்
2. ரிக்கிபொன்ரிங் -
(ஒரு தொடரில் 11 -2003)

**உலகக் கிண்ணப் போட்டிகளில்:**
அதிக ஓட்டங்கள்: - 2278
சச்சின் டெண்டுல்கார்

**அதிக ஆட்டங்கள்:**
1. ரிக்கிபொன்ரிங்
46 ஆட்டங்கள்

**அணித்தலைவராக:**
2. ரிக்கிபொன்ரிங்
29 ஆட்டங்கள்

**தனி நபர் அதிக ஓட்டம்:**
கெரிகேர்ஸ்ரன் - 188.



## உலகக் கிண்ணத்தில் பெறப்பட்ட சதங்கள்

| | |
|---|---|
| 1975 | 06 |
| 1979 | 02 |
| 1983 | 08 |
| 1987 | 10 |
| 1992 | 08 |
| 1996 | 14 |
| 1999 | 11 |
| 2003 | 21 |
| 2007 | 18 |
| 2011 | 24 |

# சரிவராது

**மேற்கிந்திய** உலகக் கோப்பை கிரிக்கெட் அணியில் இரண்டு அதிதிறமைசாலிகளான டுவைன் பிராவோ மற்றும் கெய்ரொன் பொலார்ட் இல்லை என்பதை அறிந்தபோது கிரிக்கெட் ரசிகர்கள் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானார்கள். மே.இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கும், கிரிக்கெட் சபைக்கும் இடையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பனிப்போர் யாரும் அறியாததல்ல. இந்திய சுற்றுப் பயணத்தை இடையில் முறித்துக்கொண்டு தாயகம் திரும்பியர்கள் மே.இந்திய அணியினர். இதுவும்கூட இவ்விரண்டு வீரர்களின் தவிர்ப்புக்குக் காரணமாக இருந்திருக்கலாம். இப்போது இவ்விருவரும் அணியில் சேர்க்கப்படாதது பற்றி அணித் தலைவர் ஜேஸன் ஹோல்ட் வாய் திறந்திருக்கிறார். இவர் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான், யாரும் எதிர்பாராதவகையில் அணித்தலைமைக்கு நியமிக்கப்பட்டார்.



அவர் இப்போது பேசும்போது, இந்த இரண்டு வீரர்களும் அணியில் இல்லை என்பது மிகப்பெரிய இழப்பாகும்.

இருவருமே சர்வதேச கிரிக்கெட் அரங்கில் மிகவும் முக்கியமானவர்களும், பிரபல்யமானவர்களும் ஆவார்கள். ஆனால் இவர்கள் சேர்க்கப்படாதது பற்றி நான் கருத்துக் கூறமுடியாது. ஏனெனில் நான் அணித்தெரிவாளர் அல்ல. இந்த விடயம் எங்கள் கட்டுப்பாட்டுக்குள் இல்லை. இந்த இரண்டு ஜாம்பவான்களும் இல்லாமலே எம்பணியை நாம் முன்னெடுத்துக் செல்லவேண்டும் என்று தன் கருத்துக்களை முன்வைத்துள்ளார். இந்த 23 வயதேயான அணித்தலைவர் மே.இந்திய கிரிக்கெட் வரலாற்றில் மிகக்குறைந்த வயதில் அணித் தலைமையைப் பெற்றவர் என்ற பெருமையையும் இவர் பெறுகிறார்.

எனினும் உள்வீட்டுப் பிரச்சினைகளால், பலவீனப்பட்டு ஒரு அணியில் தலைமையை ஏற்கும் துரதிர்ஷ்டவாசியாக இவர் இருக்கிறார். எது எவ்வாறாயினும் மிகப்பெரிய கிரிக்கெட் அரங்கு ஒன்றிற்குப் பொருத்தமான அணியாக மே.இந்திய அணி தெரியவில்லை. இந்தவகையில் ஜேஸன் ஹோல்டர் பரிதாபத்துக்கு உரியவர்.

# நாயகன்

**உலகக்** கிண்ணப் போட்டிகள், மஹேலவைப் பொறுத்தவரை நிறைய பதிவுகளைக் கொண்டது. இவர் இவ்வருடத்துடன் சர்வதேச கிரிக்கெட்டில் பதினெட்டு வருடங்களைப் பூர்த்தி செய்கிறார். அதுமட்டுமன்றி 2015 உலகக் கிண்ணப் போட்டிகள் மஹேல பங்குபற்றும் ஐந்தாவது போட்டியாகும்.

இவரைத் தவிர ஐந்து உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடிய இலங்கை வீரர்கள் அர்ஜுன ரணதுங்க, அரவிந்த டி சில்வா, சனத் ஜயசூரியா, மற்றும் முத்தையா முரளிதரன் ஆவார்கள்.

மஹேலவின் ஐந்து உலகக் கிண்ணப் போட்டிகளைப் பார்த்தால் இரண்டு இறுதிப் போட்டிகளில் விளையாடியுள்ளார். இதில் ஒரு போட்டியில் அணித்தலைவராக இருந்துள்ளார். இன்னொரு போட்டியில் அதிகூடிய ஓட்ட எண்ணிக்கைகள் கொண்டவராக இருந்திருக்கிறார்.



இதுவரையில் சனத்ஜயசூரிய 38 உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடியுள்ளார். ஆனால் தற்போது 33 போட்டிகளில் விளையாடியுள்ள மஹேல, 2015 உலகக் கிண்ணப் போட்டிகள் முடிவடையும் போது இதனை மேவிவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னொருபுறம் உலகக் கிண்ணப் போட்டிகளில் அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை என்பது ஜய சூரியவிடமே இருக்கிறது. (1165 ஓட்டங்கள்) மஹேல 975 ஓட்டங்களுடன், சங்கக்காரா 999 ஓட்டங்களுடன் தற்போது இருக்கிறார்கள். அனேகமாக உலகக் கிண்ணப் போட்டிகள் முடிவடையும் போது ஜயசூரியா மூன்றாவது இடத்திலேயே இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மஹேலவின் அதிதிறமையான வெளிப்பாடுகள் சிலவும் சுட்டிக்காட்டப்படுகின்றன. 2011இல் இறுதிப் போட்டியில் இந்தியாவிடம் இலங்கை தோற்றாலும் கூட மஹேல அற்புதமான சதம் ஒன்றை அடித்திருந்தார். அதேபோல மே. இந்தியத் தீவுகளில் நடைபெற்ற ஒரு ஆட்டத்தில் நியூசிலாந்தைத் தோற்கடித்து இறுதி ஆட்டத்துக்கு முன்னேற மஹேலவின் சதமே காரணமாக இருந்தது.

இந்த நிலையில் இம்முறையும் மஹேலவிடம் கடந்த காலத் திறமைகள் மீண்டும் வெளிப்படவேண்டும் என்றே எல்லோரும் எதிர்பார்க்கின்றார்கள். அது இலங்கை அணியை முன்னோக்கி நகர்த்த பெரும் உதவியாகவும் இருக்கும்.

# அவதானம் தேவை

**எல்லை** மீறிய மைதான வார்த்தையாடல் அருவருப்பானது என்பதை ஐ.சி.சி இப்போது நன்குணர்ந்துள்ளது போலத் தெரிகின்றது. ஒரு எல்லைக்கப்பால் வாய்மொழி பிழைத்தால் கடும் தண்டனைக்கு உள்ளாகவேண்டி வரும் என்று ஐ.சி.சி உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குகொள்ளும் அத்தனை அணிகளுக்கும் எச்சரிக்கை செய்துள்ளது.

அவர்கள் கூறும் முக்கிய காரணம் ஒன்று மிகுந்த அவதானத்துக்கு உரியது.

கிரிக்கெட் ஆட்டங்களைப் பார்க்கும் இளம் சமுதாயம் இவற்றால் பிழையாகக் கவரப்படும் என்பதே அதுவாகும். எல்லைக்கப்பால் சென்றால் முதல் முறை சாதாரண அபராதத்துடன் நிறுத்திக் கொள்வோம். ஆனால் தொடர்ந்தும் எல்லைமீறிய செயற்பாடு அவதானிக்கப்பட்டால், தயங்காமல் ஆட்டங்களில் இருந்து தடுத்துவிடுவோம்.

அதுமட்டுமல்ல, இந்தவகையில் இனங்காணப்பட்ட வீரர்கள் பலர் முன்னதாகவே அவதானிக்கப்பட்டு குறித்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் மிகக் கவனமாக இருக்கவேண்டும் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்தவகையில் டேவிட் வோர்ணர், இந்திய வீரர்கள் வருண் ஆரோன், ரோகித் ஷர்மா இருவருடனும் வாக்கு வாதப்பட்டு எச்சரிக்கப்பட்டவர். அதுமட்டுமல்ல இஷாந்த் சர்மா, மிட்சல் ஜோண்சன் போன்ற இன்னும் பலரும் நல்லவர்கள் அல்ல. இதற்கு ஒரு பட்டியலே தயாரிக்கலாம். இதனைக் குறைக்க நியூசிலாந்தின் முன்னாள் தலைவர் மாட்டின் குறோ, உதைபந்தாட்டத்தில் பின்பற்றப்படுவது போல மஞ்சள் அட்டை, சிவப்பு அட்டை முறைமையைக் கொண்டு வரவேண்டுமென்றும் ஒரு ஆலோசனையை முன்வைத்திருந்தார். இதுவும் வரவேற்கத்தக்கதே.

வார்த்தைப் பிரயோக எல்லை மீறலில் இன்னொரு கோணம் உண்டு. அதுபற்றி வோர்ணரே ஆதங்கப்பட்டிருந்தார். அதாவது மைதான எல்லைப் பகுதியில் களத்தடுப்புச் செய்யும்போது ரசிகர்களின் வார்த்தையாடல்கள் மிகமிக மோசமானவை என்று கூறியிருந்தார். ஐ.சி.சி வீரர்களுக்கு மட்டும் எச்சரிக்கை செய்தால் போதாது. ரசிகர்கள்மீதும் மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். இவருக்கு அபராதம் விதிப்பது தேவையைப் பூர்த்திசெய்யாது. எனவே உடனடியாகவே மைதானத்தைவிட்டு வெளியேற்றவேண்டும்.

இன்னொரு வித்தியாசமான் செய்தியாக, எட்டு பாகிஸ்தான் வீரர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. அதாவது இந்த எட்டு வீரர்களும் தங்கியிருந்த ஹோட்டலுக்குத் தாமதமாக வந்ததான குற்றச்சாட்டிலேயே இந்த அபராதம் விதிக்கப்பட்டு உள்ளது. இவர்களில் சாஹிட் அப்ரிடியும் அடக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்னொரு முறை இப்படி நடந்தால் சம்பந்தப்பட்ட வீரர்கள், அதிரடியாக நடந்தால் அணியில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.




# சட்டம் யார் கையில்!



"உலக மக்கள் தொகையில் சரிபாதியாக இருக்கும் பெண்கள், மூன்றில் இரண்டு பங்கு பணிசெய்கிறார்கள். அதற்கு ஊதியமாக நூற்றில் பத்து சதவிகிதமே பெற்றுக்கொள்கிறார்கள். அதிலும் சொத்துரிமை நூறில் ஒரு சதவிகிதம்தான்..." - இது ஐ.நா. ஒரு சில வருடங்களுக்கு முன்னர் வெளியிட்ட தகவல்.

உலக நாடுகள் பெரும்பாலானவற்றில் சொத்துரிமை என்று வரும் பொழுது ஆண்களின் கை ஓங்கியே இருக்கிறது. இந்த சமுதாயத்தில் பெண்கள் முன்னேற்ற பாதையை நோக்கி செல்ல தடையாக இருக்கும் காரணங்களில் ஒன்று பெண்களின் பொருளாதார நிலை. இன்று பல இடர்பாடுகளை களைந்து, போராடி, சொத்துரிமையை சட்டரீதியாக பெற்ற நிலையிலும்!!!

சட்டமே பெண்ணுக்கான உரிமையை தந்தாலும் இந்த சமுதாயம் தரமறுக்கிறது என்பதே உண்மை. ஆதிமனிதன் இன்று நாகரிக மனிதனாக மாறி வலம் வர பலவிதங்களில் நம் பெண்ணினமே காரணமாக இருந்திருக்கிறது. கல்லை கருவிகளாக்கி வேட்டையாடி, அதே கல்லால் நெருப்பை மூட்டி இயற்கை உணவை இதமாக, பதமாக உணவாக்கி வன விலங்குகளை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விவசாயம் செய்ய தொடங்கி மனித இனத்தின் இன்றைய வளர்ச்சிக்கு வித்தாக, வேராக விளங்கியது பெண்ணினம் என்றால் மறுப்பதற்கு இல்லை. இவ்வாறாக நிலபுலன்களை தன் ஆளுமையின்கீழ் கொண்டு வருகின்ற ஆண், காலம் செல்லச் செல்ல தன் எல்லைகளை விரிவாக்கிக்கொண்டு பெண்களை வெறும் அடுப்பங்கரை ராணிகளாகவும், அந்தப்புரத்து அலங்காரப் பொருளாகவும் ஆக்கிவிட்டார்கள்.

பல போராட்டங்களுக்கு பின்னர், பல திறமைகளை தன்னுள் கொண்டு இன்று பல்வேறு தளங்களில் சகலகலாவல்லிகளாக இருக்கும் பெண்கள் சொத்துரிமை என்று வரும்பொழுது இன்னும் பின்தங்கித்தான் இருக்கிறார்கள். குழந்தைத் திருமணம், கைம்பெண் நிலை, மறும் மணம் மறுக்கப்பட்டது, உடன்கட்டை ஏறுவது இவை எல்லாம், சொத்துரிமை கைமாறுவதை தடுக்க நடைபெற்ற அவலங்கள். சில சமுதாயங்களில் இன்றும் இறந்த சகோதரனின் மனைவியை தன் தாரத்துக்கு இணையாக நடக்கக்கூடிய நிலையும் இருக்கிறது.

அதுபோலவே சொந்தபந்தங்களுக்குள்ளே நடைபெற்ற திருமணங்களும் சொத்துரிமையின் அடிப்படையிலேயே நடந்தேறுகின்றன. மருத்துவ விஞ்ஞானம் அதனை எதிர்க்கும் நிலையிலும் இந்த அவலம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. மனிதன் தன்னுடைய எல்லா செயல்களுக்கும் பொருளாதார நிலையை ஒரு அடித்தளமாக அமைத்து செயற்படுகிறான். பெண்களுக்கு எதிராக நடைபெறும் பல கொடுமைகளுக்கும் பொருள் ஆசையே அடிப்படை.

# கர்ப்ப காலத்தில் மீன் சாப்பிடலாமா?

மீனில் ஒமேகா-3 கொழுப்பமிலங்கள் மற்றும் புரதச்சத்துக்கள் அதிகமாக உள்ளன. கர்ப்பமாக இருக்கும்போது அவைகள் உங்களுக்கும் உங்களின் வயிற்றில் இருக்கும் சிசுவிற்கும் பல நன்மைகளை அளிக்கும்.

ஆனால் வயிற்றில் உள்ள உங்கள் சிசுவிற்கு எந்த ஒரு பாதிப்புள் ஏற்படாமல் இருக்க, கடல் உணவுகளை உண்ணும் போது நீங்கள் கூடுதல் கவனத்தை மேற்கொள்ளவேண்டும். சில கடல்வாழ் மீன்களில் பாதரசத்தின் தடயங்கள் இருக்கும். இது வயிற்றில் வளரும் சிசுவின் வளர்ச்சிக்கு பல ஆபத்துக்களை உண்டு பண்ணலாம்.

மீனை நன்றாக சமைத்தாலும்கூட இது அப்படியே தான் இருக்கும். கர்ப்ப காலத்தில் கூடுதல் அளவிலான பாதரசத்தை உட்கொண்டால், சிசுவின் மூளை மற்றும் மத்திய நரம்பியல் அமைப்பின் வளர்ச்சியை இது வெகுவாக பாதிக்கும். அதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மீன்கள் உட்கொள்ளும் அளவை குறைத்துக்கொள்ளுங்கள். முடிந்தால் வாரம் ஒரு முறை என மாற்றிக் கொள்ளுங்கள்.

நீங்கள் உண்ணும் மீன் பச்சையாக இல்லாமல் நன்றாக சமைக்கப்பட்டிருக்க வேண்டும். சரியாக சமைக்கப்படாத மீனால், கர்ப்பிணி பெண்களுக்கு ஒட்டுண்ணி அல்லது பக்டீரியா நோய்கள் தாக்கக்கூடும். இது அப்படியே சிசுவிற்கு பரவும். அதனால் எதிர்பாரா விளைவுகள் ஏற்படலாம்.

வாளை மீன், காணாங்கெளுத்தி மீன் மற்றும் சுறாமீன் போன்ற பெரிய கடல் மீன்களை தவிர்த்துவிடுவது நல்லது. மாறாக உள்ளூர் குளத்தில் கிடைக்கும் கட்லா மீன், உல்ல மீன் மற்றும் கண்ணாடி கெண்டை மீன் போன்ற மீன்களை உண்ணலாம். டப்பாவில் அடைக்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட மீன்களில் பதப்பொருட்கள் அதிகமாக இருப்பதால் அவைகளை தவிர்த்துவிடுவது நல்லது

# சருமம் பளபளக்க...

மஞ்சளில் அன்ரி-செப்டிக், நோயெதிர்ப்பு அழற்சி மற்றும் அன்டி-பக்டீரியல் தன்மைகள் அதிகம் நிறைந்துள்ளது. மேலும் அதில் குர்க்யூமின் என்னும் மஞ்சள் நிறமி, சருமத்தின் நிறத்தை அதிகரிக்க உதவும்.

மஞ்சளில் அன்டி-ஒக்ஸிடன்ட் இருப்பதால், அவை ப்ரீ ராடிக்கல்களின் தாக்கத்தில் இருந்து பாதுகாப்பு அளித்து, சரும சுருக்கத்தைப் போக்கி இளமையான தோற்றத்தைக் கொடுக்கும். இதுபோன்று மஞ்சளானது சருமத்தில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளைத் தடுக்கும்.

❁ முகத்தில் பருக்கள் அதிகம் இருந்தால், மஞ்சள் தூளுடன், சந்தனப் பொடியை சேர்த்து தண்ணீர் ஊற்றி பேஸ்ட் செய்து முகத்தில் தடவி 10 நிமிடம் ஊறவைத்து, பின் கழுவவேண்டும். இல்லாவிட்டால், மஞ்சள் தூளில்




கடுகு எண்ணெய் மற்றும் எலுமிச்சை சாறு சேர்த்து கலந்து பேஸ்ட் செய்து முகத்தில் தடவி 15 நிமிடம் ஊறவைத்து, பின் ஸ்கரப் செய்து சுத்தமான நீரில் கழுவவேண்டும். இப்படி வாரம் மூன்று முறை செய்துவந்தால், பருக்கள் மறையும்.

❁ மஞ்சள் தூளில் கரும்புச்சாறு சேர்த்து கலந்து, முகத்தில் தடவி வந்தால் சரும சுருக்கங்களை சரிசெய்யலாம். சென்சிடிவ் சருமம் உள்ளவர்கள். மஞ்சள் தூளில் மோர் சேர்த்து கலந்து, பாதிக்கப்பட்ட இடத்தில் தடவி 20 நிமிடம் ஊறவைத்து குளிர்ந்த நீரில் கழுவவேண்டும்.

❁ கடலை மாவில், மஞ்சள் தூள் சேர்த்து தண்ணீர் ஊற்றி பேஸ்ட் செய்து, குளிக்கும்போது ஈரமான சருமத்தில் தடவி நன்கு 5 நிமிடம் மசாஜ் செய்து குளித்துவந்தால், முகத்தில் உள்ள கரும்புள்ளிகளுடன், சருமத்தில் உள்ள இறந்த செல்கள் நீங்கி, சருமம் பொலிவோடு இருக்கும்.

**பெண்கள்** என்றாலே, அழகுதான். அந்த அழகை மேம்படுத்த அவர்கள் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் தரமாகத்தான் இருக்கவேண்டும் என்று ஆர்வக் காட்டிவருகிறார்கள். அதிலும் இன்றைய பெண்கள் தங்களின் அழகிலும், உடைகளை அணிவதிலும் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள். அதிலும் துணிவகைகள் என்றால் தனி இடம் தான். பெண்கள் பொதுவாகவே மிகவும் ஆசைப்படுவதும், அதிகம் செலவழிப்பதும் நகைகளுக்கும், துணிகளுக்கும் மற்றும் அழகுசாதன பொருட்களுக்கும் தான். தான் தேர்ந்தெடுக்கும் சுடிதார்களோ, அல்லது புடைவைகளோ மிகவும் புதுவரவாகவும், புது டிசைன்களிலும் இருக்கவேண்டும் என்று நினைப்பார்கள்.

காரணம் ஒரு நிகழ்ச்சிகளுக்கு செல்லும்போது என்னதான் நகைகளும், மேக்கப்பும் போட்டு இருந்தாலும், அவர்கள் முதலில் கவனிப்பது நம்முடைய உடைகளைத்தான். நாம் அணிந்து செல்லும் உடைகளை வைத்தே நமக்கு மரியாதை கொடுக்கிறார்கள்.

ஆகவே மற்றவர்களின் முன் நம்மை பெருமையாகவும், அடுத்தவர் களை திரும்பி பார்க்க வைப்பதும் நம்முடைய ஆடைகள்தான். எனவே அத்தகைய உடைகளை தேர்ந்தெடுக்கும் நாம் செலவழிப்பது தவறேதுமில்லை. ஆனால் நாம் தேர்ந்தெடுக்கும் துணி வகைகள் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதில்தான் கவனம் தேவை.

ஒரு சிலர் அதிக ஆடம்பர டிசைன்களை விரும்பமாட்டார்கள். தான் உடுத்தும் சுடிதார் மற்றவர்களை கவரவேண்டும். ஆனால் நிறைய டிசைன்கள் இருக்கக்கூடாது என்று தான் எண்ணுவார்கள். ஒரு சிலர் அதிக வேலைப்பாடுகள் இருந்தால்தான் பிடிக்கும்.

# சுடிதார் ஸ்பெஷல்



இதையெல்லாம் விட்டுத் தள்ளுங்கள். டிசைன் என்பது அப்பாற்பட்ட விஷயம். முதலில் நாம் எடுக்கும் சுடிதார் கலர் நம்முடைய டிசைன்களுக்கு ஒத்துவருமா? என்று பாருங்கள். அதை விட்டுட்டு, தேவையில்லாமல் டிசைன்களுக்கு ஆசைப்பட்டால், என்னதான் அதிக விலைகொடுத்து வாங்கியிருந்தாலும், மற்றவர்களின் முன் உங்களை 'டல்லாக' தான் காட்டும். எனவே அதை முதலில் தெரிந்துகொள்வது அவசியம். அதற்குதான் சில டிப்ஸ்:

முதலில் கறுப்பு நிறமாக உள்ளவர்கள், லைட் நிறத்தில் உள்ள ஸ்டோன் வேலைப்பாடுகள் செய்த சுடிதாரை தேர்ந்தெடுக்கலாம். தேர்ந்தெடுக்கப்படும் நிறம்: லைட் கிரீன், எலுமிச்சை நிறத்தில் உள்ள மஞ்சள் கலர், லைட் வைலட், லைட் சாண்டில், ஒயில் அல்லது ஏதாவது காமினேஷன் கலர் இது மாதிரி லைட் நிறத்தில் உள்ள சுடிதார்களை தேர்வு செய்யுங்கள்.

கொஞ்சம் கலராகவோ அல்லது மாநிறமாகவோ உள்ளவர்கள் மெரூன், இங்க் புளூர், பிங்க் கலர், ஆஷ் கலர், ஒயிட் அல்லது ஏதாவது காமினேஷன் கலரை தேர்வுசெய்யலாம். கலராக உள்ளவர்களுக்கு டார்க் கலரில் எந்த நிறவகையான சுடிதார்கள் போட்டாலும் அழகாகத் தெரியும். பெரும்பாலும் நிறத்திற்கு ஏற்றாற்போல் தேர்வு செய்வதை காட்டிலும், அவரவர் உடல்வாகுக்கு தகுந்தாற்போல் சுடிதார்களை எடுக்கவேண்டும்.

உதாரணத்திற்கு, குண்டாக உள்ளவர்கள் கொட்டன் சுடிதார் அணிந்தால், அது மேலும் அவர்களை குண்டாகத்தான் காட்டும். அதற்கு பதில், அவர்கள் நிறைய ஆடம்பர வேலைப்பாடுகள் செய்யாத சிம்பிளாக உள்ள சல்வார்களை போட்டாலே அழகாகத் தெரியும். ஒல்லியாக உள்ளவர்கள் கொஞ்சம் அதிக வேலைபாடுகள் செய்த கொட்டன் அல்லது சில்க் கொட்டன் சுடிதார் தேர்வுசெய்யலாம். அது அவர்களை சற்றுக் குண்டாக காட்டும்.

அதுமட்டுமல்லாமல் இப்போது குளிர்காலத்தில் தொடங்கிவிட்டது. எனவே இத்தகைய நேரத்தில், சிந்தடிக் வகை சுடிதார்களை உபயோகிக்கவேண்டாம். அதுமட்டுமல்ல, என்னதான் சுடிதார்களை தேர்வுசெய்தாலும், அவர்கள் தைக்கும் முறை அந்த துணியின் அழகை கெடுத்து விடுகிறது. முடிந்தவரையில், சுடிதார்களை அம்பர்லா மொடலில் தைத்தால், பார்ப்பதற்கு பூக்கள் விரிந்திருப்பது போன்று அழகாகத் தெரியும். தேர்வுசெய்யும் சுடிதாரை, நாம் அழகாக தெரியவைக்கும் முறையும் மிக மிக அவசியம்.

**250/= பரிசு வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

**பரிசுப் போட்டி இல :-459**

**கேள்வி:** சருமத்தின் நிறத்தை அதிகரிக்க உதவும் நிறமி எது?

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 02 .03. 2015**

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 459
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

**பரிசுப் போட்டி இல :- 457 இற்கான விடை :-**

**ரீட்டா**

**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :-**
**எம்.எவ்.இஷாராபேகம்,**
**மாஞ்சோலைச்சேனை,**
**கிண்ணியா -03.**

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

**459**

பெயர் : ..............................
முகவரி : ..............................
தே.அ. அட்டை இல : ..............................
விடை : ..............................
கையொப்பம் : ..............................





காணாமல் போனவர்கள் தமது தொழிலுக்காக வெளியில் சென்றவர்களாகவும், வீட்டில் குடும்பத்துடன் இருந்தவர்கள், தொலைபேசி அழைப்புமூலம் அழைக்கப்பட்டவர்கள், நண்பர்களால் கூட்டிச்செல்லப்பட்டவர்கள் எனப் பல வகைப்படுகின்றனர். இவர்கள் இன்றும் உயிருடன் இருக்கின்றனர், எப்போதாவது வீடு வந்துசேர்வார்கள் என்ற நம்பிக்கையுடன் வாழும் எத்தனையோ தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள் உள்ளனர்.

# காணாமல் போனோர் தொடர்பான போராட்டங்கள் 100 நாள் திட்டத்தில் நீதி கிடைக்குமா?

**- கிழக்கான் -**

காணாமல் போனோர் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட ஜனாதிபதியின் ஆணைக்குழுவின் அடுத்த விசாரணைகள் இம்மாதம் 28ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 3 ஆம் திகதிவரை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது சம்மந்தமான தெளிவூட்டல் கூட்டம் [illegible]டினமும் சூழலும் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் திருமதி சசிதேவி ஜெலதீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிலையில் கிழக்கின் பல இடங்களிலும் காணாமல் போனோரது உறவுகள் போராட்டங்களிலும், ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். மட்டக்களப்பில் மகாத்மா காந்தி நினைவு தினத்தில் ஒரு கவன ஈர்ப்புப் போராட்டம் நடைபெற்றிருந்தது. அதனையடுத்து 3 தினங்களில் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அத்துடன் கடந்த திங்கட்கிழமை (16)ஆம் திகதி அடையாள உண்ணாவிரதத்துடனான போராட்டம் ஒன்று மட்டக்களப்பு நகரில் இடம்பெற்றிருந்தது.

கடந்த காலப் போர், வன்முறை[illegible]ால் காணாமல் போனவர்கள், மரணித்தவர்களுக்கான நடவடிக்கைகள் கடந்த அரசாங்கத்திலும் சரி, புதிய அரசாங்கத்திலும் சரி முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை என்பதே முக்கிய குற்றச்சாட்டாக இருக்கிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளால் பலவந்தமாக ஆட்சேர்ப்புக்காக ஆட்கள் பிடிக்கப்பட்டனர். அத்துடன் இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகளினாலும் சந்தேகத்தின்பேரில் பலர் சுட்டுக் கொல்லப்பட்டும் இருந்தனர்.

இந்த நிலையில், விடுதலைப் புலிகள் அமைப்பில் ஏற்பட்ட பிளவினால் மட்டக்களப்பில் உருவான கருணா தரப்பு, பின் அத்தரப்பிலிருந்து பிரிந்த பிள்ளையான் தரப்பு என அனைத்துத் தரப்பினரும் மேற்கொண்ட கடத்தல்களால் காணாமல்போனவர்கள் தொகைகள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன.

காணாமல் போனவர்கள் தமது தொழிலுக்காக வெளியில் சென்றவர்களாகவும், வீட்டில் குடும்பத்துடன் இருந்தவர்கள், தொலைபேசி அழைப்பு மூலம் அழைக்கப்பட்டவர்கள், நண்பர்களால் கூட்டிச்செல்லப்பட்டவர்கள் எனப் பல வகைப்படுகின்றனர். இவர்கள் இன்றும் உயிருடன் இருக்கின்றனர், எப்போதாவது வீடு வந்துசேர்வார்கள் என்ற நம்பிக்கையுடன் வாழும் எத்தனையோ தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள் உள்ளனர்.

பல காணாமல்போன சம்பவங்கள் கிழக்கின் மட்டக்களப்பிலும் ஏனைய மாவட்டங்களிலும் நடைபெற்று இருக்கின்றன. விசாரணைகள் மிக விரைவாகவும் தீவிரமாகவும் மேற்கொள்ளப்படும்போது பல குற்றச்செயல்களுக்கான காரணங்கள் கண்டுபிடிக்கப்படும் என்ற எண்ணம்கூட இருந்திருக்கிறது.

மக்களிடம் பாதுகாப்பு தரப்பினர் தொடர்பில் உள்ள பயம் அல்லது, தமது குடும்பத்தில் உள்ள ஏனையவர்களின் பாதுகாப்பு போன்ற காரணங்கள் தொடர் முயற்சிகளை காணாமல்போனவர்கள் தொடர்பில் மேற்கொள்ள முடியாத நிலைக்குக் காரணமாக அமைந்திருந்தன.

இப்போதுகூட தம்முடைய பிள்ளையை கணவனை, உறவினரை யார் அழைத்துச் சென்றார்கள் என்று தெரிந்திருந்தும் வெளியில் கூறிக்கொள்ள அச்சப்படும் மக்கள் மட்டக்களப்பில் இருக்கிறார்கள்.

தனது மகன் காணாமல் போனமை குறித்து கவலை தெரிவிக்கும் மட்டக்களப்பின் சின்ன ஊறணியைச் சேர்ந்த தாய் ஒருவர், எனது மகனுக்கு 19 வயது. எங்களுடைய வீட்டிலிருந்து அவரது நண்பருடன் மோட்டார் சைக்கிளில் தேத்தாதீவு பாடசாலையில் மேசன் வேலை செய்வதற்காக சென்றார். சென்றவர் வழமையாக தொலைபேசி மூலம் பதில் தெரிவிக்கின்றபோதும் அன்றைய தினம் எந்தப் பதிலும் தரவில்லை. அதனால் அவர் சென்றமை தொடர்பில் முதலாளியுடன் தொடர்புகொண்டபோது அவர் வரவில்லை என்று சொன்னார். பின்பு எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்தோம். ஆனால் எனது மகன் குறித்து தகவல் எதுவும் இல்லை.

பின்பு செஞ்சிலுவை சங்கம், மனித உரிமை ஆணைக்குழு ஆகியவைகளிலும் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்தோம். ஆனால் எந்தப் பயனும் இல்லை. எனது மகன் காணாமல் போய் மார்ச் 21ஆம் திகதியுடன் 5 வருடங்கள் ஆகின்றன. இருந்தாலும் எந்தத் தகவலும் இல்லை, எனத் தெரிவிக்கிறார்.

இவ்வாறு காணாமல் போனவர்களின் குடும்பங்களில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கதை இருக்கிறது. இந்தக் கதைகளை மாத்திரமே பதிவு செய்து கொள்ளமுடிகிறது. பாதுகாப்புத் தரப்பினர் மக்களுக்கு கடந்த காலங்களில் கொடுத்த பிரச்சினைகள் காரணமாக மக்கள் இன்னமும் பாதுகாப்புத் தரப்பினர் குறித்து அக்கறை அற்றவர்களாகவும், அச்சம் கொண்டவர்களாகவுமே இருக்கின்றனர்.

முன்னர் யுத்தம் நடந்த காலப் பகுதியில் பலதரப்பினரும் கைதுகளை மேற்கொண்டிருந்தனர். கேள்வி, நியாயம் இன்றி கடத்தல்களையும் துப்பாக்கிச் சூடுகளையும் மேற்கொண்டிருந்தனர்.

இவற்றால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் மன ஆறுதல்படுத்தும் நிவாரணங்களை யாரும் இதுவரையில் வழங்கிவைக்கவில்லை. அதேபோன்று யாரை யார் கைது செய்தார்கள் அல்லது, யாரை யார் சுட்டுக் கொன்றார்கள் என்பது தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரையில் இல்லை.

தம்மால் இந்த நபர்கள் கைது செய்யப்பட்டார்கள், கடத்தப்பட்டார்கள், சுடப்பட்டார்கள் என்ற விபரங்களை சம்மந்தப்பட்டவர்கள் இதயசுத்தியுடன் வெளியிடும் வரையில் இவ்வாறான தேடல்கள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கப்போகின்றது.

காணாமல்போனவர்கள் பற்றி ஜனாதிபதியின் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு காணாமற் போகச் செய்தல், கடத்தல், தடுத்து வைத்தல் என்பன பற்றி பொலிஸாருக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் அறிவித்துள்ளமை பற்றி பல சான்றாதாரங்கள் உண்டு. ஏற்கனவே விசாரணை ஆணைக்குழுவுக்கு செய்யப்பட்ட முறைப்பாடுகள் மீளக்கூறப்பட்டன. ஆனால் மேற்படி ஆட்கள் இன்றும் கண்டுபிடிக்கப்பட இல்லை.

இம்முறைப்பாடுகளைப் பற்றி புலன் விசாரணை செய்து குற்றம் இழைத்தவர்களுக்கு தண்டனை வழங்க அரசு கடப்பாடுடையது. சரணடைதல் அல்லது கைதுமூலம் அரசாங்க அதிகாரிகளால் கட்டுக்காவலுக்கு எடுக்கப்பட்ட நபர் ஒருவரின் பாதுகாப்பு மற்றும் பத்திரமான தன்மை. அரசின் வகைப்பொறுப்பு என ஆலோசனைக் குழு வலியுறுத்துகிறது.

இத்தகைய சம்பவங்கள் பற்றி முன்னைய ஆணைக்குழுக்கள் பல தீர்வுகளை முன்வைத்த போதிலும் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த எந்தவொரு அரசாங்கமும் அவற்றை செயற்படுத்தாத காரணத்தினால் அரசாங்கம் நியமிக்கும் ஆணைக்குழுக்கள் விமர்சனங்களுக்கும் சந்தேகத்திற்கும் ஆளாகியுள்ளன. கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவும் இச்சந்தேகத்தில் இருந்து மீளமுடியாது.

படையினரின் அல்லது எல்.ரீ.ரீ.ஈ. யினரின் நடவடிக்கைகளுக்கு இரையான, கண்டுபிடிக்க முடியாத ஆட்களைப் பற்றிய தகவல்களை அவரவர்களின் குடும்பங்களுக்கு வழங்குவதும் நஷ்டஈடு பெறுவதும் ஒரு சட்டரீதியான உரிமையாக அமைகிறது எனவும் தெரிவித்திருக்கிறது.

ஆணைக்குழுவின் அறிக்கைகளின் படி நடவடிக்கைகள் எடுக்கப்படுமாக இருந்தால் காணாமல் போனவர்களின் ஆவணங்கள் சரியான முறையில் வழங்கப்பட்டு அவர்களுக்கான நஷ்டஈடு, மற்றும் பரிகாரத்தினையேனும் கொண்டு செல்ல வழிவகுக்கும்.

இதுதொடர்பில் யாரும் கரிசனை எடுப்பதாகத் தெரியவில்லை. ஒரு சில அரச சார்பற்ற அமைப்புக்கள் எப்போதாவது நினைவுபடுத்தும் வேலைகளில் ஈடுபடுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகளால் எப்போது விடிவு கிடைக்கும் என்பதுதான் முக்கியமானது.

தொடரும் காணாமல் போனவர்கள் தொடர்பான போராட்டங்கள், கவனயீர்ப்புகளால் கிடைக்கப்போகும் பிரயோசனம் என்ன என்பதனை மட்டுமே கேட்டுக் கொள்ளமுடியும். ஆனாலும் 100 நாள் திட்டத்தில் இந்த விடயத்திற்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் எந்தளவுக்கு பிரயோசனத்தினைக் கொண்டுவரும் என்பதும், மனித உரிமைகள் ஆணையாளரின் நடவடிக்கைகளைத் சற்றுத் தட்டிவிடுமா? பொறுத்திருப்போம்.

# கிழக்கு முதலமைச்சரின் முதன்மைச் சவால்கள்



**மட்டக்களப்பு மாவட்டம் இலங்கையின் வறுமைநிலையில் முதல் மாவட்டமாக உள்ளது. முதலில் வறுமைப் பட்டியலில் இருந்து மட்டக்களப்பு மாவட்டத்தை நீக்கியாகவேண்டும்.**

**கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பாரிய கைத்தொழில் பேட்டைகள் எதிர்காலத்தில் உலகின் சிறந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்கின்ற இடங்களாக கிழக்கு மாகாணத்தை மாற்றும் என்பதில் தனக்கு உறுதியான நம்பிக்கை இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.**

**தான் ஒரு இனவாதியல்ல என்பதை அவர் நிரூபித்தாக வேண்டும். இந்த முன்னுதாரணமான, கிழக்கின் ஆளுகையினூடாக முழுநாட்டுக்கும் இன ஒற்றுமை ஆட்சியின் செய்தியை சரித்திரமாக விட்டுச் செல்லவேண்டும்.**

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

பதவி பெரிதல்ல என்று கூறும் அரசியல்வாதிகள் இறுதிநேரத்தில் பதவிக்காக ஆலாய்ப்பறப்பதை இப்பொழுது ஒவ்வொரு பாமரக் குடிமக்களும்கூட நன்கு அறிந்தே வைத்திருக்கின்றார்கள்.

கிழக்கு மாகாணத்தைப் போன்று இலங்கையின் மற்ற மாகாணங்களில் எல்லாம் மாகாண சபை விவகாரம் கொந்தளிப்பாக இருப்பதில்லை.

அந்த மாகாணங்களில் முதலமைச்சர் எந்த இனமாக இருக்கப் போகின்றார் என்பதும் இனத்துவேஷ பார்வையில் நோக்கப்படுவதில்லை.

கிழக்கு மாகாணத்தில் மட்டும் தான் இத்தகையதொரு இழிநிலை பீடித்து. நீடிக்கின்றது. இந்த நிலைமைக்கு முற்று முழுவதுமாக இனத்துவேசிகளான அரசியல்வாதிகளே காரணம் என்று படித்தவர் தொடக்கம் பாமரர் வரை பகிரங்கமாகக் கூறுகின்றார்கள். அதுதான் உண்மையும்கூட.

கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் முஸ்லிமா அல்லது மீண்டும் தமிழரா என்பதுதான் இங்குள்ள இழிநிலை அரசியல்வாதிகளால் எழுப்பப்படும் பிரச்சினை.

அதைத்தான் கிழக்கு மாகாண சபையின் தேர்தல் விஞ்ஞாபனமாகக்கூட சில இனத்துவேச அரசியல்வாதிகள் கையில் எடுத்துக் கொண்டுள்ளார்கள்.

அதேவேளை, நடுநிலையில் நின்று, நிதானித்து உற்றுக் கவனிக்கும் ஒரு சிலரோ கிழக்கின் அடுத்த முதலமைச்சர் தமிழரா?, முஸ்லிமா? சிங்களவரா? என்பதல்ல முக்கியம்.

முதலமைச்சராகப்போகும் நபர் கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்கள், தமிழர்கள், சிங்களவர்கள், வேடுவர்கள் உள்ளிட்ட சகல தரப்பாரையும் அரவணைத்து ஆட்சிசெய்யும் யோக்கியதையைக் கொண்டுள்ளாரா என்பதே கவனத்தில் எடுக்கப்படவேண்டும் என்று வாதிடுகின்றனர்.

சகல சமூகங்களையும் நேசிப்பவர்களும் தூரநோக்கோடு சிந்திப்பவர்களும் பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து மக்களை நிம்மதியாக வாழ வைப்பதற்குப் பாடுபட்டவர்களும் இந்தக் கிழக்கு மாகாணத்தை ஆள்வதற்குச் சாலச் சிறந்தவர்கள்.

ஆனால், கிழக்கில் இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்குப் பதிலாக பயங்கரவாதம் நிலவிய சூழ்நிலையில் தொடங்கி தற்போதுள்ள நிலைமைவரை பயங்கரவாதப் பின்புலம் கொண்டோரும் இனரீதியிலான அரசியல் பிழைப்பு நடத்துவோரும் கிழக்கில் இன முறுகலை மறைமுகமாகவும் நேரடியாகவும் ஏற்படுத்தி வந்திருக்கின்றார்கள் என்பது வெளிப்படை.

இப்பொழுதும்கூட அரசியல் நடத்துவோரால் இத்தகைய கீழ்த்தரமான இனத்துவேசப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

தமது வியூகங்களை மாற்றி மாற்றி அமைத்து மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

உண்மையில் ஒரு இணக்கப்பாட்டுடனான நல்லாட்சியை கிழக்கு மாகாணத்தில் ஏற்படுத்துவதற்கு அரசியல்வாதிகளின் இத்தகைய கீழ்த்தரமான நடவடிக்கைகள் ஒரு சாபக்கேடாகவே அமைந்துள்ளது. இது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் குந்தகமாகவே அமைந்து விட்டிருக்கின்றது.

பயங்கரவாதத்தால் நிலை குலைந்து வாழ்க்கை சீரழிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் வாழும் சகல இன மக்களுக்கும் நிம்மதியான வாழ்வும் நிலைபேறான அபிவிருத்தியும் கிடைக்கப்பெற வேண்டுமாக இருந்தால் இனத்துவேச மற்ற ஆட்சி இடம்பெறவேண்டும்.

பயங்கரவாதப் பின்னணியைக் கொண்டவர்களும், பாமர மக்களை ஏமாற்றி இனத்துவேசத்தை வளர்த்து அதில் பிழைப்பு நடத்துவோரும் அவர்கள் எந்த சமூகத்தின் பின்னணியில் இருந்து வந்தாலும் இவர்களால் இனங்களுக்கிடையிலான இணக்கப்பாட்டையும் நல்லாட்சியையும் கொண்டுவர ஒருபோதும் அவர்களது மனப்பாங்குகள் இடமளிக்காது என்பதே கடந்தகால அனுபவமாகும்.

பயங்கரவாதத்திலிருந்து விடுவிக்கப்பட்ட கிழக்கில் ஏற்கெனவே ஒரு தமிழ் முதலமைச்சர் அரசாண்டு விட்டார். எனவே அடுத்து அரசாளும் அருகதை முஸ்லிம்களுக்கு உண்டு. அந்த வாய்ப்பு முஸ்லிம்களுக்குத் த்ரப்படவேண்டும் என்று வாதிட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமது இலக்கை அடைந்து விட்டது.

கடந்த காலத்தில் இழந்தவை எல்லாம் ஒருபுறமிருக்க இனி நிம்மதியான வாழ்வாவது நமக்கு கிடைக்கவேண்டும் என்று மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

எனவே, புதிய கிழக்கின் முதலமைச்சரின் முன்னால் இருக்கக்கூடிய சவாலாக கிழக்கில் அரசியல்வாதிகளால் ஏற்படுத்தப்படுகின்ற சவாலைச் சமாளிக்கவேண்டும்.

தான் ஒரு இனவாதியல்ல என்பதை அவர் நிரூபித்தாக வேண்டும். இந்த முன்னுதாரணமான கிழக்கின் ஆளுகையினூடாக முழு நாட்டுக்கும் இன ஒற்றுமை ஆட்சியின் செய்தியை சரித்திரமாக விட்டுச் செல்லவேண்டும்.

மக்களின் இந்த ஏக்கத்தையும் எதிர்பார்ப்பையும் புரிந்துகொண்டுள்ள தமிழரோ, முஸ்லிமோ, சிங்களவரோ இனி எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தை ஆள அருகதை உடையவர்கள் என்பதை இந்த ஆட்சியினூடாக புதிய முதலமைச்சர் செய்து காட்டவேண்டும். இதன் மூலமாகவே கிழக்கின் இன முறுகல் நீங்க வாய்ப்பேற்படும்.

கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற முஸ்லிம், தமிழ், சிங்கள சமூகத்தைச் சேர்ந்த எந்தவொரு பெண்ணும் வாழ்வாதாரம் தேடி மத்திய கிழக்கு செல்லக் கூடாது என்பதும் அவர்களுக்காக உள்ளூரில் வேலைவாய்ப்பை உருவாக்குதல் என்பதுமே தனக்கு முன்னாலுள்ள அடுத்த சவால் என கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் தினமுரசுக்குத் தெரிவித்தார்.

வறிய மக்களின் வாழ்வாதாரத்தை ஸ்திரப்படுத்தி, பொருளாதாரத்தை மேம்படுத்துகின்ற ஒரு பாரிய சவாலை நான் துணிச்சலோடு ஏற்றுக் கொண்டுள்ளேன் என்று கூறிய அவர் கிழக்கு மாகாணத்தில் தான் அமுல்படுத்த உள்ள திட்டங்கள் பற்றி விவரித்தார்.

பாரிய முதலீடுகள், அதற்கான தொழிநுட்பம், சந்தை வாய்ப்பு வசதிகள் இல்லாமல் ஒரு தொழில் பேட்டையை ஆரம்பிப்பதென்பது சவால் நிறைந்த விடயமாகும். அந்த சவாலை நான் ஏற்றுக் கொண்டுள்ளேன் என்று அவர் கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பாரிய கைத்தொழில் பேட்டைகள் எதிர்காலத்தில் உலகின் சிறந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்கின்ற இடங்களாக கிழக்கு மாகாணத்தை மாற்றும் என்பதில் தனக்கு உறுதியான நம்பிக்கை இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு மாகாண சபையில் உள்ளவர்களும் கிழக்கு மாகாணத்திலுள்ள அதிகாரிகளும் பூரண ஒத்துழைப்புத் தரவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

ஏனென்றால் மாகாண அமைச்சிலே இவ்வாறானதொரு பாரிய திட்டத்தை அமுல்படுத்தக் கூடிய எந்தவொரு ஏற்பாடுகளும் இல்லை.

எனது செல்வாக்கின் அடிப்படையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களை இங்கு வரவழைத்து கைத்தொழில் பேட்டைகளை உருவாக்க திடசங்கற்பம் பூண்டுள்ளேன்.

எமது உள்ளூர் வளங்களையும் மனித வளத்தையும் முழுமையாகப் பயன்படுத்தி வெற்றி அடையவேண்டும் என்ற எனது நீண்டகாலக் கனவின் அடிப்படையிலும் இந்தத் திட்டத்தைத் தொடங்கவுள்ளேன்.

இதன்மூலம் எமது தமிழ், முஸ்லிம், சிங்கள சகோதரிகள் மத்திய கிழக்கு நாடுகளிலே அடிமை வேலைசெய்து சிந்துகின்ற கண்ணீருக்கும் அவல வாழ்வுக்கும் விடிவு கிட்டும்.

உற்பத்தித் திறன்சார்ந்த முயற்சியாளர்கள் தங்களது உற்பத்திகளை மேற்கொண்டு அவற்றையும் ஏற்றுமதி செய்கின்ற பொழுது முழுக் கிழக்கு மாகாணமுமே பொருளாதார அபிவிருத்தியைக் காணும். அப்பொழுது இங்கிருந்து எமது சகோதரிகள் மத்திய கிழக்கு சென்று அடிமைப் பணிபுரிய வேண்டியதில்லை.

கிழக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரம் 60 சதவீதம் விவசாயத்திலும் ஏனைய 40 சதவீதம் கால்நடை, சிறு கைத்தொழில் என்பவற்றிலும் தங்கியிருக்கின்றது.

கிழக்கிலங்கை மக்களில் கணிசமானோர் பசி பட்டினியில் வாடுகின்றார்கள் என்றால் அதற்கு நாம் அனைவரும் பொறுப்புக் கூறவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டம் இலங்கையின் வறுமைநிலையில் முதல் மாவட்டமாக உள்ளது.

முதலில் வறுமைப் பட்டியலில் இருந்து மட்டக்களப்பு மாவட்டத்தை நீக்கியாகவேண்டும்.

இதற்கு அரசியல்வாதிகள் தொடக்கம் அடிமட்ட ஊழியர்கள் வரை உதவவேண்டும்.

மத்திய அரசைக் காட்டிலும் மக்களுக்கு மிக அருகில் இருப்பவர்கள் மாகாண அரசில் உள்ள நாங்களே. மத்திய அரசின் திட்டங்களால் மக்கள் எத்தனை வீதம் பயன் பெறுகின்றனர் என்பதை நாம் கவனித்துப் பார்க்கவேண்டும்.

ஏனைய மாகாணங்களின் மக்கள் மாகாண அரசினூடாக சிறந்த பயனைப் பெறுகின்றார்களென்றால் ஏன் அது நம்மால் முடியாமல் இருக்கின்றது? என்று புதிய முதலமைச்சர் நஸீர் அஹமட் கேள்வியெழுப்பினார்.

கிழக்கில் கிடைக்கக்கூடிய வளங்களுக்குத் தக்கதாக மக்கள் சிறந்த வழிகாட்டல்களையும் அதனூடாக அதிகூடிய பயன்பாட்டினையும் பெறவில்லை. இதற்குப் பொறுப்புள்ள அதிகாரிகளே பதில் கூறவேண்டும்.

இப்போக்கினைச் சுட்டிக் காட்டுவதென்பது நாம் எவர் மீதாவது குற்றம் காண்கிறோம் என்பதல்ல. நாம் அனைவரும் இணைந்து இன்னும் கொஞ்சம் அக்கறை எடுத்து செயற்பட்டு மக்களை முன்னேற்றவேண்டும் என்பதேயாகும். முதிர்ச்சி அடைந்தவர்களாகவும், அனுபவம் அறிவாற்றல் நிறைந்தவர்களாகவும் இருக்கின்ற நாம் இவ்விதமான எமது தனித்துவத்தை எவ்விதம் மக்கள் நலத் திட்டங்களுக்கு பயன்படுத்துகின்றோம் என்பது கேள்விக்குறியே.

நாங்கள் மக்களுக்காக அல்லது மற்றவர்களின் பார்வைக்கு மட்டுமென்று பொய்யான காட்சிகளை உருவாக்கி காட்டலாம்.

ஆனால் நாம் எல்லோரும் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். நம் எல்லோருக்கும் மனச்சாட்சி ஒன்று இருக்கின்றது. எனது மனச்சாட்சிக்கு நான்தான் பதில் சொல்லியே ஆக வேண்டும் என்றார்.

கிழக்கு முதலமைச்சர் சொன்னவற்றை எல்லாம் செயலிலும் நிரூபித்துக் காட்டுவாராக இருந்தால் அதுவே முன்னுதாரணமிக்க நல்லாட்சியாகவும் இன ஐக்கியத்தின் ஊடான அபிவிருத்தியின் அடித்தளமாகவும் இருக்கும்.

அதுவே முழு இலங்கைக்குமான நல்லாட்சியின் சான்றாக சரித்திரத்தில் இடம்பெறுவதோடு இனத்துவேச அரசியல் பிழைப்பு நடத்துவோருக்கு தக்க சாட்டையடியாகவும் இருக்கும்.

# புத்தகத்தை வாசிக்கும்போது?

தலையை உயர்த்திவைத்து, நேராகப் படிக்க வேண்டும். இந்த நிலையில் உங்கள் தலை முதுகெலும்பின்மீது சரியானபடி இருக்கும். அதனால் கழுத்துத் தசைகளுக்குச் சிரமம் இருக்காது.



# மூட்டு வலியை தடுப்பது எப்படி?



இன்றைய காலகட்டத்தில் 30 வயதை எட்டிவிட்டாலே மூட்டு வலி தொற்றிக்கொள்கிறது. மூட்டுகளுக்கு தேவையான சத்துக்கள் கிடைக்காததே இதற்குக் காரணம். எனவே ஆரோக்கியமான உணவை உட்கொண்டு, சீரான உடற்பயிற்சி களை செய்துவந்தால் மூட்டுவலியை விரட்டி அடிக்கலாம்.

மூட்டுக்களில் ஏற்படும் பிரச்சினையை தொடக்கத்திலேயே சரிசெய்ய வேண்டும். வீக்கம் ஏதும் இருந்தால் மருத்துவரை அணுகுவது நலம்.

உடல் எடையை சீராகப் பார்த்துக் கொள்ளவேண்டும். எடை அதிகரிக்கும் பட்சத்தில் மூட்டுகளுக்கு அதிகப்படியான அழுத்தம் ஏற்பட்டு வலிகள் உண்டாகும்.

நீண்டநேரம் ஒரே இடத்தில் அமர்ந்து வேலைசெய்பவர்கள், தினமும் உடற்பயிற்சிகள், நடைப்பயிற்சியை மேற்கொண்டால் மூட்டுகளின் ஆரோக்கியத்தை பாதுகாக்கலாம்.

காய்கறிகள், பழங்கள், பால் மற்றும் கல்சியம் அதிகம் நிறைந்த பொருட்களை உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

# பன்றிக் காய்ச்சலை தடுக்கும் துளசி

துளசிச்செடியின் அனைத்து பாகங்களும் மருத்துவத் தன்மை நிறைந்தது. தினமும் இரண்டு இலை துளசி சாப்பிட்டால் குடல், வயிறு, வாய் தொடர்பான பிரச்சினைகள் அவன் வாழ்நாள் முழுவதும் வராது. ஜீரணசக்தியும், புத்துணர்ச்சியையும் துளசி இலைமூலம் பெறலாம். வாய் துர்நாற்றத்தையும் போக்கும். நமது உடலுக்கான கிருமிநாசினியாக துளசியை உட்கொள்ளலாம். துளசி இலையைப் போட்டு ஊறவைத்த நீரை தொடர்ந்து பருகிவந்தால் நீரழிவு நம்மை நாடாது.

கோடை காலத்தில் வியர்வை நாற்றமும்கூடவே வந்துவிடும். அதனைத் தவிர்க்க குளிக்கும் நீரில் முந்தைய நாளே கொஞ்சம் துளசி இலையைப் போட்டுவைத்து அதில் குளித்தால் உடல் மணக்கும். தோலில் பலநாட்களாக இருக்கும் படை, சொறி களையும் துளசி இலையால் குணமடையச் செய்ய முடியும். துளசி இலையை எலுமிச்சை சாறு விட்டு நன்கு மைபோல் அரைத்து அந்த விழுதை தோலில் தடவிவந்தால் படை, சொறி இருந்த இடம் தெரியாமல் மறையும். நீரிழிவு வந்தவர்களும் துளசி இலையை மென்று தின்னலாம். இதனைச் செய்து வந்தால் சீனியின் அளவு கட்டுப்படும்.

அதேபோல பன்றிக் காய்ச்சலைக் கட்டுப்படுத்தும், தடுக்கும் வல்லமையும் துளசிக்கு உண்டு. நோய் வராமல் தடுக்கும் சக்தி மட்டுமல்லாமல், வந்தால் அதை விரைவில் குணமாக்கும் சக்தியும் துளசிக்கு உண்டு. பேன் தொல்லை நீங்க துளசியை இடித்து சாறு எடுத்து அத்துடன் சமஅளவு எலுமிச்சை சாறு கலந்து வாரம் ஒரு முறை தலையில் தேய்த்து ஒரு மணிநேரம் குளித்துவர பேன், பொடுகு தொல்லை நீங்கும். துளசி இலையை இடித்துப் பிழிந்த சாற்றுடன் சிறிதளவு கற்பூரம் கலந்து பல் வலியுள்ள இடத்தில் பூசிவர வலி குறையும். வெட்டுக்காயங்களுக்கு துளசி இலைச்சாற்றை பூசிவந்தால் அவை விரைவில் குணமாகும்.




தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு நாளிதழ்

ரூ.10/= மட்டுமே

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

வடபுலத்தான் எழுதும் நாட்டு நடப்பு குறிப்புகளும் விமர்சனங்களும்

வடபுலத்தான் எழுதுவது...




# அநாதைப் பிணம்



இளம்பிறை யோகன், புத்தளம்

**அதிகாலைப்** பொழுதின் மெல்லிய குளிர்காற்று திறந்திருக்கும் அந்த ஜன்னல் வழியே மெல்ல நுழைந்து அங்கே கட்டிலில் தூங்கிக் கொண்டிருக்கும் கனகரத்தினம் வாத்தியாரின் உடலை மெல்ல வருடிச் செல்கின்றது. சில்லெனப் பட்ட குளிர்காற்றால் சட்டென விழித்துக் கொண்டவர் கண்களை தன் இரு கரங் களாலும் கசக்கிவிட்டு, தன் தலையணை அருகில் வைத்திருந்த மூக்குக் கண்ணாடியை எடுத்து தன் முகத்தில் மாட்டிக் கொள்கின்றார். கட்டிலிலே படுத்தி ருந்தவர் தலையை நிமிர்த்தி திறந்திருக்கும் ஜன்னல் வழியே வெளியைப் பார்க்கின்றார்.

அப்போதுதான் வானமே மெல்ல, மெல்ல வெளிறிக் கொண்டிருந்தது. காகங்கள் கரையும் ஓசைகளும், மரக்கிளைகளிலே தூங்கி விழித்த கருங்குயில்களின் இனிய ஓசைகளும் ஆங்காங்கே ஒலித்துக் கொண்டிருக்க, கருமை நிறம் கொண்டிருந்த மரங்களும் செடிகளும் தன் சுயநிறங்களை மெல்ல, மெல்ல வெளிக்காட்டிக் கொண்டிருந்தன.

முற்றத்து வேலி ஓரமாக வளர்ந்திருந்த வேப்பமரக் கிளையிலிருந்து ஒரு குச்சியை முறித்து அதை சரி செய்துவிட்டு தன் பல் இடுக்குகளில் வைத்துத் தேய்த்தவண்ணம் முன்னே தெரியும் பொன்னம்மாளின் ஓலைக் குடிசையைப் பார்த்தார்.

வழமையாகவே நேரத்திற்கு எழுந்து வீட்டைக் கூட்டிப்பெருக்கி, அடுப்பை பற்ற வைத்து அதன்பின் அப்பம் சுடுவதை அந்தக் குசினிமேல் எழும்புகிற புகைதான் வெளிக்காட்டும். ஆனால் அது இன்று இல்லாததால் பொன்னம்மாளுக்கு உடம்புக்கு ஏதும் சுகக்குறைவோ? நேற்றுத்தானே வந்து என்னைச் சந்தித்துவிட்டுப் போனாள். பாவம் இந்த பொன்னம்மாள். இந்த வயதிலும் இவளுக்கு ஏன் இந்தக் கஷ்டம், ஒவ்வொருவரையும் ஆண்டவன் இப்படி ஒவ்வொருவிதத்தில் அல்லவா சோதிக்கின்றான். தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி தன் சால்வையால் துடைத்துவிட்டு மீண்டும் அதை தன் முகத்தில் மாட்டிக்கொள்ளும் அவரை கடந்த காலத்தின் காலச் சக்கரம் அவரின் கற்பனைப் பாதையில் பின்னோக்கிச் சுழல்கின்றது.

ஆமாம், யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தமிழ் வாத்தியாராக இந்த ஊருக்கு வந்தவர் தான் கனகரத்தினம் என்பவர், குணத்தாலே குறை சொல்லமுடியாதவர். அதேபோல் மற்றவர்களுக்கும் உதவிகள் செய்வதிலும் நல்ல மனம் படைத்தவர். ஸ்கூல் மாணவர் களிடம் கொள்ளும் அன்பைப் போலவே அந்த ஊரிலுள்ளவர்களிடமும் அன்பு காட்டுபவர். அதனால் எல்லோருமே அவரை கனகரத்தின வாத்தியார் என்று கௌரவ மாகவே அழைப்பார்கள். அதுபோலவே அவர் மனைவி பார்வதியும்.

ஊர்விட்டு ஊர் வந்த வாத்தியார் குடும்பத் திற்கு இருப்பதற்கு இடம்தேடிக் கொடுத்தவன் தான் பொன்னாம்மாவின் கணவன் சுப்பையா. அன்றிலிருந்து அந்தக் குடும்பத்தோடு நன்றாகவே பழகிவிட்டார் கனகரத்தினம் வாத்தியார்.

சுப்பையாவும் கூலிவேலை செய்துதான் தன் குடும்பத்தைக் கொண்டு நடத்துபவன். அவன் மனைவி பொன்னம்மாள், எட்டு வயது மகன் ரவி இவ்வளவுதான் அவனது குடும்பம். இருந்தும் அவள் சம்பாத்தியம் குடும்பத்தைக் கொண்டு நடத்தமுடியாமல் இருந்தது அவனுக்கு. அதனால் தானும் ஏதேனும் ஒரு தொழிலைச் செய்து குடும்பப் பாரத்தை ஏற்றாள் பொன்னம்மாள்.

அதற்காக கடைகளுக்கு காலை உணவுப் பண்டங்களை சரிசெய்து வழங்கிவந்தாள். இதை தானும் தன் மகன் ரவியோடும் சேர்ந்தே கடைகளுக்குக்கொண்டு சென்று தன் குடும்பத்தின் நிலைமையை ஒருவாறு சரி செய்தாள்.

பொன்னம்மாளும் மகன் ரவியை அந்த ஸ்கூலில் தான் படிக்கவிட்டிருந்தாள். நல்ல ஒழுக்கம் கொண்டவன். அதுபோலவே படிப்பிலும் நல்ல கெட்டிக்காரன். அவனது அந்த வயதிலும் தன் தாய்க்கு ஒத்தாசை யாகவே இருந்துவந்தான். சின்ன வயதிலும் கூட பொன்னம்மாள் தயாரிக்கும் காலை உணவுப் பண்டங்களை கடைகளுக்கு எடுத்துச்சென்று கொடுத்துவிட்டுத்தான், அவன் ஸ்கூலுக்கே செல்வான்.

பொன்னம்மாள்கூட ஊர் விட்டு ஊர் வந்தவளே. அக்கால அசாதாரண சூழ்நிலை காரணமாக முல்லைத்தீவிலிருந்து தன் சொத்து, சொந்தபந்தங்கள் அனைத்தையுமே இழந்து, உயிரை மட்டும் சொத்தாகக் கொண்டு வந்து, அகதி என்ற அந்தஸ்திலே அடைக்கலம் கொண்டாள். கணவன், பிள்ளை என்று சிறிய குடும்பக் கூண்டுக்குள்ளே நிம்மதிகொண்ட வாழ்க்கை. அது நீண்டகாலம் நீடிக்க விரும்பாத அந்த இறைவன், காலனைத தூதாக அனுப்பினான்.

ஆமாம், வழமைபோல வேலைமுடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சுப்பையாமீது கார் விபத்தென்ற வடிவில் அவன் உயிரைக் காவுகொண்டான் அந்தக் காலன். நினைக்க முடியாத நிகழ்வுகளும், தாங்கிக் கொள்ள முடியாத சுமைகளும் பொன்னம்மாளை துடிதுடிக்க வைத்தன. ஏதோ ஊரவர்களின் உதவிகளோடு சுப்பையாவின் இறுதிச்சடங்கு களும் ஒருவாறு நிறைவேறியது. அதில் பெரும் பங்கெடுத்திருந்தார் கனகரத்தின வாத்தியார். சோகத்தால் சோம்பிக் கிடந்த பொன்னம்மாளை உடனிருந்து ஒத்தாசை புரிந்திருந்தாள் வாத்தியாரின் ம்னைவி பார்வதி.

காலத்தின் வேகமும் குறையாமலேயே நகர்ந்துகொண்டிருந்தது. இப்போது ரவியும் க.பொ.த உ/த பரீட்சை எழுதிவிட்டு பெறுபேறுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். அதுவரையிலும் பொன்னம்மாளின் கஷ்டங் களைக் குறைத்துக் கொள்ளவேண்டுமென ஏதாவது தொழில் செய்ய விரும்பினான். இதை வாத்தியாரிடம் போய் எடுத்துச் சொன்னான். அவரும் ரவியின் நிலைமையை உணர்ந்து மாணவர்களுக்கு டியூசன் வகுப்புகளுக்கு ஒழுங்குசெய்து கொடுத்தார். அதில் கிடைத்த சிறு வருமானத்தை தாயிடம் கொடுத்து சந்தோசமடைந்தான்.

அன்று பரீட்சை பெறுபேறுகள் வெளிவரும் நாள். பரீட்சை எழுதியவர்கள் எல்லோருமே தங்கள் கடவுளிடம் வேண்டாத வேண்டுதலை வேண்டிக்கொண்டு ஸ்கூலிலே குழுமி நின்றார்கள். சொல்லி வைத்தாற்போல் தபால் காரனும் பெறுபேறுகள் அடங்கிய கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தான் பாடசாலை அதிபரிடம். ஏதோ அந்தக் கடவுள் தன் கண்களைத் திறந்தாற்போல் ரவியும் கெம்பஸ் செல்ல தகுதி பெற்றிருந்தான்.

ரவியின் அந்த மகிழ்ச்சிக்குத்தான் எல்லைகள் ஏது. இதை பொன்னம்மாளிடம் சொல்ல அவளும் ஆனந்தக்கண்ணீர் வடித்தாள். ஒரு தடவை அவள் கணவனை நினைத்தபோது அவளால் தாங்கிக் கொள்ள முடியாத வேதனையால் வாய்விட்டே அழுதுவிட்டாள்.

இந்தநிலையில்தான் ரவிக்கும் ஒரு வங்கியில் தொழில்செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. அதுவும் கொழும்பில்தான் வேலை. கிராமத்தில் பிறந்து வளர்ந்தவனுக்கு நகரவாழ்க்கை என்பதை நினைத்தபோது மனதிலும் ஒருவித பயம் குடிகொண்டது. ஒருபுறம் தன் தாயைத் தனியாக விட்டுச் செல்லும் பாசத்தின் தாகம். மறுபுறம் குடும்பத்தின் வறுமையை ஒழிக்கவேண்டுமென்ற உள்ளத்தின் ஆவேசம். அதற்காக தனக்குக் கிடைத்திருக்கும் முதல் உத்தியோகத்தை உதறித் தள்ளிவிட மனமில்லாமல் கனகரத்தின வாத்தியாரின் உதவியோடு கொழும்பு சென்று வேலையைப் பொறுப்பேற்றான். வாத்தியார்தான் தன் ஊர் நண்பனின் உதவியுடன், கொள்ளுப் பிட்டியில் ஓர் அறையை அவன் தங்குவதற்கு ஒழுங்கு பண்ணிக் கொடுத்தார்.

மாதங்களும் பல கடந்தன. இப்போது ரவியும் வங்கி வேலையுமாக இருந்தாலும் தன் தாயின் உருவம் அவன் முன்னே தினமும் தோன்றியவண்ணமே இருந்தது.

இந்நிலையில்தான் ரவியின் வாழ்விலும் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. வங்கியிலே அவனோடுகூட வேலைசெய்யும் நிவேதா என்பவளது காதல் சோலைக்குள்ளே நுழையும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது. இது ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை.

நிவேதாவும் கொஞ்சம் வசதிபடைத்தவள். கொழும்பிலே சொந்த வீடு, வாகனங்கள் என்றால் சொல்லவும் வேண்டுமா? நிவேதா அவனைக் காதலிப்பது என்பது ரவியைப் பொறுத்தமட்டில் ஆச்சரியமே. தன் வீட்டுச் சூழலே, இருண்டுவிட்டாலோ குப்பி விளக்கின் ஆதிக்கம், படுத்துறங்கச் சென்றால் மண் தரையும், பண்பாயுமே அவனை அணைக்கும். இதே நிலையிலே நிவேதாவை நினைக்க அவனுக்கே வெட்கமாக இருந்தது. இதற்காக தனது அந்த காதலை வெறுக்க நினைத்தான். என்றாலும் நிவேதாவின் காதல் சக்தியோ எல்லாவற்றையும் வென்றது.

காலத்தின் வேகத்தோடு ஒரு மனிதனால் இப்போது ஓடத்தான் முடியுமா? ஆறுமாதங்கள் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிக்கழிந்தன. இத்தனை மாதங்களும் தன் மகனைக் காணாத பொன்னம்மாளுக்கு கவலைகளும் சோகங்களும் ஒன்றாகச் சேர்ந்து அவளை ஒரு நோயாளியாகக் காட்சிப்படுத்தின.

இனிமேலும் பொன்னம்மாவால் தாங்க முடியாமல், வாத்தியார் வீட்டுக்குச் சென்று தன் மனதிலுள்ள அத்தனை கவலைகளை யும் வெளிப்படுத்திவிட்டு வாய்விட்டே அழுது புலம்பினாள். அவளது அந்த நிலையைக் கண்ட கனகரத்தின வாத்தியாருக்கு எப்படி அவளுக்கு ஆறுதல் சொல்வதென்றே தெரியாமல் தடுமாற்றிக் கொண்டிருந்தார். ஒருவாறு தன்னை சுதாகரித்துக் கொண்டவர் பொன்னம்மாளைப் பார்த்து, "இந்தாப் பார் பொன்னம்மாள் உண்ட மகன் இன்னும் என்ன சின்னப் பையனா. அவனும் பேங்கில் அல்லோ உத்தியோகம் பார்க்கின்றான். பேங்க் எண்டால் அப்படித்தான் இருக்கும். கொஞ்சம் பொறுத்துக்கோ. நாளைக்கு உனக்காக நான் போய் உண்ட மகனைப் பார்த்துப் பேசிப் போட்டுவாறன்" என்று சொல்லி ஆறுதல்படுத்தி அனுப்பிவைத்தார்.

மறுநாள் காலையிலேயே ரவியைத் தேடி கொழும்பு பயணமானார் அந்த கனகரத்தின வாத்தியார். கொழும்பு வங்கியிலும் அவனைப் பற்றி விசாரித்தபோது, அவன் தற்போது மனேஜர் பதவி கிடைத்து வத்தளைக்குப் போய்விட்டதாகத் தெரிவித்ததை அடுத்து அவரும் வத்தளைக்குச் சென்றார்.

குறிப்பிட்டதுபோல் வத்தளை வங்கிக்குச் சென்று ரவி பற்றி விசாரித்தபோது அவன் ஒருமாத லீவில் இருப்பதாகவும், வத்தளையில் அவன் இருப்பது பற்றியும் தெரிவித்து இருக்கும் இடம் பற்றிய முகவரியையும் கொடுத்தார்கள் அந்த வங்கியிலே. விவரங் களைப் பெற்றுக்கொண்ட வாத்தியாரும் குறித்த அந்த இடத்தைத் தேடிக் கண்டுபிடித்தார்.

கேற்றுக்கு உள்ளே நுழைந்தவர் ஹோலில் பெல்லை அடிக்க, சிறிதுநேரம் கழித்து ஒரு ஐம்பது வயது நிரம்பிய பெண் ஒருத்தி வீட்டின் முன் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தவள், "யார் வேணும்" என்று அதிகாரக் குரலில் கேட்டாள். வாத்தி யாருக்கும் கொஞ்சம் மனதிலே அச்சம். இடம் மாறி வந்துவிட்டோமோ என்றும் சற்று யோசித்தவர், தான் ரவியைத் தேடிவந்த விடயம் பற்றி விபரமாகச் சொன்னார்.

அவர் சொன்னதை விபரமாகக் கேட்டுக் கொண்டவள், ரவி இங்குதான் இருக்கிறார். ஆனால் இப்போதைக்கு ஒரு மாத லீவில் அவரும் அவர் மனைவியும் வெளிநாடு சென்றுள்ள விபரத்தை எடுத்துச்சொன்னாள் அவள். வாத்தியாருக்கு அவள் சொன்னது எதுவுமே புரியாமல் இருக்கத் திரும்பவும் அதை தெளிவாகக் கேட்கலானார். ஆமாம், ரவிக்கு பதிவுத் திருமணம் அவசரமாக முடிந்ததையும் தம்பதிகள் ஹனிமூனுக்காக வெளிநாடு சென்றுள்ளதையும் தெரிந்து கொண்டார். அதைவிட வேறு எந்த விபரங்களையுமே அவளிடம் இருந்து அவரால் பெற்றுக்கொள்வதற்கு முன்னமே அவள் கதவை சாத்திக் கொண்டாள்.

வாத்தியாருக்கு அதற்கு மேலும் ஒரு நிமிடம்கூட அங்கே நிற்கமுடியாமல் மௌனமாக வெளியேறினார். அங்கு தெரிந்து கொண்ட விபரங்கள் அனைத்துமே வாத்தியாரின் மனநிலையை நன்றாகவே பாதித்திருந்தது.

ஒரு கணம் பொன்னம்மாளை யோசித்தார். அதை எண்ணியபடியே வீடு வந்து சேர இரவு 10 மணிக்கு மேலாகிவிட்டதாலும், பயணத்தின் அலுப்பினாலும் படுக்கைக்குச் சென்றுவிட்டார். படுக்கையில் படுத்துக் கொண்டாலும் பொன்னம்மாளைப் பற்றியே சிந்தித்துக்கொண்டு இருந்தார் கனகரத்தின வாத்தியார். ரவியின் வாழ்க்கைத் திருப்பத்தை பற்றி எப்படி பொன்னம்மாளிடம் எடுத்துச் சொல்வதென்ற மனக்குழப்பத்தோடு அயர்ந்தே விட்டார். நன்றாகவே தூங்கியவரை அந்த அதிகாலையின் குளிர்காற்று தட்டியெழுப்பியது.

சிந்தனையிலிருந்து மீண்டவர் படலையைத் திறந்துகொண்டு பொன்னம்மாளின் குடிசையை நோக்கச் செல்கிறார். அங்கே இரண்டொரு பேர் நிற்பதைக் கண்டு ஆச்சரியத்தோடு அவர்களைப் பார்க்கின்றார். என்ன விசயம் என தலையசைத்துக் கேட்க, "அப்பம் வாங்கலாமெண்டு வந்தனாங்கள் ஐயா. ஆனால் பொன்னம்மாள் ஆச்சி இன்னும் எழுந்திருக்கவில்லையாக்கும்" என்று சொல்லவே நேற்றும் உடம்புக்கு நல்லம் இல்லை எண்டு சொன்னவ. வருத்தம் ஏதும் கூடிப் போச்சுதே" என்றவாறு மெல்லமாக அறைக் குள்ளே நுழைகின்றார். நுழைந்தவர் அங்கு தரையில் சாய்ந்து படுத்திருக்கும் பொன்னம்மாள் அருகில் சென்று பொன்னம்மாள் என உடலைத் தட்டி எழுப்புகிறார். ஆனால் பொன்னம்மா மீளாத தூக்கத்தில் தூங்கி பல மணிநேர-மானதை அறிந்த வாத்தியார் கண்கள் கலங்கியபடி வெளியில் வருகின்றார்.

ஒரு மனிதனுடைய வாழ்க்கை என்பது கதைப்புத்தகம் போன்றது. அதில் சிலர் வாழ்க்கை சிறுகதை போன்றது. வேறு சிலரின் வாழ்க்கை நெடுங்கதை போன்றது. இதில் பொன்னம்மாளின் வாழ்க்கையும் ஒரு சிறுகதை போலவே முடிந்துவிட்டது. ரவியின் திசைமாறிய வாழ்க்கை ஒரு நெடுங்கதை யானால், அதை வாசிக்கும் பொன்னம்மாளும் வாழ்க்கையிலே இறந்திறந்தே உயிர்வாழ்ந்து கொண்டிருப்பாள்.

உறவினர்கள் இல்லாமல் ஊரார்கள் உதவியோடு பொன்னம்மாளின் இறுதி ஊர்வலம் அந்தக் கல்லறை நோக்கி ஊர்ந்துகொண்டிருக்கின்றது.

பொன்னம்மாளைப் பொறுத்தவரையிலே அவள் இங்கே ஓர் அநாதை பிணமாகவே பயணித்துக் கொண்டிருக்கிறாள். கனகரத்தின வாத்தியாரும் தன் கண்கள் நிரம்பிய கண்ணீர் முகத்தோடு சோகமாகவே அந்த இறுதி ஊர்வலத்தின் பின்னே நடந்துசெல்கின்றார்.



# யாழில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை 29

> **மிகவும் சவாலானதும் ஆபத்தானதுமான இக்களத்தை தளபதி பால்ராஜ் அவர்களிடம் பொறுப்புக் கொடுத்த பிரபாகரன், ஆனையிறவிற்கான சண்டையை நீதான் நடத்தப் போறாய், நீ பெரிய வீரன், எத்தனையோ சோதனை களை உனக்கு நான் தந்திருக்கிறேன், நான் உனக்கு வைக்கிற முக்கியமான சோதனையிது. உன்னுடன் 1200 பேரையும் குடாரப்பில் சூசை தரையிறக்கிவிடுவான். சிக்கலென்றால் உங்களை உடன் காப்பாற்றி வர ஏலாது.**

படையினர் மிகவும் விழிப்புடன் இந்தப் பகுதியை காவல் செய்தபோதும் ஏற்கனவே இந்தப் பகுதியில் தரையிறங்கப்போகின்ற புலிகளின் அணிகளிற்குரிய உணவு உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசிய நடவடிக்கைகளும் புலிகள் இப் பிரதேசத்தில் தரையிறங்குவதற்கும் சகல ஏற்பாடுகளை செய்வதற்கெனவும் புலிகளால் பத்துப் பேர் கொண்ட போராளிகள் அணியொன்று ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டது.

இந்த அணியானது செம்பியன்பற்று தெற்குப் பகுதியிலுள்ள காட்டுப் பகுதியிலும் அம்பன் தெற்குப் பகுதி யிலுள்ள கண்டல் காட்டுப் பகுதியிலும் நிலைகொண்டிருந்தனர். இவ்வாறு கண்டல் காட்டுப் பகுதியில் நிலைகொண்டிருந்த அணிகளிற்கு (கோகுலன், முத்துராஜா ஆகிய இரண்டு புலிகளின் விஷேட பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

முத்துராஜா என்பவர் அம்பன் காட்டுப்பகுதியில் இருந்தவாறு சில ஒழுங்கமைப்பு வேலைகளை செய்து கொண்டிருந்தபோது கோகுலன் என்பவர் உள்ளக வேவு நடவடிக்கைகளையும் உணவுவிநியோக நடவடிக்கைகளையும் உள்ளகத்தில் இருந்தவாறு அதாவது மாமுனை குடாரப்புப் பகுதிகளில் இருந்தவாறு கனகச்சிதமாக மேற் கொண்டார். இந்த தரையிறக்கத்தில் இசகுபிசகுகள் வராமல் மிகத் தெளிவாக தனது நடவடிக்கைகளை கோகுலன் செய்தமையால் தளபதி பால்ராஜ் எனப்படும் லீமாலால் இந்த சண்டை முடிந்ததன் பின்னர் புலிகள் இயக்கத் தலைவர் பிர்பாகரனால் லீமாலின் பரிந்துரைக்கு அமைய கோகுலன் பாராட்டப்பட்டு கோகுலனுக்கு வே.பிரபாகரனால் ஒரு கைக்கடிகாரமும் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இதை தொடர்ந்து தளபதி பால்ராஜ் எனப்படும் லீமாலாலும் கோகுலன் பாராட்டப்பட்டு மதிப்பளிக்கப்பட்டார். இவ்வாறு இந்தக் களமுனை அல்லது இந்தத் தரையிறக்கம் மிகத் துல்லிய மாகவும் கனகச்சிதமாகவும் முன்னெடுக் கப்பட்ட ஒரு நடவடிக்கையாகும். அதாவது இந்தத் தரையிறக்கத்திற் குரிய பொருத்தமான இடம் தெரிவு செய்யப்பட்டதையடுத்து தளபதி பால்ராஜ் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் ஆலோசனையை பெற்று அடுத்தகட்ட நடவடிக்கையில் இறங்குவதற்கு உடனடியாகவே தயாராகினார்.

எமது கட்டுப்பாட்டுப்பகுதியிலிருந்து 5km கடலால் நகர்ந்து இரண்டு இராணுவ முகாம்களிற்கு நடுவில் இருந்த குடாரப்பு மாமுனையில் தரையிறங்கி வடமராட்சி கிழக்கையும் தென்மராட்சியையும் பிரித்து நிற்கும் சதுப்புக் கடல்நீரேரியைக் கடந்து 10km தூரம் நகர்ந்து கண்டி வீதியை மறித்து நிற்கவேண்டும். அங்கு 1km நீளஅகலத்தைக்கொண்ட பெட்டியமைத்து விநியோகத்தை தடுப்பதன்மூலம் ஆனையிறவை வெற்றிகொள்வதற்கு முடிவெடுக்கப்பட்டது.

மிகவும் சவாலானதும் ஆபத்தானது மான இக்களத்தை தளபதி பால்ராஜ் அவர்களிடம் பொறுப்புக் கொடுத்த பிரபாகரன், ஆனையிறவிற்கான சண்டையை நீதான் நடத்தப் போறாய், நீ பெரிய வீரன், எத்தனையோ சோதனை களை உனக்கு நான் தந்திருக்கிறேன், நான் உனக்கு வைக்கிற முக்கியமான சோதனையிது. உன்னுடன் 1200 பேரையும் குடாரப்பில் சூசை தரையிறக்கிவிடுவான். சிக்கலென்றால் உங்களை உடன் காப்பாற்றி வர ஏலாது.

ஆனால் நீ, A-9 நெடுஞ்சாலையை இடைமறித்து யாழ்ப்பாணத்திலிருந்து ஆனையிறவிற்கு வரும் விநியோகத்தை நிறுத்தவேண்டும். அதைச் செய்தால் ஆனையிறவுதானா விழும். நான் குடாரப்பில் தரையிறக்கிவிடுவேன். நீ A-9 வீதியால்தான் வரவேண்டும் எனக்கூறி தனது திட்டத்தை விளக்கினார். குடாரப்பு - இத்தாவில் பகுதியின் தரைத் தோற்றமானது சண்டையிடுவதற்கு சாதகமான இடமாக கருதமுடியாது. தரையிறங்கும் குடாரப்பு மணற்பரப்பு களுடன் பனை, சிறுபற்றைக் காடுகளைக் கொண்ட பிரதேசம். குடாரப்பிலிருந்து இத்தாவிலுக்கு இடைப்பட்ட பகுதி சதுப்பு நிலத்துடன்கூடிய கண்டல் மரங்கள் வளர்ந்திருக்கும் நீரேரியைக் கொண்ட பிரதேசம். இந்த நீரேரியைத் தாண்டித்தான் இத்தாவிலுக்குள் கனரக ஆயுதங்கள் வெடிபொருட்கள் சகிதம் நகரவேண்டும். அதுமட்டுமன்றி காயம், மரணங்களை அப்புறப்படுத்தல் உட்பட அனைத்து விநியோகங்களும் இந்த நீரேரிக்குள்ளால்தான் செய்யமுடியும்.

அப்பகுதிக்கான விநியோகங்களோ காயப்பட்டவர்களை வெளியில் எடுப்பதோ படையணிகளை நகர்த்துவதோ உடனடிச் சாத்தியமில்லாத தரையமைப்பு. அத்துடன் தளபதி தீபன், தாளையடி முகாமைத் தகர்த்து விநியோகத்திற்கான தரைவழிப் பாதையை ஏற்படுத்தும்வரை அணிகள் கொண்டு செல்லும் வெடிபொருட்கள் உணவு போன்றவற்றை வைத்தே தாக்குதலில் ஈடுபடவேண்டியிருந்தது.

இப்படியான சாதகமில்லாத தரையமைப்பு சூழலை சாத்தியமான களமாக மாற்றி வெல்லவேண்டும் என்பது மட்டுமல்ல. குடாரப்பில் தரையிறங்கி கவச வாகனங்கள். நவீன விமானப்படை மற்றும் கடற்படை உள்ளிட்ட அதிவல்லமை பொருந்திய படைகள் சிறப்புப்படைகளின் நடுவே அவர்களின் பிடரிக்குப் பின்னால் நின்று மோதுவது என்பது கற்பனைசெய்து பார்க்கமுடியாத செயல். இலங்கை அரசபடையின் பலத்துடனும் ஒப்பிடும் போ்து குறைந்தளவு போராளிகளுடன் எதிர்கொள்வது என்பது சாதாரணமான தல்ல என்று கருதினாலும் ஆன்மபலம் மிக்க போரிடும் தன்மைகொண்ட போராளி களை வைத்து உறுதியாக சண்டை பிடிக்கலாம், வெல்லலாம் என்பதில் திடமான நம்பிக்கை கொண்டவர்கள் புலிகள்.

மேலும் இந்த ஊடறுப்பு மறிப்புத் தாக்குதலைச் செய்வதற்கு தரப்பட்ட போராளிகளை வைத்து உனக்குத் தந்த பொறுப்பை நிறைவேற்றவேண்டும். மேலதிக உதவி கிடைக்குமென்று எதிர்பார்க்காதே எனவும் பிரபாகரன் கூறியிருந்தார். எனவே போராளிகளைப் பாதுகாத்து சண்டையிட்டு ஆனையிறவின் வீழ்ச்சிவரை விநியோகத்தை தடுத்து நிற்கவேண்டும் என்பதில் உள்ள கடினம் பால்ராஜ்க்கு தெரியும். தாக்குதலுக்கான பயிற்சியின்போது தனது போர் அனுபவங்கள் இராணுவத்தின் பலவீனங்கள் கிளிநொச்சியில் ஊடறுத்து நின்றபோது ஏற்பட்ட அனுபவங்கள் அங்கு இராணுவத்தை எதிர்கொண்ட முறைகள் போன்றவற்றை பகிர்ந்து போராளிகளின் மனவுறுதியையும் மனோபலத்தையும் மேலும் மேம்படுத்தினார்.

ஆனையிறவின் வெற்றி கைகூடுவதின் பிரதான தாக்குதல் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டும் என்ற முடிவில் உறுதியாக இருந்து பிரபாகரனின் எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக கடுமையாக உழைத்தார். தாக்குதலுக்கான திட்டத்தை போராளிகளுக்கு விளங்கப்படுத்தியதுடன் சிங்கள இராணுவம் எப்படிப்பட்ட உத்திகளைப் பயன்படுத்துவார்கள். அப்பிரதேசத்தில் எதிரி எப்படிப்பட்ட நகர்வுகளைச் செய்யமுடியும். குறிப்பாக ராங்கிகளின் உதவியுடன் எதிரி நகரும்போது ராங்கியைப் பற்றி கவலைப்படாமல் அதை விட்டிட்டு வரும் படையினரைக் கொல்லுங்கள்.



ராங்கியால் தனியவந்து ஒன்றும் செய்ய ஏலாது. அது ஒரு குருட்டுச் சாமான் கிட்டப்போனால் என்ன நடக்கு மென்று ராங்கியில் உள்ளவர்களிற்குத் தெரியாது. ராங்கியை விட்டிட்டு பின்னாலே ஏறி குண்டை கழற்றிப்போட்டு ராங்கியை அழிக்கலாம், என நம்பிக்கையுடன் நகைச்சுவையாக கதைக்கும் அவரது பாணி எந்த புதிய போராளியையும் சிலிர்த்தெழச்செய்யும். தன்னம்பிக்கை யுடன் உத்வேகமாகப் போராடச் செய்யும் தன்மைகொண்டது. போராளி களிற்கு சண்டையின் தன்மை பற்றியும் அதில் வரும் ஆபத்துக்களை எதிர் கொள்ளும் முறைபற்றியும் தெளிவு படுத்தி சரியான விளக்கத்துடன் தயார் படுத்தினால் இலகுவாகவும் விளையாட் டாகவும் சண்டைபிடிக்கக் கூடிய மனோநிலை அவர்களிற்கு உருவாகும் என்பது அவரது நம்பிக்கை.

அது இத்தாக்குதலுக்கு மிகவும் அவசியம் என்பதை உணர்ந்து அணிகளை தயார்படுத்துவதற்காக உழைத்தார். பயிற்சியின்போது ஒவ்வொரு சிறிய விடயங்களையும் உன்னிப்பாகப் பார்த்து உலக வரலாறு ஒருகணம் ஸ்தம்பித்துப் பார்க்கப்போகின்ற யுத்தத்திற்காக ஒவ்வொரு விடயமாக செதுக்கிச் செதுக்கித் தயார்படுத்தினார். இவ்வாறு தரையிறங்குவதற்குரிய நேரமும் நாளும் தேர்வுசெய்யப்பட்டதை அடுத்து தரை யிறக்கத்திற்குரிய முழுமையான நட வடிக்கைகள் நிறைவுபெற்ற நிலைமை யில் இந்தத் தரையிறக்கத்திற்குரிய நாளும் நேரமும் தீர்மானிக்கப்பட்டது. இந்த தீர்மானங்கள் பின்னைய நாட்கள் முள்ளிவாய்க்கால் முடிவுகள் வரை எம்மவர்களை எவ்வாறு இழுத்துச் சென்றது என்பதைத் தொடர்ந்து பார்ப்போம். **(தொடரும்...)**



# வலியும் சுகம் தரும்...?

அறைக்குள் இருந்தான் சுகந்தன்.
புத்தகத்தை விரித்து
வைத்திருந்தாலும் படிப்பில் மனம்
ஓடவில்லை. வெளியே “களுக்”
சிரிப்புக்களும், “கலீர், கலீர்”
வளையல் ஓசைகளுமாகத்
தங்கையின் தோழிகள்.

பூக்களின் மாநாடு கூட்டத்தில்
கவிதைகளின் தேன்சிதறல்
அவர்கள் பேச்சில்.
இவன் மூளை, எல்லாப்
புலன்களையும் இழுத்து
மூடிவிட்டு,

காதுக்கு மட்டுமே கதவுகள்
திறந்து செயற்பட அனுமதி
வழங்கியிருந்தது.

“ஜல் ஜல்...” கொலுசொலிகள்!
உடலெங்கும் இரத்தத்தைப்
பாய்ச்சும் இதயத்தின்
துடிப்போ அவையாக
மாறியிருந்தன.

இதயத் துடிப்புக்களைக் காலில்
கட்டியபடியல்லவா இந்தப்
பெண்கள் நடக்கிறார்கள்!

தயவுசெய்து
பாதக் கொலுசுகளைக்
கழற்றிவிட்டு நடவுங்கள்.
இல்லையெனில் ஒவ்வொரு
“ஜல்”லுக்கும் வீழ்ந்து துடிக்கிறது.
என் இதயம்!
என்று அறைக்கு இந்தப்
பக்கமிருந்து இவன் மனம்
அழுதது.

அந்தக் கூட்டத்தின் நடுவே
அஜந்தாவும் இருப்பாள்.
அஜந்தா!

மலர்களிலிருந்து
பிறந்தவள், மகரந்தம்
உண்டு வளர்ந்தவள்.
அவள் வளைவுகளில்
பயணம் செய்யும்
கண்களுக்கு விபத்து நிச்சயம்.
இடுப்பு தெளிவில் விழுந்த
கண்ணுக்கு மேலே...
ஏறும் கண்களோ...
இமைகளை மறந்துவிடும்!
ஆபத்தான ஏற்றம் தாண்டி
சங்கு வளைவைக் கடந்தால்...
ஊறும் தேன் வாரிதியின்
உற்பத்தி ஸ்தானங்கள்.
உலக வியப்புகளையெல்லாம்
அந்த உதட்டுக்குள்
ஒளித்திருப்பாள்.

இதழ் நடுவில் ஆரம்பித்து,
ஓரங்களில் நீண்டு மேலெழுந்து
கண்களில் வெடிக்கும்
அந்த ஒரு கீற்றுப் புன்னகையில்
உலகில் இருள் அழியும்!

சுகந்தன் அவளோடு பேசி
அறியான். ஆனாலும் அவளை
முழுவதும் அறிந்தவனானான்.

அவளது முதல் பார்வையே
அவன் இதயத்தைத் துளைத்து,
ஒரு வெற்றிடமாக்கி
இயந்திரம் போல
அங்கே இருந்ததையெல்லாம்
துடைத்து அப்புறப்படுத்திவிட்டு,
அவளை மட்டும் முழுதாக
நிரப்பியிருந்தது.

ஒரு துளையிடும் கருவி முனையாக
உட்புகுந்து இதயச் சுவர்களை
உடைத்துப் புதுப்பித்த அவளது
அடாவடித் தாக்குதலில் இவனுக்கு
வலி ஏதும் இருக்கவில்லை.
அல்லது “வலியும் இத்தனை
சுகமா” என்று வியந்திருந்தான்.



பின்னரும்...
பாதிப்பிலிருந்து இவன்
மீண்டுவிடாதவாறு பார்வைகளால்
நிலைகுலைய வைத்தாள்.

முகம் முழுவதும் தங்கையையே
பார்க்க, அவளுடனேயே பேசிக்
கொண்டிருப்பாள் அஜந்தா!

ஆனாலும் இவனைத் தன்
கட்டளைகளுக்குப் பணியவைத்து,
இவன் பக்கம் திரும்பாமலே இட்ட
உத்தரவுகளின்படி இவனை இயங்க
வைத்துக் கொண்டிருந்தாள்.

அவளிடமிருந்து கண்ணுக்குத்
தெரியாத நூலிழைகள் புறப்பட்டு
இவனை நோக்கி வந்து
கொண்டிருந்தன. இவன் நூலில்
ஆடுகின்ற பொம்மை ஆனான்.

தரையில் நடக்கும் அவள்
பாதங்களின் மென்மைக்குப்
பயந்தது இவன் நெஞ்சு.
பாரங்களைச் சுமந்திருக்கும்
இடைக்காகவும் வருந்தியது.

வீசும் காற்றுக்கெல்லாம் அவள்
கன்றிவிட மாட்டாளோ என்று
இவன் மூச்சுவிடவே சிரமப்பட்டான்.

அவள் கண்களில் ஓரக் கதிர்
வீச்சுக்காய் இவன் காத்திருக்கத்
தலைப்பட்டான்.

உதடுகளுக்குள் எந்நேரமும் ஒரு
புன்னகையை ஒளித்து
வைத்திருக்க இவளுக்கு எப்படிச்
சாத்தியப்படுகிறது?
மொட்டுக்குள் வாசனை
புதையுண்டு கிடப்பதைப் போல்!

இதழ்களுக்குள் மறைந்து
கிடக்கும்
அவள் புன்னகை சொல்கிறது:

“என் கண்களைத் திருப்பினால்,
அதற்காகவே தவங்கிடக்கும்
உன் கண்களைத்
தாக்கிவிடுவேன்.
ஆபத்தின்றி நான்
உனைப் பார்க்க
நீ அவ்வப்போதாவது
இமைகளை
அடைத்துக் கொள்ள
வேண்டாமோ? பார்வைக்கு
ஏங்கும் உன்னிடம் அதைத்
தாங்கும் வலுவுண்டோ?

உன்னை நேர் பார்த்து ஒரு சொல்
பேச விரும்புவேன். ஆனால் நீ
உடைந்து போய்விடுவாய்
என்றல்லவா தோன்றுகிறது!


என் பார்வையைத் தாங்கும்
பக்குவத்தைப் பெறு. பதற்றத்தை
தனி இதயத்தை
வலுவுள்ளதாக்கிக் கொள்.
அப்போது உன் பக்கம்
திரும்புவேன்.”

அவள் புன்னகை அரும்பைப்
பத்திரமாய்ச் சுமந்து அவனைப்
பார்க்காமலே சென்றாள்.

**முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன்று உண்டு.**

*குறள் - 1274*



**சிந்தியா! ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் முதலாவது இந்தியப் பயணத்தால் ஆகப் போவது என்ன?**

**எஸ்.ஜாவிதா, மாத்தறை.**

என்னையும் உங்களையும் போன்ற சாதாரண மக்களுக்கு நேரடியாக எதுவுமே ஆகப் போவதில்லை. இரு நாடுகளுக்கு இடையிலான சில ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் பூகோள ஆதிக்கப்போட்டியில் சீனாவை அமுக்க நினைக்கும் சக்திகளுக்கு அவர்களின் எதிர்பார்ப்புக்கள் சில வெற்றி அளிக்கும்.

**சிந்தியா! அமெரிக்காவும் பிரிட்டனும் வாக்குறுதி அளித்தபடி ஐ.நா. விசாரணை அறிக்கை வெளிவரும் என சம்பந்தர் கூறியுள்ளரே?**

**ச.பரமேஸ்வரன், கிளிநொச்சி.**

"சம்மந்தர் ஐயா ஒரு சாணக்கியர்" என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறார். அமெரிக்காவும், பிரிட்டனும் என்ன சொல்லியது என்பதை சம்பந்தன் ஐயா சொல்லவே இல்லை. அப்படியானால் ஆறு மாதங்களுக்கு ஒத்திவைக்கப்படும் என்பதைத்தான் ஐயாவுக்குச் சொல்லி இருக்கிறார்கள் போலும்...!

**சிந்தியா! வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவார்களா?**

**என்.ஜுட், மன்னார்.**

இன முரண்பாடுகளை காரணமாகக் கூறி புலம்பெயர்ந்து சென்று இன்னும் உரிய அனுமதிகள் கிடைக்காமல் இருப்பவர்களுக்கு தற்போதைய நாட்டின் நிலவரம் கலக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கிறது.

போதாக்குறைக்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் விசா இல்லாமல் தங்கியிருப்பவர்களை திருப்பி அனுப்புவது தொடர்பில் சில நகர்வுகளை மேற்கொள்கின்றன. இதற்குக் கனடாவும் ஆதரவு தெரிவித்து உள்ளது. இருந்தாலும் கனடா ஒரு குடியேற்ற நாடு என்பதால் தீவிரம் காட்டாது என்பதை நம்பலாம்.

**சிந்தியா! மலையகத்தில் சாராயக் கடை உருவாகுவதற்கு அரசியல் வாதிகளும் காரணமா?**

**எம்.சங்கீதா, அம்பாறை.**

மலையகத்திலும் சாராயக் கடைகள் உருவாக அரசியல்வாதிகளும் காரணம் என்பதுவே சரியானது.

நாடுபூராகவும் உள்ள மதுபானச் சாலைகளில் கணிசமானவற்றிற்கு அந்தந்தப் பிரதேச அரசியல்வாதிகளுடன் நெருங்கிய தொடர்பு இருப்பதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

**சிந்தியா! இலங்கை கிரிக்கெட் அணி இம்முறை சாதிக்குமா?**

**ப.முருகானந்தன், காலி.**

உங்களின் கேள்விக்குப் பதில் எழுதும்போது இலங்கை அணி முதலாவது சுற்றை விளையாடி இருக்கிறது. நியூசிலாந்திடம் தோல்வி அடைந்திருக்கிறது.

இலங்கையின் பந்துவீச்சு களத் தடுப்பு என்பன உலகக் கோப்பைப் போட்டிகளுக்குத் தரமானதாக இல்லை.

ஆனால் ஒரு ஆறுதல். இரண்டு குழுக்களிலும் இருந்து நான்கு அணிகள் தெரிவுசெய்யப்படவுள்ளதால், எதிர்பாராத மாற்றங்கள் இல்லாதவிடத்து இலங்கை அடுத்த சுற்றுக்குத் தெரிவாகும்.

**சிந்தியா! வதந்திகள் எப்போதும் உண்மை ஆகுமா?**

**மு.பிரியா, புலோலி.**

என்ன பிரியா புரியாமல் இப்படிக் கேட்டுவிட்டுவிட்டீர்கள். உண்மை இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர்தானே தகவல்கள் அல்லது சம்பவங்கள் 'வதந்தி' ஆகின்றன.

**சிந்தியா! ஒரு பெண்ணின் அழகுக்கு அழகு சேர்ப்பது என்ன?**

**கொ.சாம்பவி, கோப்பாய்.**

அஜந்தனின் கேள்வியைப் பார்க்கும்போது பெண்கள் அனைவருமே அழகானவர்கள் என்ற உறுதியுடன் அவர் இருக்கிறார் போலும்!

சரி. அவருடைய கருத்தின்படியே பார்த்தால் ஒவ்வொரு பெண்களுக்குள்ளும் மறைந்திருக்கும் ஆளுமைகள் அவர்களை மேலும் அழகூட்டுகிறது என்று சொல்லலாம்.

**சிந்தியா! என்னை அறிந்தால் எப்படி?**

**சி.பவதாரணி, வவுனியா.**

கௌதம் மேனனின் இன்னொரு முத்திரை. அஜித்தின் வெற்றிப் பயணத்தின் இன்னொரு மகுடம். ஒரு மனிதனின் 13 வயதிலிருந்து 45 வயது வரையிலான வாழ்க்கைப் பயணம்தான் என்னை அறிந்தாலின் திரைக்கதை.

இதில் இளைஞன், நடுத்தர வயது என இரட்டை வேடத்தில் அஜித். இளைஞனுக்கு ஜோடி த்ரிஷா. மற்றைய கதாபாத்திரத்திற்கு ஜோடி அனுஷ்கா. இருவருமே போட்டியான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள். குடும்பத்துடன் சேர்ந்து ரசிக்கக்கூடிய ஒரு படம். இதற்கு இசையும் வலுச் சேர்த்திருக்கிறது எனலாம்.

# காதிலை பூ கந்தசாமி



## இன ஐக்கியத்தின் சின்னமாக தலைவர் சம்பந்தன்

நடைபெற்று முடிந்த 67 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்துகொண்டு சிறப்பித்ததன் ஊடாக நாட்டின் இனஐக்கியத்தின் சின்னமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்று சொல்லப்படுகின்ற மூத்த அரசியல்வாதி திரு சம்பந்தன் அவர்கள் மிளிர்ந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அவர்கள் தெரிவித்துள்ளார்.

தற்போது வோஷிங்டனில் தங்கியிருக்கும் அவரைத் தொடர்புகொண்ட கந்தசாமி மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களிலே இலங்கையில் ஏற்பட்ட இனவன்முறைகள் இனத்துக்கு சிறுபான்மை இனங்களுக்கு எதிரான செயற்பாடுகள் அதனால் உருவாகிய தனிநாட்டுக் கோரிக்கைகள், அரசியல் தீர்வு பற்றிய அபிலாஷைகள் என்பவை எல்லாம் நீர்த்துப்போகும் அளவிற்கு ஐக்கிய இலங்கைக்குள் வாழ்வதற்கான அறிகுறியாகவே மூத்த தலைவரின் பிரசன்னத்தை அரசாங்கம் பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

**கா.பூ:-** வணக்கம் முத்துத்தம்பி அண்ணை. நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஊர்ப்பக்கம் வந்திருக்கிறியள் போல. அரசியல் நிலவரங்கள் எல்லாம் எப்படி இருக்கு. கொஞ்சம் எடுத்து விடுங்கோ. கேட்டுக் கனகாலம் ஆச்சு.

**மு.தம்பி:-** ஓம்... ஓம்... எக்கச் சக்கமான சுவாரசியமான சம்பவங்கள் எல்லாம் நாட்டில நடக்குது. அதில ...க்கு மாகாணசபைக்காரர் அண்மையில கொண்டு வந்த தீர்மானம்தான் வெகு ஜோராய் இருக்கு.

**கா.பூ:-** ஓம் அண்ணை இதை எதிர்பார்த்ததுதானே! தேர்தல் நெருங்கிக்கொண்டு இருக்கேக்குள்ள இமேஜ் ஜெட் வேகத்தில டமேஜ் ஆகிக்கொண்டிருக்கு. சுதந்திர தினத்தில தலைவர் நிக்கிறார். கிழக்கில முதலமைச்சர் பறிபோட்டுது. தேசத்தின் காவலாளிகள் என்ன செய்யினம் எண்ட சனம் குமுறுது. இதைச் சரி செய்யவேணும் எண்டா உப்பிடி ஏதாவது செய்யத்தானே வேணும்.

**மு.தம்பி:-** அது சரியடா தம்பி. ஆனா உந்தத் தீர்மானம் சில வெளிநாடுகளை முகஞ்சுழிக்க வைச்சிருக்குது போல. அவையள் புதுசா வந்திருக்கிற அரசாங்கத்தை ஓஹோ எண்டு புகளேக்க இவையள் உப்பிடித் தீர்மானம் இயற்றினா முகஞ்சுழிப்பினம்தானே.


**கா.பூ:-** அதுக்குத்தான் பேச்சாளர் அந்தப் பல்டி ஒண்டு அடிச்சிருக்கிறார் பார்த்தனீங்கள்தானே. அவர் சொல்லுறார் இந்தத் தீர்மானம் முன்னைய அரசாங்கத்திற்குத்தான் 'அப்ளிக்கபிள்' இப்ப இருக்கிறவைக்கும் உதுக்கும் சம்பந்தம் இல்லையாம்.

**மு.தம்பி:-** ஹீ... ஹீ... ஹீ... இதைத்தான் எங்கடை ஆக்கள் சொல்லுறவையள், மீனுக்கு வாலையும் பாம்புக்கு தலையையும் காட்டுறவையள் எண்டு...!

"யாவும் கலப்படமற்ற கற்பனை"

வரலாறு படைத்த வல்லுநர்கள்

# பிதோவன்



செவிட்டுத்தன்மை மட்டுமல்லாமல், இவர் வாழ்க்கையை அல்லல்படுத்தியது - பணப் பற்றாக்குறையும்கூட. தம் சகோதரரின் மகனுடைய பாதுகாவலராகவும் இருந்தார் பிதோவன். தனிமையான வாழ்க்கையே நடத்தினார். ஆனால் பிதோவன் இல்லற வாழ்க்கை நடத்த இயலாதவராக இருந்தார் என்பதை அவரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களான கடிதங்கள் கூறுகின்றன.

காரணம் பிதோவன் கிரந்தி எனப்படும் மேகப் புண்ணினால் பாதிக்கப்பட்டிருந்ததாகக் கருதப்படுகின்றது. இத்தகைய குறைபாடுகளுடன் போராடியபடி இசையை வளர்ப்பது இலகுவான காரியமல்ல. "நான் விதியை அதன் குரள்வளையை நெரித்துக்கொல்வேன்!" என்று மூர்க்கமாகப் போராடினார் பிதோவன்.

ஐந்தாவது சிம்பனியை விதி கதவைத் தட்டுகிறது என்ற கருத்துக் தொனிக்கும்படி உருவாக்கினார். தமது எட்டாவது சிம்பனியை முடிக்கும்வரை இதே பிடிவாதத்துடன் செயற்பட்டவர். அதன்பின் சில ஆண்டுகள் அமைதியாக இருந்தார். பிறகு வாழ்வின் கஷ்ரங்களை அனுபவித்து அனுபவப்பட்டபின் அவருடைய பேச்சிலும் செயலிலும் புதிய திருப்பம் ஏற்பட்டது. அதன்பின்னர் உருவாக்கிய இசைக்கோவைககளில் வாழ்க்கையைப் புரிந்துகொண்ட புதிய நம்பிக்கையைக் காணமுடிகின்றது.

ஜேர்மனியிலுள்ள பேர்ன் நகரில் 1770 ஆம் ஆண்டு டிசம்பரில் பிறந்தார் பிதோவன். ஹெலோன் நகரில் ஆர்ச் பிஷப்பின் அவையில் பாடகராக இருந்தவர் பிதோவனின் தந்தை. முன்கோபக்காரர் - குடிகாரர். மனைவியை தன் குடிப்பழக்கத்தினாலேயே கல்லறைக்கு அனுப்பியவர்.

1889 இல் இவரது வாழ்க்கை படுமோசமாகவே அதன்பின் இவரது சம்பளத்தை ஆர்ச் பிஷப் குடும்பத்தின் மூத்த மகனும், தலைவனுமான பிதோவனிடமே வழங்கும்படி செய்தார். இவ்வளவு மோசமான தந்தையாக இருந்தாலும்கூட தன் மகன் பிதோவனின் திறமையில் அவருக்கு ஒரு கண் இருந்தது.

தன் மகனை மோர்ச்சார்ட்டைப் போல இளம் மேதையாக்க படாதபாடுபட்டார். ஆனால் அதில் தோல்வியே கண்டார். ஆனாலும் பிதோவனுக்கு இசையின் அத்திவாரத்தை உறுதியாகப் போட்டதில் தந்தையின் பங்கு முக்கியமானது. சிறுவயதிலேயே அரசவையில் பியோனா வாத்தியக் கலைஞராக புகழ்பெறலானார் பிதோவன்.

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(19.02.2015 தொடக்கம் 25.02.2015 வரை)

### மேடம்

இதுநாள் வரையில் இருந்துவந்துள்ள பணநெருக்கடிகள்மாறிச்சற்று முன்னேற்றம் காண்பதன்மூலம் மனநிம்மதி அடைவீர்கள். வீடு வாகனங்களை வாங்குவதற்கான புதிய முயற்சிகளில் ஈடுபட்டுவருவீர்கள். வீடுகளில் அல்லது யாத்திரையின் போது பொருள் இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் எச்சரிக்கையுடன் இருக்கவும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகவும் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லதாகும். கட்டி முடிக்கப்படாத தடைப்பட்ட ஆலயப் பணிகளை மீண்டும் தொடர்ந்து செய்வீர்கள். உடம்பில் எலும்பு நரம்பு போன்ற உபாதைகள் வந்து போகலாம். பொதுவாக இது ஒரு ஆறுதல் தரும் வாரமாகும்.

### இடபம்

மற்றவர்களை நம்பிப் பணம் பொருட்களை கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். குடும்பத்தில் தந்தையின் மருத்துவச் செலவுகளுக்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர வாய்ப்பு உள்ளது. பூர்வீகச் சொத்து சம்பந்தமான வழக்கு விசயங்களில் எதிர்பார்த்து இருந்த சாதகமான முடிவுகள் கிடைக்கும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களை. கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். புதிய கடன்வாங்கிப் பழைய கடனை அடைக்க முயற்சிப்பீர்கள். பிரிந்துபோன உறவுகளுடன் மீண்டும் சேர்ந்து வாழ வாய்ப்புள்ள காலமாகும். பொதுவாக இது ஒரு எச்சரிக்கை நிறைந்த வாரமாகும்.

### மிதுனம்

கூட்டுத்தொழில் செய்வதற்கான புதிய முயற்சிகளில் நல்ல பலன் வந்துசேரும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் பொருட்செலவுகளும், மனநிம்மதி இன்மையும் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் கவனம் தேவை. வெகுகாலமாக வழிபடாமல் விட்டுப்போன குலதெய்வ ஆலயங்களை தரிசனம் செய்வதற்கான காலமாகும். உற்றார் உறவினர்களின் திடீர வரவால் பொருட்செலவுகளும், புதிய பொறுப்புக்களும் உண்டாகலாம். வர வேண்டிய பூர்வீகச் சொத்துக்களில் இதுநாள் வரையில் இருந்து வந்துள்ள பிரச்சினைகளில் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் நல்ல முடிவுகள் கிடைக்கும். செய்தொழிலில் புதிய கூட்டாழிகளால் எதிர்பாராத சில ஆதாயங்களை அடைவீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### கடகம்

உத்தியோகத் துறையினருக்குப் பதவி உயர்வுடன்கூடிய இடமாற்றமும் மேலதிகாரிகளின் ஆதரவும் உண்டாய் இருக்கும். உடம்பில் சளி சம்பந்தமான உபாதைகள் வந்து போகலாம். பொதுச்சேவைகளான ஆலயத் திருப்பணிகளில் பங்குகொண்டு நற்பெயர் எடுப்பீர்கள். பொதுவாக இது ஒரு மனச்சந்தோசம் தரும் வாரமாகும். குடும்பத்தில் தேவையற்ற மனக்குழப்பங்கள் வர இருப்பதால் மிகுந்த கவனமுடன் இருத்தல் உகந்ததாகும். விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ள காலமாகும் அண்டை அயல் வீட்டுக்காரர்களிடம் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது. தொலைதூரப் பயணங்களை மேற்கொள்வதன் மூலம் எதிர்பார்த்த காரியங்களில் மன நிறைவடைவீர்கள்.

### சிங்கம்

புதிய ஆடை ஆபரணங்களை வாங்குவதன் மூலம் பொருட்செலவுகள் . உண்டாகலாம். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தாய்நாடு சென்று திரும்ப வாய்ப்பு உள்ளது. கணவன், மனைவி உறவுகளில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி மனநிம்மதி அடைவீர்கள். வங்கிகளில் இருந்து வெகுகாலமாக எதிர்பார்த்து இருந்த உதவித்தொகை கிடைக்கும். உறவினர்களின் எதிர்பாராத திடீர்வரவுகளால் வீண் பொருட்செலவுகள் உண்டாகலாம். சொத்து விசயமாகக் கோர்ட் வழக்கு போன்றவற்றில் நல்ல சாதகமான முடிவுகளை எதிர்பார்க்க காலதாமதம் ஆகலாம். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். விவசாயம் சுமாராகப் பலிதமாகும்.

### கன்னி

காதல் சம்பந்தமான விசயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும். வெளிநாட்டில் இருந்து செய்திகள் கிடைப்பதற்கு இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். நீண்டகாலமாக வரவேண்டிய பணம் மற்றும் பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். கணவன், மனைவி உறவுகளில் இதுநாள் வரை இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் தீர்ந்து ஒற்றுமை உண்டாகும். பொதுத் தொண்டுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் மனநிறைவை அடைவீர்கள். நீண்டகாலமாக காணாமற்போன பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்ப வீடு வந்துசேரும். செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச்சொல்லுக்கு ஆளாகநேரிடலாம்.

### துலாம்

பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்பட்டாலும் அவர்களால் பாராட்டுகளும் பொருள்வரவும் உண்டாகும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். வெளிநாடு சென்று வருவதற்கான முயற்சிகளில் நண்பர்களின் ஆதரவுகள் கிடைக்கும். தந்தையின் உடல்நிலை பாதிப்பால் குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் ஏற்படும். மற்றவர்களின் விசயங்களுக்காக ஜாமீன் போடுவதைத் தவிர்த்தல் நல்லது. உடம்பில் வாயு, வயிறு சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். வீட்டை அலங்கரிப்பதிலும், வாகனங்களைப் பழுது பார்ப்பதன் மூலமும் பொருட்செலவுகள் ஏற்படலாம். மாணவர்களுக்கு கல்வி உதவி தொகைகள் மற்றும் பரிசு, பாராட்டுக்களும் கிடைக்கும்.

### விருச்சிகம்

தென்திசையில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்பீர்கள். காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல நெய்திகள் வந்து சேர இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். தாயின் உடல்நிலையில் ஏற்பட்டு இருந்த பாதிப்புகள் நீங்கி மருத்துவச் செலவுகள் குறையும். மாணவர்களுக்கு கல்வியில் பரிசு மற்றும் பாராட்டுக்களைப் பெறவாய்ப்பு உள்ள காலமாகும். ரேஸ் லோட்டரி போன்றவற்றின் மூலமாகப் பணம் கிடைக்கும் என எண்ணி ஏமாற்றம் அடையவேண்டாம். பணப் புழக்கம் சுமாராகக் காணப்படும். அரசியல்வாதிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் பணியாற்றுதல் நல்லது. அண்டை அயலார்களுடன் காரணமற்ற சிறிய விசயங்களுக்காக வீண் பிரச்சினைகள் உருவாக இருப்பதால் கவனமுடன் பேசிப் பழகுதல் நல்லது.

### தனுசு

குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகள் வர இருப்பதால் எதிலும் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. பொருளாதாரத்தில் இருந்து வந்த நெருக்கடிகள் மாறி சற்று முன்னேற்றம் காண்பீர்கள். தீராத நாட்பட்ட நோய்கள் தீர்வதற்காக வேறு மருத்துவர்களின் உதவிகளை நாடுவீர்கள். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக நீண்டதூர உல்லாசப் பயணங்கள் சென்றுவருவதன்மூலம் மனமகிழ்ச்சியை அடைவீர்கள். வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்களது உறவுகளைத் தேடி தாய்நாடு சென்றுவருவதற்கான வாய்ப்பு உள்ள காலமாகும். தேவையற்ற விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்காதிருங்கள். வெளிநாடு சென்று வருவதற்கான முயற்சிகளில் பணம் ஏமாறவேண்டாம்.

### மகரம்

உடல்நிலையில் கண்,காது போன்ற இடங்களில் கவனம் தேவை. வடக்குத் திசையிலிருந்து பெண்களால் எதிர்பாராத ஆதாயம் உண்டாகும். குடும்பச் சொத்து சம்பந்தமாகிய விசயங்களில் பெரிய மனிதர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மற்றவர்களின் விசயங்களில் அநாவசியமாகத் தலையிட்டு சிக்கலில் மாட்டிக்கொண்டு அவதிப்படாதீர்கள். பங்காளிகளுடன் சேர்ந்து கூட்டுத்தொழில்களை செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். வெளிநாட்டில் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் இருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும். புதிய கடன்கள் வாங்குவதைத் தவிர்த்தல் நல்லது. சகோதர சகோதரிகளின் தடைப்பட்டு வந்த திருமண காரியங்கள் சம்பந்தமாகப் புதிய கடன்களை வாங்குவீர்கள்.

### கும்பம்

உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு எதிர்பார்த்த இடங்களுக்கு இடமாற்றம் ஏற்படலாம். ஒரு சிலருக்கு வீடு மற்றும் தொழிற்சாலைகளைத் திருத்திக்கட்ட வாய்ப்பு உள்ளது. கைவிட்டுப் போன பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். தீராத நாட்பட்ட நோய்களுக்கு புதிய மருத்துவரின் உதவிகளை நாடுவீர்கள். வங்கிகள் மூலமாக எதிர்பார்த்து இருந்த பணஉதவிகள் கிடைப்பதற்கு சற்று காலதாமதம் ஆகலாம். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். பழைய வீடு வாகனங்களைப் பழுதுபார்ப்பதன் மூலமாகப் பொருட்செலவுகள் வந்துசேரும். நில புலன்கள் சம்பந்தமான பழைய வழக்குகள் மீண்டும் தொடரும். காதல் விசயங்களில் பெண்களிடம் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நல்லது.

### மீனம்

உத்தியோகம் பார்ப்பவர்கள் தங்களது மேலதிகாரிகளுடன் மிகவும் பொறுமையுடன் பணியாற்றுதல் நல்லதாகும். உற்றார், உறவினர்களின் திடீர்வரவுகளால் வீண் பொருட்செலவுகள் உண்டாகும். தேவையற்ற புதிய நட்புக்களால் மனநிம்மதி இழக்க வாய்ப்பு உள்ளதால் மிகுந்த கவனமுடன் இருக்கவும். உடல்நிலையில் இதுநாள் வரை இருந்துவந்துள்ள மருத்துவச் செலவுகள் சற்றுக்குறையும். மற்றவர்களுக்கு உதவிசெய்வதில் எச்சரிக்கையுடன் இருக்கவும். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். அரசியல்வாதிகளால் எதிர்பார்த்த ஆதாயம் கிடைப்பதற்கு இன்னும் சற்றுப் பொறுமையுடன் இருத்தல் நல்லது. குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவர எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)



# மனிதாபிமானம்

நம் முன்னோர்களிடம் பகிர்ந்துண்டு வாழும் பழக்கம் மிகவும் உயரிய குணமாக பேணப்பட்டுவந்தது. இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு உணவுகொடுத்து தாமும் உண்பதை தமது தலையாய கடமையாக நம்பினர். ஏழையின் வடிவிலே இறைவனைக் காணலாம் என்ற நம்பிக்கையில் ஏழைகளுக்கு தம்மால் இயன்ற உதவிகளை நல்கிவந்தனர். ஆனால் கால மாற்றம், பொருளாதார நெருக்கடிகள் தற்போது இந்தப் பண்பே மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. ஒவ்வொருவரும் தம் தேவைகளை நிறைவேற்றுவதற்கே அல்லாடுகின்ற காலகட்டத்தில் ஏனையவர்களைச் சிந்திப்பது எப்படி?

ஆனால், இன்றைய காலகட்டத்திலும் ஏனையவர்கள் உணவு உண்பதைக் கண்டு மகிழுகின்ற உயர்ந்த உள்ளமும் கொண்ட மனிதர்கள் எம்மத்தியில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றார்கள். அவ்வாறானவர்களுள் மேலே உள்ள படத்தில் இருப்பவர் இன்னும் கொஞ்சம் வித்தியாசமானவர். உங்களுக்குத் தெரியும் இலங்கை எழில் கொஞ்சும் திருமலை நகரிற்கு துள்ளி விளையாடும் மான்கள் அழகுசேர்க்கும்.

ஆனால் அவற்றிற்குப் போதுமான உணவு கிடைப்பதற்கான பௌதீகச் சூழல் குறைவு என்றே கொள்ளலாம். அது உணர்ந்து கொண்ட இந்த மாமனிதர் மான்களுக்கு உணவு வழங்குவதைத் தனது தலையாய கடமையாகக் கொண்டு பின்பற்றிவருகின்றார். இவ்வாறானவர்கள் எதிர்காலச் சந்ததியினருக்கு முன்மாதிரிகளாகத் திகழ்கிறார்கள் என்பது மறுப்பதற்கில்லை.



# ஐந்தடிக் கூந்தல்

பிரேசிலில் வாழ்ந்துவரும் 14 வயது சிறுமி ஒருவர் பிறந்தது முதல் தலைமுடியை வெட்டாமல் சுமார் 1.6 மீற்றர் நீளத்திற்கு தலைமுடியை வளர்த்துள்ளார்.

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் வாழ்ந்துவரும் Natasha Moraes de Andrade என்ற அந்த சிறுமி, பிறந்தது முதலே தலைமுடியை வெட்டாமல் வளர்த்துள்ளார்.

இவர் இவ்வாறு தன் உயரத்திற்கு தலைமுடியை வளர்த்துள்ளதால், மற்ற சிறுமிகளை போல இயல்பாக இருக்கமுடியாததோடு வீட்டிற்குள்ளேயே சிறைப்பட்டு கிடந்துள்ளார்.

தனது நீண்ட தலைமுடியை பராமரிக்க தினமும் ஒன்றரை மணி நேரங்களை செலவிட வேண்டியுள்ளதாக தெரிவித்து உள்ளார்.

இவர் தனது தலை முடியை பராமரிக்க பயன் படுத்தும் ஷம்பூவை வாங்க ஆண்டு ஒன்றுக்கு சுமார் 400 பவுண்டுகள் செலவாகுவதாகவும், இது தங்கள் குடும்பத்திற்கு பெரிய செலவாக உள்ளதாகவும் சிறுமியின் தாயார் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பிறந்தது முதல் வெட்டாமல் வைத்திருந்த தலைமுடியை சுமார் 4,500 டொலர்களுக்கு விற்கப்போவதாகவும், அந்த பணத்தின்மூலம் தனது படுக்கையறையை புதுப்பிக்கப் போவதாகவும் கூறியுள்ளார். எனினும் தலைமுடி வெட்டுவதன்மூலம், தான் புதிய வாழ்க்கை வாழ்வதை உணர்வார் என்று கூறியுள்ளார்.







# ஆரம்பம்






மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டிகள் கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. தலா இரண்டு குழுக்களாகப் அணிகள் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் சுற்றில் ஒவ்வொரு குழுவிலும் உள்ள அணிகள் தங்களுக்கிடையில் தலா ஒருமுறை மோதவுள்ளன. அதில் புள்ளி அடிப்படையில் முதல் நான்கு இடங்களையும் பிடிக்கின்ற அணிகள் காலிறுதிக்குத் தெரிவாகவுள்ளன. அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா ஆகிய அணிகளுக்கு இம்முறை கிண்ணம் வெல்லும் வாய்ப்பு அதிகம் காணப்படுகின்றபோதிலும் இங்கிலாந்து, இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகள் கடுமையான போட்டியை வெளிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



இப்பத்திரிகை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள [illegible] அச்சகத்தில் [illegible] (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் பெப்ரவரி 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்


அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 மாசி 07 வியாழக்கிழமை (19.02.2015) பக்கங்கள் IV ஓசை – 142

# மத்திய அமைச்சர்களுடன் பங்கேற்க மாட்டோம்



## முறுகலை உருவாக்கும் வடக்கு முதல்வர்

மத்திய அமைச்சர்கள் பங்கேற்கும் 'சேஞ்ச்' அமைப்பின் நிகழ்ச்சியில் மாகாண அமைச்சர்கள் பங்கேற்கமாட்டார்கள் என வடமாகாண முதலமைச்சர் க. வி.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

ஆளும் அரசாங்கத்துடன் கூட்டமைப்பு இணைந்து செயற்படுவதில்லை. அமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டங்களில் கூட்டமைப்பு உறுப்பினர்கள் பங்கேற்பதில்லை. மைத்திரி அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் மீண்டும் வேதாளம் முருங்கையில் ஏறியது போன்று அரசுக்கு எதிராக செயற்படுவதாகக் காட்டிக் கொள்வதற்காக இந்த அறிக்கையை வடக்கு முதலமைச்சர் வெளியிட்டிருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறும் நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர்களும், மாகாண அமைச்சர்களும் பங்கேற்பதாக 'சேஞ்ச்' என்ற நிறுவனம் வெளியிட்டிருக்கும் அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், இந்நிகழ்ச்சியில் வடக்கு மாகாண அமைச்சர்கள் பங்கேற்கமாட்டார்கள் என முதல்வர் க.வி.விக்னேஸ்வரன் சேஞ்ச் அமைப்பின் பொதுச் செயலாளர் ஜியாஉல் ஹசன் ரவூப் என்பவருக்கு கடிதமூலம் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி சேஞ்ச் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்திருக்கும் நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர்களான சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, சுற்றுலாத்துறை அமைச்சர் நவீன் திசாநாயக்க, மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, மீன்பிடி அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோரும் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன், விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

iv ஆம் பக்கம் பார்க்க

## உள்நாட்டு விசாரணை பொறிமுறையை மதிப்பீடு செய்யவுள்ளது ஐ.நா.



(கொழும்பு)

இலங்கையில் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைமை குறித்து மதிப்பீடு செய்யப்பட உள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் பேச்சாளர் பர்ஹான் ஹக், ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் நடவடிக்கைகளுடன் இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக இணைந்து

iv ஆம் பக்கம் பார்க்க

## விழிப்புடன் அமெரிக்கா

(கொழும்பு)

இலங்கை மற்றும் இந்திய நாடுகளுக்கு இடையில் செய்து கொள்ளப்பட்ட அணு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை ஐக்கிய அமெரிக்கா வரவேற்றுள்ளது.

சர்வதேச அணு சக்தி முகமை (IAEA) விதிகளுக்கு அமைய பாதுகாப்பாகவும், ஏனைய சர்வதேச வரம்புகளுக்கு உட்பட்டும் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது என அமெரிக்க இராஜாங்க திணைக்களப் பேச்சாளர் ஜென்ப்சக்கி தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட குழுவினர் இந்தியாவுடன் அணுசக்தி உள்ளிட்ட நான்கு அம்ச உடன்படிக்கைகளில் கைச்சாத் திட்டமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய றோலர்களை அரசு கட்டுப்படுத்த வேண்டும்

### இல்லையேல் போராட்டம் வெடிக்கும் முல்லை மீனவர்கள் போர்க்கொடி

இந்திய றோலர்களின் வருகையினை புதிய அரசு கட்டுப்படுத்தாவிட்டால் முல்லைத்தீவில் பெரும் போராட்டத்தில் கடற்றொழிலாளர்கள் ஈடுபடுவார்கள் என முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியராசா தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது, முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய இழுவைப்படகுகளின் தொல்லை கூடுதலாகவுள்ளது. குறிப்பாக ஜனாதிபதி இந்தியாவுக்குச் சென்றாரோ அன்றிலிருந்து இந்திய றோலர்களின் வருகை அதிகரித்துள்ளது. முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களை பொறுத்தவரை பெரும் அதிர்ச்சியடைந்திருக்கின்றார்கள்.

ஏனெனில் புதிய அரசை நம்பினார்கள். கடந்த அரசைவிட மோசமான நிலை உருவாகிவிடும் என்ற அச்சம் உருவாகியுள்ளது.

சில படகுகளுக்கு நாள்தோறும் 300 கிலோ தொடக்கம் 400 கிலோவரை கிடைத்துவரும் நிலையில் இந்திய றோலர்களின் வருகையினால் பெரும் நெருக்கடியினை உருவாக்கியுள்ளது. கடந்த முதலாம் திகதி இரவு கூட 75இற்கும் மேற்பட்ட இழுவைப்படகுகள் அத்துமீறி தொழிலில் ஈடுபட்டுள்ளன. புதிய அரசைக் குறைகூறுவதற்கு காரணமிருக்கிறது. கடற்படை இந்திய இழுவைப்படகுகளுக்கு ஆதரவு வழங்குகின்றன. இந்திய றோல

iv ஆம் பக்கம் பார்க்க

## பற்குணராஜா காலமானார்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி அவர்களின் கணவர் பற்குணராஜா நேற்று மாலை காலமானார்.

நீண்ட நாட்களாக சுகயீனமுற்றிருந்த நிலையில் நல்லூர் முருகன் ஆலய பின் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் காலமானார்.

இவரது இறுதிக் கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும் என குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

## கல்லுண்டாயில் கழிவுகளைக் கொட்ட வரையறைகளுடன் அனுமதி

யாழ்ப்பாணம், காக்கைதீவு, கல்லுண்டாய்ப் பகுதியில் கழிவுகளைக் கொட்டுவதற்கு வடக்கு மாகாண சுற்றுச்சூழல் அமைச்சு சில வரையறைகளை விதித்துள்ளது. யாழ். மாநகர சபையினால் குறித்த இடத்தில் கொட்டப்பட்டு வரும் கழிவுகளால் தமக்கு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன என்று தெரிவித்து அப்பகுதி மக்கள் போராட்டம் நடத்தியிருந்தனர்.

இந்த நிலையில் வடக்கு மாகாண சுற்றுச்சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். நேற்று முற்பகல் வடக்கு மாகாண சுற்றுச்சூழல் அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்த

iv ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஊழியர் சங்க உறுப்பினர்களால் நேற்றுப் பிற்பகல் கிழக்கு பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளைச் சிலர் சீர்குலைக்க முற்படுவதாக தெரிவித்து பல்கலைக் கழகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் ஊழியர் சங்கத்தினைச் சேர்ந்த அனைத்து ஊழியர்களும் பங்குகொண்டனர்.

அண்மைக் காலமாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளைச் சிலர் தனிப்பட்ட

iv ஆம் பக்கம் பார்க்க

## எலிக்காய்ச்சலால் இரு யுவதிகள் மரணம்

எலிக்காய்ச்சல் காரணமாக கம்பஹா, வீரகுல பிரதேசத்தில் இரு யுவதிகள் உயிரிழந்துள்ளனர்.

பரிசோதனைகளின் போது இவர்கள் எலிக்காய்ச்சல் காரணமாகவே உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளதாக தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் அனில் ஜாசிங்ஹ தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்கள் 23 மற்றும் 16 வயதுடைய யுவதிகள் என தெரியவந்துள்ளதோடு, மேலும் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் வீரகுல பிரதேசத்தைச் சேர்ந்த 13 பேர் தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வருடத்தில் இதுவரை காலம் வரை எலிக்காய்ச்சல் காரணமாக 543 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்தோடு எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகளவில் அநுராதபுரம் மாவட்டத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிரந்தர நியமனம் இல்லையேல் போராட்டம் மேலும் தொடரும்

## - சுகாதாரப் பணியாளர்கள் தெரிவிப்பு -




(யாழ்ப்பாணம்)

யாழ். சமூக சுகாதார பணியாளர்கள் தமக்கு நிரந்தர நியமனத்தை உடனடியாக வழங்கக் கோரி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்றுக் காலை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு முனனால் மேற்கொண்டனர்.

1998 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை சுகாதாரத் தொண்டர்களாக பணியாற்றிய பின்னர் 2012 ஆம் ஆண்டிற்கு பின்னர் சமூக சுகாதாரப் பணியாளர்களாக 232 பேர் 6000 ரூபா சம்பளத்துடன் பணியாற்றி வந்தனர்.

இந்த நிலையில் எமக்கான நிரந்தர நியமனம் இன்னமும் வழங்கப்படவில்லை.

யாழ். போதனா வைத்திய சாலை சுகாதாரத் தொண்டர்கள் 127 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டபோதும், பத்து வருடங்களுக்கு மேல் பணியாற்றும் எங்களுக்கு ஏன் இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என்று சுகாதாரப் பணியாளர்கள் தமது ஆதங்கங்களை வெளிப்படுத்தினர்.

நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று கூறுகிறார்களே தவிர உறுதியான முடிவு இன்னமும் எட்டப்படவில்லை.

உங்களது பெயர்ப் பட்டியல் அனுப்பியிருக்கிறோம் நிரந்தர நியமனத்திற்குள் உங்களைத் தான் உள்வாங்குவோம். ஆகவே யாருடைய பேச்சுக்ளையும் கேட்டு போராட்டங்களில் ஈடுபடாதீர்கள் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, சுகாதாரத் தொண்டர்கள் எமக்கு நிரந்தர நியமனத்தை வழங்குவீர்கள் என உறுதியாக எழுத்து மூலத்தில் தந்தால் மட்டுமே இந்தப் போராட்டத்தை கைவிடுவோம். இல்லையேல் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபடுவோம் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (25)

# 48 நாட்கள் மண்டலாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)


பருத்தித்துறை மாயக்கை அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபஷ துவிதள சுந்தர விமான மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக இடம்பெற்று 48 நாட்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறுகின்றது.

இவ்ஆலய திருப்பணி வேலைகள் 50 இலட்சம் ரூபா செலவில் அழகுற பூர்த்தியடைந்துள்ளன.

வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய பிரதம குரு சக்தி உபாசகர் சாதக இளவரசு சிவஸ்ரீ சுந்தர ஸ்ரீரங்கநாதக் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து மகா கும்பாபிஷேகத்தை நடத்திவைத்தார்.

சர்வபோதகாசிரியராக கிரியா சிரோன்மணி வேதாகமபூஷணம் சிவஸ்ரீ சிதம்பர மகேந்திரநாதக் குருக்களும் (ஆலய பிரதம குரு) சர்வ சாதகாசிரியர்களாக சோதிட விற்பன்னர் சில்லாலை ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ எஸ்.நடராஜக் குருக்களும், சிவஸ்ரீ ரி.ஜெயச்சந்திரக் குருக்கள் (அச்சுவேலி) ஆகியோர் பணியாற்றினர்.

ஆசியுரைகளை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும், இதிகாச விற்பன்னர் விஸ்வ பிரம்மஸ்ரீ எஸ்.சசாங்கன் குருக்களும் (புதுக்குடியிருப்பு) வழங்கினர். மகா கும்பாபிஷேகத்தை அடுத்து 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகின்றது. (01)



ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரினின் நிதி ஒதுக்கீட்டில் துறையூர் கலாமன்றத்திற்கு வழங்கப்பட்ட இசைக்கருவிகளினை வேலணை பிரதேச தவிசாளர் சின்னனையா சிவராசா கலாமன்ற நிர்வாகத்தினரிடம் கையளிப்பதனைக் காணலாம். (21)

# மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வட இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப. 2.00 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ரீ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இம்மெய்வன்மைப் போட்டியில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் பிரதம விருந்தினராகவும், வடமராட்சி வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் ஐ.செல்வராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (01)

* * * * *

(அச்சுவேலி)

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய இடைநிலைப் பிரிவின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று மதியம் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் திரு.ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.சற்குணராஜா, கௌரவ விருந்தினராக பாடசாலையின் நலன்விரும்பி மு.பத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (03)

# திருவுருவச் சிலை திறப்பு விழா

(கைதடி)

கைதடி நவபுரத்தில் சமூக சேவையாளரும் பிரபல கட்டடக் கலைஞருமாகிய அமரர் சி.இரத்தினத்தின் திருவுருவச்சிலைத் திறப்பு விழா எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கரன் தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச. சிறிதரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கட்டடக் கலைஞர் கா.வைரவநாதன், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வட மாகாண சபையின் உறுப்பினர்களான வே. சிவயோகன், அ.பரம்சோதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (90)


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 335
திகதி - 2015.02.17
வர்ணம் - மஞ்சள்

வெற்றி இலக்கங்கள் | ஆங்கில எழுத்து

22 25 53 64 S

பரிசுத் தொகை ரூபா. 23,280,940/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 09 | 450,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 194 | 194,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 337 | 337,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 8817 | 529,020/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4493 | 179,720/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 115567 | 2,311,340/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 16737 | 334,740/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 23,280,940/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,335,820/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 23,506,540/-

2015.02.20ம் திகதி வெள்ளிகிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.

தொ.பே: 011 2333546/47

web : www.dlb.lk

(C/3818)


# DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | வியாழக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | கொஞ்சம் கலாட்டா |
| Am 09.58 | காலை செய்திகள் |
| Am 10.00 | மக்கள் முகம் |
| Am 10.30 | சிரிக்க சிரிக்க |
| Am 11.30 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | அதிர்வுகள் |
| PM 12.30 | Hello DD |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.20 | பாடல்கள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவை அரசியல் சார்பற்று இயங்க வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு



பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவை எந்த அரசியல் சக்திகளுக்கும் உரிய அமைப்பல்ல அது மக்களின் அமைப்பு. பாதிக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டை மட்டும் நோக்காக கொண்ட அமைப்பு அதை அரசியல் நோக்கில் எவரும் அணுக முடியாது என நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவையின் நிர்வாகத்தினரைச்சந்தித்து கலந்துரையாடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவையினை ஒரு சட்டரீதியான அமைப்பாக பதிவு செய்து இயக்குவதில் நாம் அதிக கரிசனையுடன் செயற்பட்டோம் அத்தோடு பாதிப்புக்களை எதிர்கொண்ட மக்களின் மேம்பாட்டை முதன்மைப்படுத்தி செயற்பட்டு வருகின்ற அமைப்பு என்றவகையில் அது எந்தவித அரசியல் சார்பும் அற்ற ரீதியில் இயங்கவேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதை நாம் அந்த அமைப்பின் பிரதிநிதிகளுக்கு வலியுறுத்தி வந்திருக்கின்றோம் அதுமட்டுமன்றி நாம் அந்த அமைப்பின் மேம்பாட்டுக்கு பல அடிப்படை உதவிகளை வழங்கியிருந்த போதும் எந்த ஒரு கட்டத்திலும் அந்த அமைப்பை எமது அரசியல் செயற்பாட்டுக்காக பயன்படுத்தியதில்லை. ஏனெனில் புலம் பெயர் வாழ் உறவுகளின் பங்களிப்பை முழுமையாக நம்பி இயங்கும் இந்த அமைப்பு அரசியல் முலாம் பூசப்பட்டால் அது பல நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதனை நாம் நன்கு உணர்ந்திருந்தோம்.

அதுமட்டுமன்றி பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவைக்கு உதவிவரும் லண்டன் பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி அமைப்பினரும் என்னுடன் லண்டனில் வைத்து கலந்துரையாடியிருந்தனர் அந்தக் கலந்துரையாடலில் பல்வேறு அரசியல் கொள்கைகள் கொண்டவர்களும் அங்கம் வகித்திருந்தனர். அந்த வகையில் அவர்களுடனான கலந்துரையாடலின்போதும் பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவையை எந்த சந்தர்ப்பத்திலும் அரசியல் நோக்குகளின் அடிப்படையில் செயற்படுவதை நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் மாறாக நாங்கள் மக்கள் பிரதிநிதிகள் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் அபிவிருத்தி செயற்பாட்டுக்கு துணை நிற்பவர்கள் என்ற ரீதியில் குறித்த அமைப்பின் மேம்பாட்டுக்கு உதவ முடியும் என்பதை சுட்டிக் காட்டியிருந்தேன்.

இதுமட்டுமன்றி மக்கள் சேவையில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருபவர்கள் என்ற வகையில் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையானது மக்களுக்கு எவ்வகையான சேவைகளை வழங்கவேண்டும் என்பதை சுட்டிக்காட்டிவந்திருக்கின்றோம் அதிலும் சிறுவர்களுக்கான சத்துணவுத்திட்டம் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை நாம் வலியுறுத்தி இருக்கின்றோம். இவ்வாறான சத்துணவுத்திட்டங்களை ஏனைய பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்துவதற்கும் நாம் பல அமைப்புக்களினூடாக முயற்சிகளை மேற்கொண்டு வந்திருக்கின்றோம்.

இவ் அமைப்பு அரசியல்சார்புத் தன்மையற்ற அமைப்பாக இயங்கினால் புலம்பெயர் உறவுகள் மட்டுமன்றி அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளையும் பெற்று மேலும்பல உதவித்திட்டங்களை மேற்கொள்ள முடியும் என்பதை நாம் நிர்வாகத்தினருக்கு தெளிவுபடுத்தியிருந்தோம். அதனடிப்படையில் இவ்வமைப்பு இன்று வரை அரசியல் நோக்கங்களுக்கு இடமளிக்காது இயங்கி வந்ததனால் யு.என்.டி.பி. அமைப்புக்கூட பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவைக்கு உதவிகளை வழங்கியிருக்கின்றது என மேலும் தெரிவித்தார்.

# பற்குணராஜாவுக்கு அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

முன்னாள் யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரியின் கணவர் பற்குணராஜா நேற்று மாலை இயற்கை மரணமடைந்துள்ளார்.

நல்லூரில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்ற ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்டஒருங்கிணைப்பாளரும், முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (வி.கே. ஜெகன்), வலி.மேற்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் ஜீவன் ஆகியோர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியதுடன், பற்குணராஜா குடும்பத்தினருடன் தமது துயரைப் பகிர்ந்துகொண்டனர்.

# வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது பஸ்



நெடுங்கேணி, புளியங்குளம் வீதியில், நயினாமடுப் பகுதியில் பஸ் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் பஸ்ஸில் பயணித்தவர்கள் சிலருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டன. வவுனியாவிலிருந்து முல்லைத்தீவுக்கு நேற்றுக் காலை பயணித்த பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

பஸ்ஸின் முன்பக்கச் சக்கரங்கள் இரண்டும் கழன்று வேறாகியுள்ளன.

மேலதிக விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சர்வதேச மகளிர் தினம் அநுராதபுரத்தில் நடத்த ஏற்பாடு

சர்வதேச மகளிர் தின தேசிய விழா எதிர்வரும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளதாக மகளிர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் தலைமையின் கீழ் நடைபெறும் இந்த விழாவில் 600 இற்கும் மேற்பட்ட மகளிர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சர்வதேச மகளிர் தேசிய விழா சம்பந்தமான தெளிவூட்டல் நிகழ்வொன்று கடந்த 6 ஆம் திகதி அநுராதபுரம் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் திருமதி சுதர்மா கருணாரத்தினவால் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வு தொடர்பாக மகளிர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார தெரிவிக்கையில்,

சுமார் 13 ஆண்டுகளின் பின் சர்வதேச மகளிர் தினத்தையொட்டிய தேசிய விழா கொழும்புக்கு வெளியே நிகழ்வது சிறப்பம்சமாகும்.

மேற்படி நிகழ்வினை நடத்துவதற்கு அரசு பூரண ஒத்துழைப்பை வழங்கியதுடன் தேசிய நிகழ்வு எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் அநுராதபுரம் மாநகர பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது விழாவுடன் தொடர்புடைய கண்காட்சி ஒன்றும் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியின் நிமித்தம் 100 கூடாரங்கள் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஏ-௯ வீதியில் விபத்து மூவர் படுகாயம்

(மீசாலை)

மீசாலை ஐயா கடைச் சந்திப் பகுதியில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இரு சில்லு உழவு இயந்திரம் - ஹையேர்ஸ் வாகன விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இரு சில்லு உழவு இயந்திரத்தில் பயணித்த பாலாவியோடை, உடுவில் தெற்கைச் சேர்ந்த மகாலிங்கம் விநாயகமூர்த்தி (வயது-34), அதேயிடத்தைச் சேர்ந்த வரதராசா சாந்தகுமார் (வயது-45) ஆகியோர் படுகாயமடைந்ததுடன், ஹையேர்ஸ் வாகனத்தைச் செலுத்தி வந்த பவலேந்திரம் கஜதீபன் (வயது-34) என்பவரும் சிறு காயங்களுடனும் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.



மேலும் உடுவில் பகுதியிலிருந்து பொச்சுமட்டை ஏற்றுவதற்காக கொடிகாமம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த இரு சில்லு உழவு இயந்திரத்தை, சாவகச்சேரியிலிருந்து கொடிகாமம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஹையேர்ஸ் வாகனம் முந்திச்செல்ல முற்பட்ட வேளையில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(02)

# சகோதரர்கள் படுகாயம்

முழங்காவிலில் நேற்றுக் காலை மான்கள் வீதியில் குறுக்காக பாய்ந்ததால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு சகோதரர்கள் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஈச்சமோட்டை கடற்கரை வீதியைச் சேர்ந்த ரி.செந்தா (வயது-25), ரி.கஜன் (வயது-18) ஆகிய இருவருமே இவ்வாறு படுகாயமடைந்தனர்.

# 105 ஓட்டங்களால் பங்களாதேஷ் வெற்றி

அவுஸ்ரேலியாவின் கன்பரா மைதானத்தில் நேற்று இடம்பெற்ற பங்களாதேஷ் - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையேயான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் குழு 'ஏ' இற்கான ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி 105 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதையடுத்து களமிறங்கிய அந்த அணி 50 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றது. ரஹீம் 56 பந்துகளில் ஒரு சிக்ஸர், 6 பவுண்டரிகள் அடங்கலாக 71 ஓட்டங்களைப் பெற்றார். 267 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஆப்கான் அணி 42.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 162 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

மொஹமட் நபி 44 ஓட்டங்களைப் பெற்றார். மொர்ராஷா 9 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக ரஹீம் தெரிவானார்.

# ஆசிரியர் இடமாற்ற விவகாரம் ஆளுநரிடம் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னி மற்றும் தீவுப்பகுதியில் 5 வருடங்கள் பணியாற்றி சேவைக்காலத்தை நிறைவு செய்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் தாம் விரும்பும் வலயங்களுக்கு மார்ச் மாதத்துக்குள் இடமாற்றம் செய்ய வேண்டும் என வடமாகாண ஆளுநர் எச்.என்.ஜி.எஸ்.பளிஹக்காரவிடம் நேற்று கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் 5 ஆம் திகதியிடப்பட்ட வருடாந்த இடமாற்ற சபையின் விண்ணப்பத்துக்கு அமைவாக தகுதியுடையோர் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் இவர்களுக்கான இடமாற்றம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இடமாற்றம் வழங்குமாறு கோரி குறித்த ஆசிரியர்கள் அதிகாரிகளுக்கு கடந்த 13 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கியிருந்தும் அந்த திகதி கடந்த நிலையில் கடந்த 16 ஆம் திகதி கல்வியமைச்சின் செயலகத்தின் முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அன்றைய தினம் கல்வி அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை முன்வைத்து ஆசிரியர்கள் பேசியபோது எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி இடமாற்றக் கடிதங்கள் கிடைக்கும் எனவும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி கடமையாற்றக்கூடியதாக இருக்கும் எனவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்திருந்தார்.

எனினும் ஏப்ரல் மாதம் பொதுத் தேர்தலை நடாத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ள நிலையில் தமக்கான இடமாற்றத்தை தடுக்கும் நோக்கிலேயே அதிகாரிகள் செயற்பட்டு வருவதாகவும் பொதுத்தேர்தலுக்கு முன்பாக இடமாற்றத்தை பெற்றுத்தருமாறும் ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் யோசப் ஸ்டாலின் மற்றும் ஆசிரியர்கள் நேற்று ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநரை சந்தித்து பேசினர். இதன்போது ஆளுநர் சாதகமான பதிலைத் தந்துள்ளதாக யோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

# குமார் குணரத்தினத்தை நாடு கடத்த நீதிமன்று அனுமதி

முற்போக்கு சோசலிசக் கட்சியின் அரசியல் குழுத்தலைவர் குமார் குணரத்தினத்தை நாடு கடத்துவதற்கு உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

குமார் குணரத்தினத்தை நாடு கடத்துவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தை இரத்துச் செய்யுமாறு கோரி, அந்தக் கட்சி தாக்கல் செய்த மனுவொன்றை தள்ளுப்படி செய்த தலைமை நீதிபதி உட்பட நீதிபதிகளின் குழு, இந்த அனுமதியை வழங்கியதாக மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் நுவன் போபகே தெரிவித்தார்.

நேற்று அந்த மனு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது அங்கு தமது தரப்பு வாதத்தை முன்வைத்த அரச தரப்பு வழக்கறிஞர், குமார் குணரத்தினம் நோயெல் முதலிகே என்ற பெயரில் அவுஸ்திரேலியாவில் குடியுரிமை பெற்றுள்ள காரணத்தினால் அவரது இலங்கை குடியுரிமை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

தனிப்பட்ட பயணத்துக்காக எனக் காரணம் கூறி, விசா பெற்று, கடந்த டிசம்பர் மாதம் இலங்கை வந்த அவர் விசா விதிமுறைகளை மீறி, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு பின்பு அவர் சட்ட விரோதமான முறையில் இலங்கையில் தங்கியிருக்கின்ற காரணத்தினால் அவரை நாடு கடத்துவதற்கு குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளுக்கு சட்ட ரீதியான அதிகாரங்கள் இருப்பதாகவும் அரச தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார்.

அரச தரப்பின் வாதங்களை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் மனுவை தள்ளுப்படி செய்வதற்கு தீர்மானித்தனர்.

# தோழர் பற்குணராஜா அவர்களுக்கு தோழர்களின் இதய அஞ்சலிகள்



தோழர் பற்குணராஜா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரம் அடைகின்றோம்.

எமது முன்னாள் யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி அவர்களின் வாழ்க்கைத் துணைவராகவும் அரசியல் பயணத்தில் வழித்துணையாகவும் வாழ்ந்த தோழர் பற்குணராஜா அவர்களின் இழப்பு அவரது அன்பு மனைவிக்கும் ஆசைப்பிள்ளைகளுக்கும் உறவுகளுக்கும் போலவே கட்சிக்கும் தோழர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அந்த துயரத்தை தோழர்களாகிய நாங்களும் சுமந்து நிற்கின்றோம்.

தோழர் பற்குணராஜா அவர்களின் இறுதிக்கிரியை தொடர்பான செய்திகளை நமது உறவுகளுக்கும் ஆதரவாளர்களுக்கும் விரைவில் அறியத்தருவோம்.

நீண்ட நாட்களாக சுகயீனமுற்றிருந்த நிலையில் நேற்று மாலை நல்லூர் முருகன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இறைவனடி எய்தினார் என்ற செய்தி கேட்டு துயரம் சுமந்து நிற்கும் அனைவரோடும் தோழர்களும் துயர் பகிர்கின்றோம்.

தோழர்கள்,

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி

(இ)

## கிழக்கு...

சுயலாபங்களுக்காகத் தவறான முறையில் பிரசாரம் செய்து வருவதாகவும் ஆர்ப் பாட்டத்தில் கலந்துகொண்டோர் தெரிவித்தனர்.

தனிப்பட்ட ஒரு சிலரின் சுயலாபத்திற்காக பல்கலைக்கழகத்தின் எதிர்காலத்தினை பாழடிக்காதே, வீண் விவாதம் தவிர், பல்கலைக்கழக அபிவிருத்தியில் இணை, உலகத்தரம் நோக்கிய கல்விப் பயணத்திற்கு தடையாக இருக்காதே போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் ஏந்தியிருந்தனர்.

## உள்நாட்டு....

செயற்படவேண்டுமென பான் கீ மூன் விரும்புகின்றார்.

புதிய அரசாங்கம் உள்ளக விசாரணைப் பொறிமுறைமை ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இது தொடர்பில் மிக உன்னிப்பாக கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை, பான் கீ மூன் சந்தித்த போது குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.

உள்ளக விசாரணைப் பொறிமுறைமைக்கு பான் கீ மூன் ஒத்துழைப்பு வழங்குவார் என அவர் தெரிவித்துள்ளார்.

## கல்லுண்டாயில்...

அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இதன்படி, கல்லுண்டாய் பகுதியில் இன்றிலிருந்து மருத்துவமனைக் கழிவுகளைக் கொட்டுவது நிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கு மாநகரசபை ஆணையாளரும் சம்மதம் தெரிவித்துள்ளார் என்றும், மலக்கழிவுகள் எதிர்வரும் ஒரு வாரம் மாத்திரம் குறித்த பகுதியில் கொட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் பின்னர் மாநகர சபை அதற்கான இடத்தைத் தேர்வு செய்து கொள்ள வேண்டும் எனவும், அத்துடன் இராணுவத்தினர் குறித்த இடத்தில் மலக்கழிவுகளைக் கொட்டுவதை நிறுத்துவதுடன், இதுகுறித்த அறிவிப்பை சம்பந்தப்பட்ட தரப்பு ஊடாக அவர்களுக்கு அறிவிப்பதென்றும், மலக்கழிவு மற்றும் வைத்தியசாலைக் கழிவு அல்லாத கழிவுப் பொருள்கள் எதிர்வரும் 6 மாத காலங்களுக்கு கல்லுண்டாயில் கொட்டுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (25)

# படகு மூலம் வெளிநாடு செல்ல முயன்ற 35 வடபகுதியினர் கைது

(கொழும்பு)

மாத்தறை வெலிகம கடற்கரைப் பகுதியில் இருந்து வெளிநாடு ஒன்றுக்கு மீன்பிடிப் படகு மூலம் சட்டவிரோதமாகச் செல்ல முற்பட்ட 35 பேரை நேற்றுக் காலை பொலிஸார் கைதுசெய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வடபகுதியைச் சேர்ந்த சுமார் 30 தொடக்கம் 40 வயது உடையவர்களே இவ்வாறு தப்பிச் செல்லமுயன்றனர் என்றும், பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அவர்கள் கைதாகினர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது யாழ்ப்பாணம், சாவகச்சேரி, முல்லைத்தீவு, மாங்குளம், ஒட்டுசுட்டான், மல்லாவி, ஒலுமடு, வவுனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது எனவும் இவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## இந்திய....

ர்களுக்கு இலங்கை கடற்படை பாதுகாப்பு வழங்குகின்றது. எமது படகுகளைக் கண்காணிக்கும் கடற்படையினர் இந்திய றோலர்கள் தொடர்பாக அலட்டிக்கொள்வதில்லை. சர்வதேசக் கடலூடாகவே முல்லைத்தீவு கடற்பரப்பிற்குள் இந்திய றோலர்கள் வருகை தருகின்றன. கடற்படையின் பாதுகாப்பு வியூகங்களை தாண்டி உள்வந்து மீன்பிடியில் ஈடுபடுகின்றன.

கடற் படையினரைத் தாண்டிவந்து இந்திய றோலர்கள் மீன்பிடியில் ஈடுபடுகின்றதென்றால், யாரிடம் நாம் முறையிடுவது. வேலியே பயிரை மேய்கின்ற நிலைமைதான் காணப்படுகின்றது. இந்நிலைமை மாறவேண்டும். கடந்த 10 ஆம் திகதி மாவட்டச் செயலக கட்டடத் திறப்பு விழாவுக்கு வருகை தந்திருந்த கடற்றொழில் அமைச்சருக்கு மனுவொன்று கையளித்திருந்தோம்.

இந்திய றோலர்கள் நெருக்கடி உட்பட பல்வேறு விடயங்களைக் கலந்துரை யாடுவதற்கு நேரம் ஒதுக்கித்தருமாறு அம்மனுவில் குறிப்பிட்டிருந்தோம். இதுவரை எமது மனுவிற்கான பதில் கிடைக்கவில்லை. இந்திய றோலர்களின் நெருக்கடி தொடருமானால் முல்லைத்தீவில் பெரும் ஆர்ப்பாட்டமொன்றினை நடாத்தவுள்ளோம். உள்ளூரில் தடைசெய்யப்பட்ட தொழில் களுக்கு முன்னர் இந்திய றோலர்களின் வருகையினை உடனடியாக தடுத்து நிறுத்தி கடற்றொழிலாளர்கள் தங்களுடைய தொழிலைச் செய்து வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான உறுதிப்பாட்டை புதிய அரசு ஏற்படுத்தித் தரவேண்டுமெனவும் தெரிவித்தார்.

## மத்திய....

சேஞ்ச் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்ச்சியின் காலை அமர்வு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்திலும், மாலை அமர்வு மத்திய, மாகாண அமைச்சர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான கலந்துரையாடலாக அமைச்சு ரீதியாக வெவ்வேறு இடங்களிலும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இவ்வாறு அரசியல் வாதிகள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்தமைக்குக் கல்விச் சமூகம் எதிர்ப்புத் தெரிவித்துவரும் நிலையில் வடமாகாண அமைச்சர்கள் தரப்பிலும் தங்களுடன் இவ்வாறான ஒரு நிகழ்ச்சி தொடர்பாக எவ்விதமான கலந்தாய்வும் இல்லாமலேயே அழைப்பிதழில் பெயர்கள் போடப்பட்டிருப்பதாகவும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது தொடர்பாக வடக்கு முதல்வர் சேஞ்ச் அமைப்பின் பொதுச் செயலாளருக்குக் கடிதம் ஒன்றை நேற்று முன்தினம் அனுப்பிவைத்துள்ளார். அக்கடிதத்தில், இக்கூட்டத்துக்கான திகதி எங்கள் அமைச்சர்களின் ஒப்புதலோ கலந்துரையாடலோ இல்லாமல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதனைக் காணுகிறேன். இக்கூட்டத்தில் அரசியல் உள்நோக்கங்கள் இருப்பதாகத் தோன்றுகிறது. மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கத்தின் அமைச்சர்களும் அல்லது பொருத்தமான அலுவலர்களும் ஆரம்பத்திலேயே இதன் நோக்கம் மற்றும் இது எந்தவிதத்தில் வடமாகாண மக்களுக்கு நன்மை பயக்கும் என்பதனைக் கலந்துரையாடாமல் என்னையும் எனது அமைச்சர்களையும் கூட்டத்துக்கு அழைப்பது பொருத்தமற்றது.

இது சம்பந்தமாக நீங்கள் மத்திய அரசாங்க அமைச்சர்களுக்கு என்ன கருத்தைக் கூறியிருக்கின்றீர்கள் என்பது தெரியவில்லை. எங்கள் அமைச்சர்கள் எவரும் இக்கூட்டத்தில் பங்குபற்ற மாட்டார்கள் என்பதைக் கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கடிதத்தின் பிரதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கும் மத்திய அமைச்சர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# மரண அறிவித்தல்

## திரு. குணரத்தினம் பற்குணராஜா



முன்னாள் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அவர்களின் கணவர் திரு.குணரத்தினம் பற்குணராஜா நேற்று (18.02.2015) காலமானார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**365,**
**கோவில் வீதி,**
**நல்லூர்.** (இ)

**தகவல்:**
**திருமதி. யோ.பற்குணராஜா**
**(முன்னாள் யாழ். மாநகர சபை முதல்வர்)**

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 பெப்ரவரி 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.